


கல்கி



KALKI 4-10-1959 30 காசு

ஹிமாலயா புக்கே டால்கம் பவுடர்





நாள் முழுதும் புதுமலர்ச்சி யுடன் விளங்க

- நறுமண— மோங்குவது
- சிக்கனமிகுந்தது
- குடும்பத்தினர் அனைவருக்கும் உகந்தது



லண்டனிலுள்ள இராஸ்பிக் சார்பாக, ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட்டினால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

HBT. 19-50 TM

கல்கி

பொருளடக்கம்

அக்டோபர் 4, 1959

"கல்கி" யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.







மலர் 19 இதழ் 10

தமிழ்த்திரு நாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — *பாரதியார்*

விகாரிஹு புரட்டாசி 18உ

பண்டாரநாயகாவின் மறைவு

நெருங்கிய தொடர்புள்ள நாட்டில் ஏற்பட்ட துயர நிகழ்ச்சி இந்திய மக்களைத் திடுக்கிடச் செய்துவிட்டதில் வியப்பில்லை. இலங்கைக்கும் இந்தியாவுக்குமுள்ள தொடர்பு இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பண்டை நெடுங்காலமாக வந்துள்ளது.

இலங்கைப் பிரதமர் ஸாலமன் பண்டார நாயகாவின் அகால மரணச் செய்தியைக் கேட்டுப் பாரதம் முழுதும் பெருந் துயரத்தில் ஆழ்ந்திருக்கிறது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்பு இருந்தபோதிலும் இலங்கை சுதந்திரம் அடைந்த பிறகு இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே அற்ப பூசல்கள் இருந்துகொண்டே வந்தன. இதுவரை நான்கு மந்திரி சபைகள் ஏற்பட்டிருக்கின்றன. முதல் மூன்று மந்திரி சபைகளும் இரு நாடுகளிடையே வேற்றுமைகளை வளர்ப்பதில்தான் மும்முரமாக இருந்தன. பண்டாரநாயகாவின் தலைமையில்தான் இலங்கை இந்தப் பூசல்களைக் குறைக்கும் எண்ணம் கொள்ளலாயிற்று.

ஸ்ரீ பண்டார நாயகா பிரதம மந்திரியானவுடன், தாம் பாரதப் பிரதமர் நேருஜியின் அயல்நாட்டுக் கொள்கையைக் கடைப்பிடிக்கப் போவதாகச் சொன்னார். நேருஜி கடைப்பிடித்து வரும் நடுநிலைமைக் கொள்கையே புதிதாக சுதந்திரம்பெற்ற ஆசிய நாடுகளுக்கு உகந்தது என்பதை வலியுறுத்தினார். அதுமட்டுமின்றி, பாரதப் பிரதமர் நேருஜியிடம் அவருக்குள்ள மதிப்பையும் மரியாதையையும் பகிரங்கமாக வெளியிட்டார். இவற்றினால் எல்லாம் பாரத மக்களின் அன்புக்கு இலங்கைப் பிரதமர் ஸ்ரீ பண்டார நாயகா பாத்திரரானார்.



திரு பண்டார நாயகா

ஆனால் இலங்கை இந்தியர் விஷயத்திலும், தமிழர்கள் விஷயத்திலும், இலங்கை ஆட்சிமொழி விஷயத்திலும் ஸ்ரீ பண்டார நாயகா நடந்துகொண்ட முறை இலங்கைவாழ் தமிழர்களிடையே பெரும் கசப்பை வளர்த்தது. எனினும், இலங்கைத் தமிழர்கள் அனைவரும் ஸ்ரீ பண்டார நாயகா அவர்களிடம் கொண்டிருந்த மரியாதைக்கும் அன்புக்கும் குறைவு கிடையாது.

ஸ்ரீ பண்டாரநாயகா சிறந்த அறிவாளி. இலக்கியத்தில் மிகுந்த ஆர்வமுள்ளவர். ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் பயின்றவர். ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் நன்றாகப் பேசும் திறமை படைத்தவர். ஜனநாயகத்திலும்,

பார்லிமெண்டரி முறையிலும் நம்பிக்கையும் அனுபவமும் திறமையும் வாய்ந்தவர் என்ற பெயர் எடுத்தவர். அதுமட்டுமின்றி, எதிலும் தீவிரக் கொள்கையைக் கடைப்பிடிக்காமல், கூடியவரையில் பிரத்தியட்ச நிலைமையை உணர்ந்து செயல் புரிபவர் என்ற பெயர் எடுத்தவர். இதுவே கொலைக்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

அப்படிப்பட்டவர் பௌத்த சந்நியாசி உடை அணிந்த ஒருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற செய்தி உள்ளம் தாங்கக் கூடியதாக இல்லை.

அன்பும் அருளுமே உபதேசித்து வந்த புத்த பிரானின் மதத்தைக் கடைப்பிடிப்பதாகச் சொல்லிக் கொள்பவர்கள், இப்படிப் புத்த பகவான் போதித்த வழிக்கு முற்றிலும் மாறுபட்ட ஹிம்சை வழியைக் கடைப்பிடித்து, புத்தபிரானுக்குத் துரோகம் செய்துவிட்டார்கள். இலங்கைத் தீவு இன்று பெரும் துயரத்தில் அழுந்தியிருக்கிறது.

எந்தக் கொடிய சம்பவத்திலும், ஒரு நல்ல பலன் ஏற்படுவதற்கான நம்பிக்கை ஒளி இல்லாமற் போகாது. காந்தி மகான் ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்காக அரும்பாடு பட்டு வந்தார். அவருடைய உயர்ந்த லட்சியத்தை உணர முடியாத ஒரு ஹிந்து வெறியன், காந்தி மகானின் உயிரைப் பறித்தான். காந்தி மகானின் பூத உடல்தான் விழுந்தது. அவர் கைக்கொண்ட லட்சியம் நிறைவேறிவிட்டது. ஹிந்து-முஸ்லிம் கலவரங்கள் அடங்கி எங்கும் அமைதியும் சமாதானமும் சுமுகமான வாழ்வும் பாரத நாட்டில் ஏற்பட்டது. அம்மாதிரி இலங்கையிலும் பண்டார நாயகாவின் உயிர்த் தியாகத்திலிருந்து ஒரு நற்பயன் விளையும் என்றே எதிர்பார்க்கலாம்.

ஸ்ரீ பண்டாரநாயகாவுக்குப் பின் ஸ்ரீ தக நாயகா இலங்கைப் பிரதமராக்கப்பட்டிருக்கிறார். இவர் காலத்தில் இலங்கை இந்தியர் உறவு சுமுகமாக அமையும் என்று எதிர்பார்ப்போமாக.

டாக்டர் சுப்பராயனைப் பாராட்டுகிறோம்!

டாக்டர் சுப்பராயன் எப்பொழுதோ மந்திரியாகி யிருக்க வேண்டியவர். ஆனால் ஏதோ காரணங்களால் இதுகாறும் தள்ளிப் போட்டு வந்தார்கள். இதனால் டாக்டர் சுப்பராயன் அவர்கள் தபால் போக்குவரத்து இலாக்கா மந்திரியானது நமக்கு இப்போது மகிழ்ச்சி அளிக்கவில்லை.

இப்பொழுது சுதந்திரக் கட்சி நாட்டில் பலம் பெற்று வருகிறது. இனி ராஜாஜியின் நண்பர்கள் அவருக்கு உதவப் போய்விடலாம் என்கிற பயத்தினால் இது நேர்ந்ததாகவும் இருக்கலாம் என்று சிலர் எண்ணுகிறார்கள்.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் ஆட்சி மொழி விஷயத்தில் காங்கிரஸ் கட்சிக் கொள்கைக்கு மாறுபட்ட அபிப்பிராயத்தைத் தெரிவித்தவர். இன்னமும் தெரிவித்து வருகிறார். அப்படிப்பட்டவருக்கு, ஹிந்தி வெறியர்கள் மிதமிஞ்சியுள்ள தில்லியில், ஒரு முக்கியமான மந்திரி பதவியை அளித்திருப்பதைப் பற்றிப் பாராட்ட வேண்டியதுதான்.

அதிகாரத்தில் இருப்பவர்கள் எந்த நோக்கோடு, டாக்டர் சுப்பராயன் அவர்களுக்கு மந்திரி பதவியளித்திருந்தாலும், டாக்டர் சுப்பராயன் பதவியின் பளுவினால் தமது சிரம் தாழ்ந்துவிடவில்லை என்பதைப் பகிரங்கமாகத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்.

அவர் ஏழைமையைப் பகிர்ந்தளிக்கும் சோஷலிஸத்தை ஒத்துக் கொள்ளவில்லை. வியாபாரத்தில் சர்க்கார் இறங்குவதையும் அவர் ஒப்புக் கொள்பவரல்ல. அதனால்தான் அவருக்கு உணவு இலாக்கா தரப்படவில்லை போலும். அவர் வந்தால் சில்லறைச் சச்சரவுகளுக்கும் மனப் பூசல்களுக்கும் இடம் ஏற்படலாம் அல்லவா?

அவர் சமீபத்தில் தமிழ்நாட்டுக்கு வந்திருந்தபோது ராஜாஜி பாரத நாட்டுக்குச் செய்துள்ள சேவையையும், தமிழ்நாட்டில் காங்கிரஸை நிலைநாட்டத் தக்க தலைவர் யார் என்று நாற்பது ஆண்டுகளுக்கு முன் கஸ்தூரிரங்க அய்யங்காரைக் காந்திஜி கேட்டதற்கு ராஜாஜியைக் காண்பித்ததையும் டாக்டர் சுப்பராயன் நினைவு கூர்ந்திருக்கிறார்.

அவர் காங்கிரஸ் கட்சியிலிருந்து கொண்டு, அதிலும் முக்கியமான மந்திரி பதவிக்கு வந்தவுடனே, சுதந்திரக் கட்சியைப் பற்றிக் காங்கிரஸ் வட்டாரங்களில் கோபத்தோடும், வெறுப்போடும் பேசிக்கொண்டிருக்கும் சமயத்தில் இவ்வாறு செய்தது அவரது மதிப்பை உயர்த்தி விட்டது!



ராமாயண உபன்யாசம்

சென்னை அரண்மனைக்காரத் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ சௌந்தராம்பிகா ஸமேதகச்சபேஸ்வரர் ஆலயத்தில் பிரும்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களால் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண உபன்யாசம் 5-10-59 திங்கட்கிழமையிலிருந்து தினசரி இரவு 7-45 முதல் 10-15 வரை நடைபெறும்.

நம் முன்னோர்கள் செய்த தவப்பயனால் அக்டோபர் மாதம் இரண்டாந் தேதி பாரத நாட்டில் காந்திமகான் அவதரித்தார். அரசியலில் அன்பும் நேர்மையும் சத்தியமும் கடைப் பிடிக்கலாம் என்று பாரத மக்களுக்கு வழிகாட்டினார். ஏழைகள் வாழ்வு வளம்பெற எத்தனையோ பணிகளை மேற்கொண்டார். அந்த மகானின் வாழ்க்கையில் முக்கியமானதோர் அம்சத்தை இந்தக் காந்தி ஜெயந்தி வாரத்தில் ராஜாஜி நமக்கு நினைவு கூர்கிறார். —ஆசிரியர்

ஆன்ம சக்தி

காந்தியடிகள் எடுத்த எல்லா வெற்றி களிலும் பகவானுடைய அருளைக் கேட்டுப் பெற்று பணிசெய்து வந்தார். பகவான் இருக்கிறாரோ இல்லையோ, என்ற சந்தேகம் அவருக்கு இல்லை. ஒவ்வொரு விஷயத்திலும் பகவானை நம்பி வெற்றியும் பெற்று வந்தார். இதைத்தான் நாம் இந்த பாரதத்தில் நினைக்கத் தெரிந்துகொண்டு சக்தி பெறவேண்டும். ஆன்மசக்தி என்பது பகவானுடைய அருளைத் தவிர வேறல்ல.

சி. ராஜகோபாலாச்சாரி

என்ன சேதி?

இந்திரா காந்தியின் அனுமதிச் சீட்டு

சென்ற சனிக்கிழமை பஞ்சாப் தலைநகர் சண்டிகரில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் காங்கிரஸ் அக்கிராசனதிபதி ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள் "காங்கிரஸின் லட்சியங்களில் ஐயப்படுகிறவர்கள் காங்கிரஸ் கட்சியை விட்டு உடனே விலகலாம். அவர்கள் அப்படி வெளியேறுவதைப் பற்றி நான் ஒரு சிறிதும் வருத்தப்படமாட்டேன்; அப்படி அவர்கள் காங்கிரஸை விட்டுப் போவதைப் பற்றி சந்தோஷமே படுவேன்" என்று சொன்னார்.

ஸ்ரீமதி இந்திரா காந்தியின் பேச்சையே ஸ்ரீ நேருவும் ஆமோதித்துப் பேசினார்.

காங்கிரஸ் கட்சியின் போக்குப் பிடிக்காவிட்டாலும், காங்கிரஸை விட மனம் இல்லையே என்று தயங்கிக் கொண்டிருப்பவர்கள் இனியும் யோசிக்க வேண்டியதில்லை. இந்த விளக்கத்தைப் பல காங்கிரஸ்காரர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பாவம் அதிகாரிகள்!

மூந்த்ரா பேர ஊழலில் முக்கியமான பங்கு கொண்டவர்களெல்லாம் தப்பித்துக் கொண்டனர். நிதி இலாகா காரியதரிசி மேல் தான் எல்லாப் பொறுப்பும் பழியும் வந்து சேர்ந்தன. நிதி இலாக்கா காரியதரிசி ஸ்ரீ எச். எம். படேல் நமது ஐ. ஸி. எஸ். உத்தியோகஸ்தர்களிலே மிகச் சிறந்தவர் என்று பலருடைய பாராட்டுக்குரியவர். அவர் நிலை இவ்வாறு முடிந்ததிலிருந்து, டில்லி சர்க்கார் காரியாலயங்களில் உத்தியோகஸ்தர்கள் தாங்களாகச் சுயமுயற்சி எடுத்து எக்காரியத்தையும் செய்ய மறுக்கிறார்கள். மந்திரியினுடைய உத்தரவை எழுத்து மூலமாகப் பெற்றுத்தான் எதையும் செய்வோம் என்கிறார்களாம். மந்திரிகளோ மக்கள் சபையில்லாத நாட்களில் டில்லியிலேயே இருப்பதில்லை. சுற்றுப் பிரயாணம் செய்யத் தொடங்கி விடுகிறார்கள். ஆக வீண் கால தாமதம் ஏற்பட்டுக் கஷ்டப்படுபவர்கள் பொதுமக்கள்தான்.

காரியதரிசி ஒரு நல்ல காரியம் செய்தால் அதன் புகழ் மந்திரிக்குத்தான் போய்ச் சேரும். அப்படியே காரியதரிசி தவறு செய்து விட்டாலும் பொறுப்பை மந்திரி ஏற்பதுதான் முறை. இதுதான் ஜனநாயகப் பண்பாடு. ஆனால் நம் நாட்டிலோ மூந்த்ராவிடமிருந்து காங்கிரஸ் கட்சிக்கு நன்கொடை பெற்று, பழியைக் காரியதரிசி தலையில் சுமத்தி விட்டார்கள். மந்திரிகள் இப்படி நடந்து கொண்டால் அதிகாரிகள் தைரியமாக எப்படி நடந்து கொள்வார்கள்?

விலை உயர்வு ஏன்?

கோகலேயின் பெயரைத் தாங்கிக் கொண்டு பெங்களூரில் பல ஆண்டுகளாகச் சிறப்புடன் பணியாற்றி வரும் "பொது விவகாரக் கழகம்" இப்போது ஒரு முக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறது. தற்சமயம் பொது மக்களைப் பெரிதும் வாட்டி வரும் பிரச்னை உணவுப் பண்டங்களின் விலை ஏற்றம். இதைப் பற்றி ஒரு முகமாகப் பொது மக்களும் சர்க்காரும் கண்டனம் செய்தாலும் நிலைமையில் எவ்வித மாறுதலும் ஏற்படவில்லை. ஆகவே, விலைவாசிகள் ஏறுமுகமாக இருப்பதற்குக் காரணங்கள் என்ன, இவற்றைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் என்ன, சர்க்கார் செய்ய வேண்டிய காரியங்கள் என்ன, மக்கள் கவனிக்கவேண்டியவை என்ன முதலிய அம்சங்களைப் பற்றிச் சாதாரண மக்கள், வர்த்தகர்கள், நிர்வாக அதிகாரிகள், ஆலை முதலாளிகள், உத்தியோகஸ்தர்கள் இப்படிப் பலதரப்பட்டவர்களுடைய அபிப்பிராயங்களையும் ஆலோசனைகளையும் சேகரிக்கும் பணியை மேற்கொண்டிருக்கிறது. இக்கழகம் இதற்காக வினாத்தாள் ஒன்றைத் தயாரித்துள்ளது. இத்துறையில் ஆலோசனை கூறும் அனுபவம் வாய்ந்தவர்களும், விஷயமறிந்தவர்களும் கோகலே பொது விவகாரக் கழகம், பெங்களூர்—4 என்ற விலாசத்துக்கு எழுதி வினாத்தாளைப் பெற்றுக் கொண்டு பதிலை அக்டோபர் 10-ந் தேதிக்குள் அவர்களுக்குச் சேரும்படி அனுப்பி வைக்க வேண்டும். இவ்வாறு சேகரித்த விவரங்களைத் தக்க நிபுணர்களைக் கொண்டு பரிசீலித்து அறிக்கை வடிவில் பின்னால் வெளியிடப்படும் என்று கழகக் காரியதரிசி திரு டி. வி. குண்டப்பா தெரிவித்துக் கொள்கிறார்.

நிகழ்ச்சிச் சித்திரம் — உம்மன்



காந்தியும் கதரும்




அக்டோபர் மாதம் இரண்டினிலே - காந்தி
அவதரித் தாரென்றே போற்றுகிறோம்.
தக்கவி தத்திலே காந்திம கானுக்குச்
சகலரும் நன்றி செலுத்திடுவோம்.

காந்தி பிறந்தஇவ் வாரத்தினை - நாமும்
கதர்வார மாகக்கொண் டாடிடுவோம்.
சாந்த வடிவான காந்திமகான் - ஆன்மா
சாந்தி அடைந்திடச் செய்திடுவோம்.

கையினால் நூற்றது. நெய்ததுவாம் - இந்தக்
கதரை அணிந்திட வேண்டுமென்றே
ஐயனும் காந்தி உரைத்துவந்தார் - இதை
அனைவரும் உணர்ந்திடச் செய்துவந்தார்.

கண்ணைப் போல்கதரைக் கருதிவந்தார் - அவர்
கைராட்டையால் தினம் நூற்றுவந்தார்.
உண்ணா விரதம் இருக்கையிலும் -"அவர்
ஒருநாளும் நூற்கா திருந்ததில்லை.



சொந்தநம் நாட்டுச் சகோதரர்கள் - இங்கே
சோற்றுக் கில்லாமல் தவிக்கையிலே
அந்நிய நாட்டுத் துணிகளின் - மீதுநாம்
ஆசைகொள் ளல்மிக மோசமென்றார்.

"ஏழைக்கு நாமும் உதவுகின்றோம் - என்ற
எண்ணத்துடன் கதர் கட்டிடுவோம்.
நாளையே நாடு செழிப்படையும்" - இது
நம்மவர் காந்தியின் பொன்மொழியாம்.

எல்லோரும் சமமென்று காட்டும்உடை - என்றும்
எளிமையும் கண்யமும் தோன்றும்உடை.
நல்லவர் காந்தி அணிந்தஉடை - இதை
நாமும் அணிந்து நலம்அடைவோம்.

அழ. வள்ளியப்பா

அட்டைப்பட விளக்கம் :

ஆசார்ய ரங்கா

காந்தி மகான் பிறந்த நாளைக் கொண்டாடும் இவ்வாரத்தில் காந்தி மகானின் உத்தம பக்தர்களில் ஒருவராகிய ஆசார்ய என். ஜி. ரங்கா எம். பி. அவர்களின் உருவப் படத்தை இவ்வார இதழின் அட்டையில் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

காங்கிரஸ் கட்சியிலிருந்துகொண்டு, பட்டத்துக்கோ, பதவிக்கோ, பணத்துக்கோ அதை உபயோகப்படுத்திக் கொள்ளாத உத்தமத் தலைவர்களில் திரு ரங்கா ஒருவர். அவர்விரும்பியிருந்தால் அவருக்குப் பெரியபதவிகள் கிடைத்திருக்கும். ஆனால் அவர் பதவியைவிட இலட்சியமே பெரிது என்று கருதுவதால் அவர் எந்தப் பதவியும் ஏற்க விரும்பவில்லை.

அவர் ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலையில் படித்தவர். அந்நாட்களில் ஐ. ஸி. எஸ். பரீட்சை பாஸ் செய்து இந்திய சர்க்காரில் உத்தியோகம் பெற வேண்டும் என்று வந்த மாணவர்கள் "பாரத நாட்டில் மகாத்மா காந்தியடிகளுக்கு விரோதமாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பார்த்தார்கள். அதை எதிர்த்து, காந்தி மகானின் செல்வாக்கை எடுத்துக் கூறிப் பேசிய தீர மாணவர் ஒரே ஒருவர்தான் — அவர்தான் ரங்கா! எதிர்ப்பைக் கண்டு அஞ்சாது உண்மையை எடுத்துத் தீரமாகக் கூறும் அந்தப் பண்பு இன்றும் ரங்கா அவர்களிடம் நிலவுகிறது!"

திரு ரங்கா அவர்கள், மேல்நாடு சென்று பொருளாதார சாஸ்திரம் படித்தார். சென்னை அரசாங்கத்துக்கு ஆதிநாட்களில் பொருளாதார ஆலோசகராக இருந்தார். பச்சையப்பன் கல்லூரியில் பேராசிரியராக இருந்தார். எந்த வேலை செய்தாலும், அவர் தாம் ஒரு உழவர் என்ற உணர்ச்சியை இழந்ததில்லை. அவர் உழவர் பரம்பரையில் உதித்தவர். பிறர் கையை எதிர் நோக்காது உழுது பிறருக்கு அளித்துத் தாமும் உண்டு வாழும் உழவர் குலத்தின் பெருமிதம் அவருக்குண்டு. அதனால் உழவர்கள் நலனைக் கருதாமல் சர்க்கார் குறுக்கிட்ட போதெல்லாம் அவர் எதிர்த்து நின்றிருக்கிறார். 1951ம் ஆண்டு, காங்கிரஸை விட்டு விலகி, உழவர்கள் நலனைப் பாதுகாப்பதற்காகவே 'கிருஷிகர் லோக் பார்ட்டி' என்று ஒரு சக்தி வாய்ந்த கட்சியைத் தோற்றுவித்தார். காங்கிரஸ் அவர் கொள்கைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் விட்டுக் கொடுத்த பிறகு தமது கட்சியைக் கலைத்துக் காங்கிரஸில் ஐக்கியமானார். மீண்டும் காங்கிரஸ், நாகபுரி தீர்மானம் மூலம் உழவர்கள் வாழ்வைப் படுநரகமாக்கத் துணிந்து விட்டது என்றவுடன் திரு ரங்கா அவர்கள் இத்தவறான போக்கைத் தம்மால் இயன்ற அளவு எடுத்துக் காண்பித்தார். காங்கிரஸ் மேலிடத்தாரின் காதில் ஏறவில்லை. அவர் காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சிக் காரியதரிசிப் பதவியையும், காங்கிரஸ் கட்சியையும் விட்டு விலகினார். பாரதநாட்டு விவசாய மக்களை நாகபுரி தீர்மானத்துக்கு எதிராக விழிப்படையச் செய்யும் பணியில் ஈடுபடலானார்.

திரு ரங்கா அவர்கள் வாழ்க்கை லட்சியம் என்னவென்று புரிந்து கொண்டால், அவர் கட்சி நலனுக்காக இலட்சியத்தைப் பணயம் வைக்கும் சுயநலவாதியல்ல என்பது தெரியும். அடிக்கடி திரு ரங்கா அவர்கள் கட்சி விட்டுக் கட்சி மாறுபவர் என்று சிலர் சொல்லக் கேட்கலாம். லட்சியத்தைப் பற்றியுள்ள பற்றுதான் அதற்குக் காரணம்.

இத்தகைய சிறந்த தேசபக்தரை ராஜாஜி சுதந்திரக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்.

நாகபுரி தீர்மானத்தில் காங்கிரஸ் மேலிடத்தார் பிடிவாதமாக இருக்கவேதான் ராஜாஜி சுதந்திரக் கட்சியைத் தோற்றுவிக்கும்படியான நிலை ஏற்பட்டது. உழவர்கள் நலனுக்காகத் தமது வாழ்நாள் முழுவதையும் செலவழித்து வரும் திரு ரங்கா அவர்களைவிடத் தகுந்த தலைவர் சுதந்திரக் கட்சிக்கு யார் இருக்க முடியும்?

சமீபத்தில் ராஜாஜியுடன் ரங்கா அவர்கள் தமிழ்நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்தார். சென்றவிடமெல்லாம் ரங்கா அவர்கள் தமது பேச்சாலும், பண்பினாலும் தாம் சுதந்திரக் கட்சிக்குத் தகுந்த தலைவர் என்பதைத் தமிழ் மக்கள் உள்ளத்தில் ஊர்ஜிதமாகும்படி செய்து விட்டார்.

இதைத் தவிர அவருக்கும் தமிழ் மக்களுக்கும் மிக நெருங்கிய தொடர்பு ஒன்று உண்டு. சமீபத்தில் திருச்சி சென்றிருந்த போது, ஆசார்ய ரங்கா அவர்களும், கூட இருந்த நண்பர்களும் தாங்கள் ஸ்ரீ ரங்கநாதரைத் தரிசனம் செய்து விட்டு வரவேண்டும் என்று ராஜாஜியிடம் தெரிவித்தார்கள்.

"என் தந்தையார் ரங்கநாத பக்தர். அவர் ஒவ்வொரு ஆண்டும் வைகுண்ட ஏகாதசியன்று ஸ்ரீரங்கத்துக்குத் தவறாமல் வந்து கொண்டிருந்தார்" என்றார்.

"அதனால்தான் உங்களுக்கும் 'ரங்கா' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்" என்றார் ராஜாஜி.

"ஆமாம்" என்றார் ரங்கா.

அன்று ஸ்ரீரங்கநாதர் ஆலயத்துக்குச் சென்று தரிசனம் செய்து விட்டுத் திரும்பிய போது ஒரு பெரியார், "தங்கள் கட்சி பலம் பெறுவதாக! தங்கள் செல்வாக்கு பெருகுவதாக! நாட்டில் 'சோற்றுக்கு' வந்த இந்தப் பஞ்சத்தைப் போக்குவீர்களாக! ஸ்ரீ ரங்கநாதர் அருள் உங்களுக்குப் பரிபூரணமாக இருக்கிறது" என்றார்.

ரங்கநாதரின் ஆசி போலவே தொனித்தது, அந்த முதியவரின் பேச்சு!

டி.எஸ்.ஆர் & கோ

கும்பகோணம்









சுதந்திரக்கட்சிப் பிரசாரத்தை மூன் விட்டுத் தமிழ் நாட்டில் ராஜாஜியும் திரு ரங்காவும் மதுரை, திருச்சி, கோவை ஆகிய நகரங்களுக்குச் சுற்றுப் பிரயாணம் செய்தபோது ஒவ்வொரு ஊரிலும் லட்சக்கணக்கில் மக்கள் வந்து கேட்டனர். அப்போது எடுத்த சில காட்சிகளை இந்தப் பக்கங்களில் பார்க்கிறீர்கள்


1. கோவை, சிதம்பரம் பூங்காவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தின் மேடைத் தோற்றம். 2. திருச்சி பொதுக் கூட்டம். 3. திருச்சியில் தஞ்சை, திருச்சி ஜில்லா கல்கி ஏஜண்டுகளிடையே ராஜாஜி. 4. கோவை பொதுக் கூட்டத்தின் ஒரு பகுதி. 5. திருச்சி பொதுக் கூட்டத்தில் திரு மாரிசாமியும் பேசினார். 6. திருச்சியில் ஒரு முஸ்லிம் அன்பர் ராஜாஜிக்கு மலர்மாலை அணிவித்துப் பலத்த குரலில் வாழ்த்தொலி எழுப்பினார். 7. மதுரையில் திரு பி. டி. ராஜன் வரவேற்புரை வழங்கினார்.
















8. கோயமுத்தூரில் 'கல்கி' பத்திரிகையின் சேலம், கோவை நீலகிரி ஜில்லா ஏஜண்டுகள் ராஜாஜியைப் பார்த்து, அவரிடம் சுதந்திரக் கட்சிக்குப் பணிசெய்யும் ஊக்கமும் உற்சாகமும் பெற்றனர். 9. கோவையில் வக்கீல்கள் கூட்டத்தில் பேசிவிட்டு ராஜாஜி திரும்புகிறார். வக்கீல்கள் பொது விவகாரங்களில் அக்கறைகொண்டு முன்னாட்களில் வேலை செய்ததையும், சேலம் விஜயராகவாச்சாரியாரின் தொண்டினையும் நினைவுகூர்ந்தார். 10. கோவையில் கல்கி ஏஜண்டுகளுடன் மற்றொரு தோற்றம். 11. திருச்சியில் தஞ்சை, திருச்சி ஜில்லா 'கல்கி' ஏஜண்டுகள் வந்திருந்தனர். நங்கவரம் மிராசுதார் ஸ்ரீ துரை அய்யர் இல்லத்தில் ராஜாஜியைச் சந்தித்தனர். 12. திருச்சி பொதுக் கூட்ட மேடையில் ஆசார்ய ரங்காவும், ராஜாஜியும் ஏதோ பேசித் தங்களுக்குள் சிரித்துக் கொள்ளுகிறார்கள். 13. கோவையில் ராஜாஜியின் பிரசங்கத்தைக் கேட்ட பெண்களில் ஒரு பகுதி. 14. மதுரையில் ராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை, கன்னியாகுமரி 'கல்கி' ஏஜண்டுகள் வந்து சுதந்திரக் கட்சிக்கு ஊக்கத்தோடு பணி செய்வதாக ராஜாஜிக்கு வாக்களித்தனர். அந்த ஏஜண்டுகளுடன் ராஜாஜி.



















தமிழ் நாட்டுச் சுற்றுப்பிரயாணம், சென்னை கடற்கரையில் செப்டம்பர் 20-ம் தேதி நிகழ்ந்த கூட்டத்துடன்தான் முடிவு பெற்றது. சென்னை கடற்கரையில் சுமார் இரண்டு லட்சம் மக்கள் திரளாக வந்து நல்லவர்களின் பேச்சைக் கேட்டனர்.

15. நெல்லூர் பி. ராமச்சந்திரா ரெட்டி பேசுகிறார். 16. மேடைத் தோற்றம். 17. பொது மக்களின் ஒரு பகுதி. 18. எஸ். எஸ். மாரிசாமி. 19. டாக்டர் சந்தோஷம். 20. பொதுக் கூட்டத்தின் மற்றொரு பகுதி.











சென்னையிலிருந்து 25 மைல் தூரத்திலுள்ள பொன்னேரி முக்கியமாக விவசாயப் பெருங்குடி மக்கள் வாழும் பிரதேசமாகும். அவ்வூர் மக்கள் சுதந்திரக் கட்சியில் சேருவதற்குப் பேரார்வம் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சென்ற மாதம் 25-ம் தேதி ராஜாஜியை வரவேற்று அவருடைய அறிவுரைகளைக் கேட்டனர். சுமார் பத்தாயிரம் பேர் திரளாக வந்து கேட்டனர்.

1. ராஜாஜிக்குப் பூரண கும்ப வரவேற்பு அளிக்கப்பட்டது. 2. கூட்டத்துக்கு வந்திருந்த பெண்கள் பகுதி. 3. ராஜாஜி பேசுகிறார். ராஜாஜி பக்கத்திலிருப்பவர் பொன்னேரி சுதந்திரக் கட்சி அமைப்பாளர். 4. கூட்டத்தின் பல்வேறு பகுதிகள். 5. ராஜாஜியின் அருகில் உட்கார்ந்திருப்பவர் பொன்னேரி டாக்டர் டி. ஏ. சாம்பசிவம். சுதந்திரக் கட்சி உறுப்பினரில் முக்கியமானவர்.









ஆகாச வெடி!

"ரஷ்ய மக்கள் மிகவும் விரும்புவது பீட்ரூட் குழம்பு!" —பிரதமர் குருஷேவ்

பீட்ரூட்டில் ரஷ்யர்கள் விரும்பும் சிவப்பு நிறம் இருப்பதால்தானே?

★

"உயர்வு தாழ்வு வித்தியாசத்தைப் போக்கப் பள்ளிப் பிள்ளைகள் அனைவரும் ஒரே மாதிரி உடை அணிய வேண்டும்!"

—சென்னை முதல் அமைச்சர்

வளரும் பிள்ளைகளுக்கு இந்த உடைகள் பிடிக்குமென்று நம்புகிறோம்.

★

"ரஷ்ய வீடுகளில் ஆண்களுக்குத்தான் எல்லா அதிகாரமும்; ஸ்திரீகளுக்கு அல்ல!"

—ஸ்ரீமதி குருஷேவ்

அப்படி அதிகாரம் செய்யும்போது வெளியே சென்றிருந்த ஸ்திரீகள் வந்து விட்டால் என்ன செய்கிறார்கள்?

★

"நெருங்கித் திருத்த முடியாத அளவுக்கு மத்திய மராமத்து இலாகா ஆமை வேகத்தில் செல்கிறது."

—மத்திய மந்திரி டாக்டர் சுப்பராயன்

ஆமை வேகத்தில் சென்றும் அதை நெருங்க முடியவில்லையா?

★

"முதல் அமைச்சரின் சூறாவளி சுற்றுப் பிரயாணம் வெள்ளத்தினால் தடைப்பட்டது."

—மதுரைச் செய்தி

சூறாவளியிலிருந்தே வெள்ளம் வரும் என்று தெரிந்து கொண்டிருக்கலாமே!

"இங்கு முசாபரி பங்களாவுக்கு மந்திரி வந்ததும், சர்க்கரைப் பஞ்சத்தைப் பற்றி அவரிடம் தெரிவிக்கப்பட்டது."

—விழுப்புரம் செய்தி

"அப்படியானால் நமக்குக் காப்பி வேண்டாம்" என்று மந்திரி கூறியிருக்க வேண்டும்.

★

"பதினாயிரம் வீடுகள் கட்டி நகரில் ஜாகை நெருக்கடியைப் போக்கச் சென்னை நகரசபை திட்டம்!" —செய்தி

"பேஷாக அங்கேயே வந்து விடுகிறோம்" என்கின்றன மாம்பலம் கொசுக்கள்!

★

"மிட்டாய்க் கடையருகே பேசாமல் நின்று கொண்டிருந்த குழந்தை!" —தலைப்பு

பேசாமல் நிற்கக் குழந்தை வாயில் மிட்டாய்களை அடக்கிக் கொண்டிருந்ததா?

★

"இங்கு வந்த மராமத்து மந்திரியின் மூக்குக் கண்ணாடி மாயமாய் மறைந்து விட்டது!" —திருச்சிச் செய்தி

மூக்குக் கண்ணாடிகளைக் கயிற்றால் சிலர் கட்டிக் கொள்வதன் காரணம் இப்போது நன்கு புரிகிறது.

★

"வங்க சட்டசபை அமளியில் செருப்பு மாரி பெய்தபோது சிலர் மேஜைகளுக்கடியில் ஒதுங்கிக் கொண்டார்கள்." —செய்தி

மழையை எதிர்பார்த்து மற்றவர்கள் குடைகளோடு வந்திருந்தார்களாக்கும்!

சகடபுரம் ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள்



தமது பத்ரிகாசிரம யாத்திரையை முடித்துக்கொண்டு திரும்பி வந்து கொண்டிருக்கும் சகடபுரம் ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் சென்ற ஜூலை 4-ந் தேதியிலிருந்து கல்கத்தா மாநகரில் முகாமிட்டிருக்கின்றார்கள். இவ்வாண்டு சாதுர் மாஸ்ய விரதத்தை மிக விரிவாகவும் கோலாகலத்துடனும் கல்கத்தாவிலேயே நடத்தினார்கள். சிஷ்ய வர்க்கத்தினர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி, சாரதா நவராத்திரி விசேஷ பூஜைகளையும் இங்கேயே நடத்த ஸ்ரீ சுவாமிகள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். கல்கத்தா பாலிகஞ்சு பகுதியைச் சேர்ந்த ராஜா பஸந்த்ராய் தெருவில் ரஸிகரஞ்சனி சபைக்குச் சொந்தமான இடத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேஷ பந்தலில் நவராத்திரி விசேஷம் நடைபெறும் என்றும் மஹா நவமியாகிய அக்டோபர் 10-ந் தேதி யன்று "சதசண்டிஹோமம்" நடைபெறும் என்றும் ஸ்ரீ மடம் காரியாலயம் அறிவிக்கிறது.

தோட்டத் தொழிலாளர் மகாநாடு

இலங்கையின் மத்திய பாகத்திலுள்ள மலைநாட்டு முக்கிய நகரங்களில் ஒன்றான நாவலப்பிட்டியில் சுமார் இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட தோட்டத் தொழிலாளர் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கொடியின் கீழ் கூடிச் சில முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். இ. தொ. கா. என்று பொதுவாக அழைக்கப்படும் இந்த ஸ்தாபனத்துக்குத் தோட்டப்பகுதிமக்களிடம் எத்தனை செல்வாக்கு இருக்கிறதென்று இந்த மகாநாடு காட்டுவதாக இருந்தது. இந்திய வம்சாவளியினர்களின் பிரஜாவுரிமைப் பிரச்னையை இலங்கை அரசாங்கம் காலவரையறையின்றி ஒத்திப் போட்டுக்கொண்டிருப்பதை மகாநாடு கண்டித்துவிட்டு மனிதப் பண்பிலும் அடிப்படை உரிமைகளிலும் நம்பிக்கையுடையவர்கள் அடங்கிய ஒரு தேசியக் கமிட்டியை நிறுவவும் அதன் மூலம் தோட்டத் தொழிலாளருக்குப் பிரஜாவுரிமை பெற்றுத் தரவும் நடவடிக்கை யெடுப்பதென்று காங்கிரஸ் மகாநாடு ஒரு தீர்மானத்தில் குறிப்பிட்டிருந்தது. லாபத்தில் தொழிலாளருக்குப் பங்குகொடுக்க வேண்டிய அவசியத்தை இன்னொரு தீர்மானம் வற்புறுத்தியது. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்காக முற்போக்கு சக்திகளுடனெல்லாம் ஒத்துழைக்கக் காங்கிரஸ் எப்பொழுதும் தயாரா யிருப்பதாக ஒரு தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.



திரு எஸ். சோமசுந்தரம்

காங்கிரஸின் புதிய தலைவரான திரு எஸ். சோமசுந்தரம் தமது அக்கிராசனப் பிரசங்கத்தில் இலங்கை இந்தியப் பிரச்னை இலங்கையின் சொந்தப் பிரச்னையே தவிர இந்தியாவின் பிரச்னையல்ல வென்பதையும் இதை இலங்கையிலேயே தீர்த்துக் கொள்ள வேண்டுமே யன்றி இந்தியாவுடன் பேச்சு நடத்த நேரமும் காலமும் கூடிவரவில்லை யெனச் சொல்லி ஒத்திப்போட்டுக்கொண்டு வருவது புதியபுதிய சிக்கல்களையே தோற்றுவிக்குமென்பதையும் பலமாக வற்புறுத்தினார். மனிதாபிமானத்துடனும் மனிதப் பண்புகளுடனும் பிரச்னையை அணுகினால் பரிகாரம் காண்பது சுலபமென்பதையும் அவர் கட்டிக் காட்டினார். இதற்கிடையில் தோட்டத் தொழிலாளரும் யூனியன் தலைவர்களும் கல்வி சம்பந்தமான காரியங்களுக்குக் கூட இலங்கையை விட்டு வெளிநாடு போக முடியாமல் இருக்கிறது. அவர்களுக்குப் பிரயாணதஸ்தாவேஜுகள் கொடுக்க அரசாங்கம் உடனடியாக ஏதாவது ஏற்பாடுசெய்யவேண்டுமென்று அவர் அரசாங்கத்திடம் கோரினார்.

மகாநாட்டில் கலந்து கொண்ட தொழிலாளரிடையில் கரை கடந்த உற்சாகம் தென்பட்டதுடன் அவர்களிடம் திரு தொண்டைமானுக்கு எத்தனை செல்வாக்கு உள்ளதென்பதையும் மகாநாடு காட்டுவதா யிருந்தது. திரு தொண்டைமான் தலைவர் பதவியிலிருந்து இவ்வருடம் விலகிக் கொண்ட பொழுதிலும் அவரைக் கண்ட மாத்திரத்தில், அவரது பெயரை யாராவது சொல்லிய மாத்திரத்தில் தொழிலாளர் பூமியும் வானமும் அதிர 'ஜே' கோஷம் செய்து ஆர்ப்பரித்தது. சென்ற பல ஆண்டுகளுக்கிடையில் தோட்டப் பகுதி மக்களுக்கு அவர் அயராது செய்துவரும் அரும்பெரும் சேவைக்கு ஒரு நல்ல மதிப்புரை. நாவலப்பிட்டி நகரத்தில் நகருவதற்குக்கூட இடமில்லாதபடி அவ்வளவு தொழிலாளர்கள் பெருங் கூட்டமாகத் திரளாக வந்து மகாநாட்டைச் சிறப்பித்தனர். ஐந்து தினங்கள்வரை யில் நடந்த இம் மகாநாட்டில் இரவு தோறும் பல கலாசார நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

மாபெரும் நஷ்டம்

ஈழத் தமிழ்த் தலைவர்களில் ஒரு முக்கியமான தலைவரும் கோப்பாய்த் தொகுதியின் பார்லிமெண்ட் அங்கத்தினரும் தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவருமான திரு கு. வன்னியசிங்கம் அவர்களின்மறைவு யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு மட்டுமில்லாமல் இந்திய வம்சாவளியினர்களுக்கும் ஒரு மாபெரும் நஷ்டமாகும். 1947-ம் வருடம் முதல் பார்லிமெண்டில் தொடர்ந்து அங்கத்தினராக இருந்து வந்த திரு வன்னியசிங்கம் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகர்களில் ஒருவராவார். இந்திய வம்சாவளியினர்களின் பிரஜாவுரிமையை இரவோடு இரவாகப் பறித்துப் பல லட்சம் பேர்களை நாடற்றவர்களாக்கிய அநியாயச் சட்டத்தை இலங்கை அரசாங்கம் இயற்றிய



திரு கு. வன்னியசிங்கம்

பொழுது திரு வன்னியசிங்கம் அச்சட்டத்தை ஆதரித்த அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸிலிருந்து விலகித் திரு செல்வநாயகத்துடன் சேர்ந்து தமிழரசுக் கட்சியை உருவாக்கினர்.

இந் நாட்டைத் தாயகமாகக் கொண்ட சகல இந்தியத் தமிழர்களுக்கும் பரிபூரண பிரஜாவுரிமை அளிக்க வேண்டுமென்பதை அவர் கடைசி மூச்சு இருக்கும் வரையில் வற்புறுத்தி வந்தார். சிங்களத்துடன் தமிழ் மொழிக்குச் சரிசம அந்தஸ்து பெறவும் தமிழர் அரசியல் பொருளாதார நிலையை மேம்படவும் நடைபெற்ற கிளர்ச்சிகளில் எல்லாம் அவர் முன்னணியில் இருந்தார். ஈழத் தமிழ்ச் சமூகம் தனது மாபெரும் தளபதிகளில் ஒருவரை இப்பொழுது இழந்து கலங்கி நிற்கிறது. தமிழ் பேசும் மக்களின் சோதனைகள் மிக்க தருணத்தில் திரு வன்னியசிங்கத்தின் திடீர் மறைவு சொல்லொணாத் துயரத்தைக் தருவதா யிருக்கிறது.

— ரஜனி.

சுதந்திரக் கட்சி - கொள்கை விளக்கம்:

உச்ச வரம்பினால் உபயோகம் இல்லை

இலவு காத்த கிளி என்பது தமிழர் பழமொழி. பெரிய மிராசுதாரர்களிடமிருந்து நிலத்தைப் பறித்து நிலமற்ற ஏழைக்குத் தருவோம் என்று அரசாங்கம் சொல்லி வருகிறது. இரண்டு ஆண்டுகளாக உச்சவரம்புக்கு மேல் நிலமுள்ளவர்கள் நிலத்தை விற்றும், பிரித்தும், பெரும்பாலும் வரம்புக்கு உள் வந்துவிட்டனர். அதில் தவறு ஒன்றும் இல்லை. அவ்விதம் பிரிவுபட்ட நிலங்கள் நடுத்தர விஸ்தீர்ணம் உள்ளவை. நன்ருகச் சாகுபடி செய்யப்படும். ஆனால் வரம்புக்கு மேல் உள்ள நிலங்கள் சிறுபான்மை ஆகிவிட்டன. மலையைக் கெல்லி எலியைப் பிடிப்பதுபோல் ஏழைக்குத் தோழன் என்று மார் தட்டிக் கொண்டிருக்கும் காங்கிரஸ், லக்ஷத்தில் ஒருவனுக்குக் கூட நிலம் கொடுக்க முடியாது. இதைச் சில மந்திரிகள் சுட்டிக் காட்டியும் இருக்கிறார்கள்.

நிலம் கிடைத்தவன் கதி மட்டும் என்ன? அவன் உடனே கூட்டுறவுப் பண்ணைச் சங்கத்தில் சேர வேண்டும். "எனக்கும் நிலம் இருக்கிறது" என்ற பயனற்ற பெருமை மட்டும் நிலைக்கும். அவனுக்கு அன்று நிலம் இல்லை, இன்று உரிமை இல்லை. கலியாணமாகியும் பிரும்மச்சாரி என்ற கதை ஆயிற்று!

உழவனுக்கு ஆண்டுக்கு நானூறு ரூபாய் வருமானம் வருமளவு நிலம் கொடுக்க வேண்டும் என்கிறார்கள். அதாவது மாதம் முப்பது ரூபாய். இன்று விற்கும் விலையில் ஒரு குடும்பத்துக்குத் தினம் முக்கால் படி அரிசி! ரிக்ஷா வண்டி இழுப்பவன், ஆபீசில் சேவகன், காப்பி ஹோட்டலில் காப்பி ஆற்றுபவன், குப்பை வண்டிக்காரன் இவர்களை விடக் கேவல நிலைமையில் ஒரு மனிதனை நிலைநிறுத்த அரசாங்கம் இத்தனை முயற்சி ஏன் எடுக்கிறது? ஏழைமையை வருத்தளிப்பதும் ஒரு சீர்திருத்தமா?

நிலம் படைத்தவர்களுக்கு, ஆண்டுக்கு நாலாயிரம் அல்லது ஐயாயிரம் வருமானம் கிடைக்கும் வகையில் நில உச்சவரம்பு கட்ட வேண்டும் என்கிறார்கள். அதாவது மாதம் நானூறு ரூபாய் ஒரு குடும்பத்துக்கு. வேறு விதங்களில் பணம் சம்பாதிப்பவர் மட்டும் தங்கள் பையன்களை உயர்தரக் கல்லூரியில் சேர்த்து, அரசாங்க அலுவலில் அமர்த்தி வெளிநாட்டுக்கு அனுப்பிப் பலவிதத்தில் முன்னேற்றம் அடையச் செய்கிறார்கள். நானூறு ரூபாய் வருமான முள்ள குடும்பத்துக்கு இதெல்லாம் கொம்புத் தேன்! விவசாயியின் மகன் மட்டும் உயரக்கூடாது என்பது அரசாங்கத்தின் கருத்தாக இருக்கிறது.

கீழும் மேலும் கிழிந்த இந்தச் சீர்திருத்தம் யாருடைய நன்மைக்கு? "நாங்கள் ஏழைகளின் கட்சி" என்று காங்கிரஸ் (சமீப) தனவான்கள் பேசுவது பெரும் பேதைமை; அல்லது ஏமாற்றல்.

பெரிய மிராசுதாருக்கு அதிக வரி போடலாகும். மிராசையே ஒழித்தால் முழு மேனி விளைந்து விடுமா?

ஆனால் தமிழ் மக்கள் மதி இழக்கவில்லை. தேர்தல் தந்திரத்தில் மயங்க மாட்டார்கள். விளைவை அதிகரிப்பதே அடிப்படை அவசரம். பெருமானின் பிச்சையைப் பங்கிட்டுப் பயன் இல்லை.


மலரன்ன
மிருது வதனத்திற்கு
Remy
ரெமி
பவுடர் &
ஸ்னோ

நந்தா ஒளி

பெ. தூரன்



ஆமாம்; இதே மாமரந்தான். இதன் தண்ணிழலில் அமர்ந்து நீ உன் காதலி யோடு நேற்று மாலை கொஞ்சிக் குலாவும் போதுதான் அவன் யமனாக வந்து சேர்ந்தான். நொடிப் பொழுதிலே, கண்ணெடுத்துப் பார்ப் பதற்கு முன்னாலே உன் காதலி துடிதுடித்து உயிரற்று விழுந்தாள். அந்தோ! எல்லாம் என் கண் முன்னாலேயே நடந்தது. இதே மரந்தான். இங்குதான் அந்தக் கொடுமை நிகழ்ந்தது. கொலை. கொலை, மன்னிக்க முடியாத கொலை. காதலனுக்கு இன்பந் தருவதிலே ஈடுபட்டிருந்த பெண்மையின் உயிர்க் கொலை.

இன்று எதற்காக நீ மறுபடியும் இந்தக் கொலைக்களத்துக்கு வந்திருக்கிறாய்? உன் உயிரையும் வாங்கிவிடட்டும் என்று வந்திருக் கிறாயா? அப்படித்தானிருக்க வேண்டும். இல்லாவிட்டால் அதே நேரத்துக்கு இன்று நீ இந்த மரத்தையே நாடி வருவாயா?

நேற்று உனக்கு உன் உயிர் வெல்லம். இன்று அது உனக்கு எட்டிக்காய்; ஒரு பெரும் பாரம். அதைச் சுமக்க முடியாமல் தத்தளிக்கிறாயா?

நேற்று அந்த யமனைக் கண்டு நடுங்கினாய். இன்று அவனை வரவேற்க வந்திருக்கிறாயா? அவனைத் தேடி அலைகிறாயா? அவன் கொலைக் கன்களிலே விழத் துடிக்கிறாயா?

ஒரு வேளை, உன் காதலி உனக்கு வேடிக்கை காட்ட உயிரற்றவள் போல் நேற்று நடித் திருப்பாள் என்று நம்பி, இன்று அவளைத் தேடி வந்திருக்கிறாயா? அவள் எழுந்து உன் னைக் காணப் பறந்து வருவாள் என்று நம்பு கிறாயா? ஐயோ! இந்த நம்பிக்கை என்னும் மாய மனப்பாங்கு எத்தனை ஆறுதல் அளிக் கிறது! எத்தனை ஏமாற்றமும் அளிக்கிறது! புரையோடிய புண்ணை எப்படி யெல்லாம் மூடி மூடித் திறக்கிறது! இருந்தாலும் இந்த நம்பிக்கைதானே உயிருக்கு ஒரு தனி வலிமை?

நீ எனது குலத்தினை இப்பொழுது சபித்துக் கொண்டிருக்கிறாய். மனிதனைக் கல் மனப் பேய் என்று கூறுகிறாய். அன்பு என்னும் பசையே கண்டறியாத பாலைப்பதர் என்கிறாய். உள்ளத்தைப் படைத்து அதிலே கருணை ஊற்றைச் சுரக்கவைக்க மறந்துபோன பொட் டல் பிறவி என்று தூற்றுகிறாய். இன்னும் என்ன வெல்லாம் சொல்லி ஏசுவாயோ?

மனிதனைப் படைத்துவிட்டுப் பிறகு அவ னுடைய கொடுமையைக் கண்டு மனமுடைந்து அவனைக் கொல்லுவதற்கு இறைவன் புலியைப் படைத்தானா? புலியின் கொடுமையைக் கண்டு அதை ஒழிக்க மனிதனைப் படைத்தான் என்று சொல்லுவது சரியல்ல. புலியின் கொடுமை அதன் நகத்தோடும், அதன் கோரைப் பற்களோடும் நின்று விடுகிறது. ஆனால் மனிதனுடைய கொடுமை அவன் உடம்போடு மட்டும் நிற்கவில்லையே. அவன் மூளையிலிருந்து வெளியேறி விஷக்காற்றாகப் பரவுகிறதே. யமனும் நடுங்கும் படையாக உரு வெடுக் கிறதே. மாய அணுகுண்டாக உலகை வதைக்கப் பார்க்கிறதே.

குயிலா! நீ எதற்காக இப்பொழுது இந்த மரத்துக்கு வந்தாய்? உன்னுடைய பாட்டெல் லாம் எங்கே? உன் காதலியோடு செத்து விட்டதா? இந்த மரக்கிளைகளிலே என்ன தேடுகிறாய்? அவளோடு தத்தித் தத்தி ஒவ் வொரு கிளையாக ஏன் போகிறாய்?

உங்கள் காதல் வாழ்க்கையின் காட்சிக ளெல்லாம் இந்த மரத்தைக் கண்டவுடனே, உன் உள்ளத்திலே உதயமாகின்றனவா? அந்தக் காட்சிகளின் நினைவிலே நீ களிப்படை கிறாயா? கரிந்து உருகுகிறாயா? காட்சிகளை நினைத்து நினைத்து ஆறுதல்பெற முயல்கிறாயா? அந்த நினைப்பு மேலும் மேலும் உனக்குத் துன்பந்தானே விளைக்கும்? இந்த மரத்திலே நீ தங்கியிருந்து எத்தனை எத்தனை இன்பப் பாட்டைப் பொழிந்திருக்கிறாய்? அந்தப் பேதைக் குயிலியின் செவிகளிலே இன்பப் போதையை இங்கிருந்துதானே பாய்ச்சினாய்? உனது கீதத்தில் மயங்கித்தானே குயிலி உன்னிடம் ஓடி வந்தாள்? உனது கீதமே அவளுக்குக் கூற்றுவனின் தூதனாக மாறிய தைக் கண்டு உனது குரலையே நீ வெறுக்கிறாயா?

> உண்மையான கலை; கலைஞனின் திருப்தி, மகிழ்ச்சி, தூய்மை ஆகியவற்றுக்கான அத்தாட்சியாகத் திகழ வேண்டும். நமக்கிடையே அம்மாதிரி ஒருகலையை உயிர்ப்பிக்க வேண்டுமென்றால் உங்களில் மிக உயர்ந்தவர்கள் யாவரும் கதரைக் கட்டாயம் அணிந்தாக வேண்டும்.
>
> — நவ இந்தியாவில் காந்திஜி.

இந்த மரக்கிளைகளில் அமர்ந்து எத்தனை நாட்கள் நீ என் உள்ளத்தில் நவ நவமான இன்பக் கிளர்ச்சிகளைப் பொங்கச் செய்திருக்கிறாய்! உனது பாட்டொலியிலே உலகம் கந்தர்வ லோகமாக மாறியதை நான் கண்டிருக்கிறேன். உலகமே ஒரு இன்ப மோகினியானதை உணர்ந்து அனுபவித்திருக்கிறேன்.

இப்பொழுது எல்லாம் கனவாகப் போய் விட்டனவே! உன் குரல் இனி ஒலிக்காதா? உன் குரலில் மீண்டும் தேன் சுரக்காதா? அன்பு வறண்டுபோன பிறகு நீ பாடுவாயா? அழுகைப் பாட்டுக்கும் அப்பாற்பட்டதாகவல்லவோ உன்னுடைய அவலம் தோன்றுகிறது? அழுகையில் ஆறுதல் தோன்றுகிறது. உள்ளத்தில் உறைந்து கிடக்கும் துன்பத்தை ஒப்பாரி கண்ணீராகக் கரைத்து மெதுவாக வெளியேற்றுகிறது. உனது துன்பம் கரையக் கூடியதாக இல்லையே! பாடு, குயிலா! சோகப் பாட்டாவது பாடு. உன் நெஞ்சம் கொதிப்படங்கட்டும்.

என்னை ஏன் இப்படி உற்றுப் பார்க்கிறாய்? எனக்குச் சாபம் கொடுக்கிறாயா?

அந்த மூடனைத் தடுக்காதது என் குற்றந்தான். ஆனால் நான் அவனைத் திரும்பிப் பார்ப்பதற்கு முன்னாலேயே அவன் குறி வைத்துச் சுட்டு விட்டானே? துப்பாக்கி வெடியின் இடிக் குரல் கேட்ட பிறகுதானே நான் திடுக்கிட்டுத் திரும்பினேன்?

அந்தக் குண்டு தவறி என் மேல் பாய்ந்திருந்தால் நான் எப்படித் துடித்திருப்பேன்! அவனும் எப்படித் துடித்திருப்பான்! எனக்காக அவன் எத்தனை பரிவு காட்டியிருப்பான்!

நீயும் என்னைப் போல ஓர் உயிர்தானே? என்னைவிட நீ மனித குலத்துக்கு அதிக இன்பமூட்டுகிறாய். உனது பாடல் மனிதனை வானுலகத்துக்கு இழுத்துச் செல்லுகிறது. எனக்கு அத்தனை வன்மை ஏது?

குயிலா, வாழ்நாள் முழுதும் பாடுவது உனது இயல்பு. இசையால் உலகத்துக்கு இன்பம் தருகிறாய். இன்பம் செய்தல் உனது மதம்; உனது வாழ்க்கை.

மனிதன் இன்று எப்படி இருக்கிறான்? வாழ்க்கை முழுதும் இன்பமே செய்கிறானா? இன்பமே அவன் செய்ய வில்லை என்று கூற முடியாது. ஆனால் அதைவிடத் துன்பம் செய்வதே அவன் வாழ்க்கையில் முதலிடம் பெற்றிருக்கிறது என்பதை நான் மறுக்க முடியுமா? அவன் எட்டிப் பிடித்த வெற்றிகள் பல என்பது மெய்தான். இன்பம் பலவற்றுக்கு ஏணியிட்டதும் மெய்தான். ஆனால் அவன் அடைந்த வெற்றியின் சிகரம் ஹிரோஷிமாவாகவல்லவோ காட்சியளிக்கிறது? பாட்டிசைக்கும் உன் வாழ்க்கையோடு மனிதனுடைய வாழ்க்கையை ஒப்பிடுவது சரியல்ல. உன் வாழ்க்கை தேன். மனித வாழ்க்கை கலப்படமற்ற தேனல்ல; அதில் நஞ்சு கலந்திருக்கிறது.

கரியது உன் உடல்; ஆனால் உன் பாட்டு இனியது; அமுதம் சுரப்பது. கடவுளின் வடிவிலேயே மனிதன் தோன்றியிருக்கிறான் என்று கூறுகிறார்கள்; ஆனால் அந்தத் தேவ யாக்கையிலே கரிய உள்ளம் புகுந்து கொண்டிருக்கிறது. அவன் உள்ளம் பேய்க் குகை. அதில் அறிவு மின்னல்கள் அவ்வப்போது பளிச்சிட்டாலும் அதன் இருட்டுப் படலம் இன்னும் விலகவில்லை.

இனிமையை வானிலே பரப்புவது உன்னுடைய முயற்சி. அணு விஷத்தை வானிலே பரப்புவது இன்று மனிதனுடைய உன்மத்த முயற்சியாக இருக்கிறது.

குயிலா, எங்களுக்காக நீ இரக்கப்பட வேண்டும். உனது தேனிசையை முழுக்க முழுக்க அனுபவித்துப் போற்றும் காலம் எங்களுக்கு வரும். அதற்கு முன்பு பல காலம் எங்கள் அறிவீனத்தினாலே நாங்களும் துன்புறுவோம்; உங்களைப் போல் இன்பம் செய்கின்றவர்களையும் துன்புறுத்துவோம்; எங்கள் அறிவு முடமானது. உதைபட்டு அடிபட்டுத்தான் அது திருந்தும். எத்தனையோ சான்றோர்கள் எங்களுக்கு இன்பவாழ்வு பற்றிப் போதனை செய்திருக்கிறார்கள். அண்மையிலே எங்களிடையே அன்புருவமாக நடமாடிய காந்தியடிகள் அஹிம்சை, அன்பு பற்றி எங்களுக்கு எவ்வளவோ கூறியுள்ளார். அன்பு வழியாலேயே எங்களுக்குச் சுதந்திரம் கிடைக்குமாறு செய்தார். அன்பின் அவதாரம் அவர்.

நாங்கள் அவரைப் போன்ற சான்றோர்களைப் போற்றுவதில் தவறுவதில்லை; அவர்கள் உபதேசங்களைப் பின்பற்றுவதில் மட்டும் போதுமான ஊக்கம் எங்களுக்கு என்றும் நிலையாக இருப்பதில்லை. எங்கள் மூடத்தன்மைக்கு அது சான்று. அதனால் நாங்கள் இடர்ப்படுகிறோம். உங்களையும் வதைக்கிறோம். பொறுத்துக் கொள். எங்களுக்கு நல்ல காலம், நல்ல அறிவு விரைவில் வர வேண்டுமென்று நீ பரிவுகொள். ஒரு பாட்டுப் பாடு. உனது தேன் இசை எங்கள் கருங்கல் மனத்தை மேலும் மேலும் கரையச் செய்யட்டும். பாட்டுக்கு இந்த வல்லமை உண்டு என்கிறார்கள். உன் பாட்டால் எங்கள் கொலையுள்ளமும் மென்மை அடைய வேண்டும்.

குயிலா, பாடு. 'உங்களை மன்னித்தேன்' என்று பாடு. அன்புக்கே இடமாக எங்கள் உள்ளம் மலர்வதற்கு உன் பாட்டுத் தேன் உதவ வேண்டும். குயிலா, பாடு. இன்னா செய்தார் நாணி மனமாற்றம் அடையப் பாடு.

'பழைய புன்மை இருள் இன்றே மறைக' என்று பாடு. 'புதிய இன்ப ஒளி, அன்பெனும் நந்தா ஒளி இன்றே ஓங்குக' என்று பாடு.



ஸ்ரீ பி. எம். தௌலத்ராம்

சென்னையிலுள்ள மிளகு, மஞ்சள், கரி பவுடர், திரவிய சாமான்கள் ஏற்றுமதி ஸ்தாபனமான பி. மிட்டுலால் லாலா & சன்ஸ் செயல் பங்காளரும் ஸ்ரீ திருவேட்டீஸ்வரர் சபையின் தலைவருமான ஸ்ரீ பி. எம். தௌலத்ராம் அவர்கள் தன் வியாபார நிமித்தம் 23 - 9 - 59 அன்று I.A.C., T.W.A. விமானங்கள் மூலம் மேல்நாடுகளுக்குப் பயணமானார். எகிப்து, லிபியா, ஐரோப்பிய நாடுகள், இங்கிலாந்து, அமெரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், கானடா முதலிய தேசங்களில் சுற்றுப் பிரயாணங்களை முடித்துக் கொண்டு ஜப்பான், ஹாங்காங், மனிலா, சிங்கப்பூர் வழியாக சென்னைக்கு 1960-ம் வருஷம் பிப்ரவரி மாதம் திரும்புவார்.

மகாத்மாவுக்கு நினைவுச் சின்னங்கள்

சுவாதி

விதி சதி செய்துவிட்ட அந்த நாளில் 1948-ம் வருஷம் ஜனவரி மாதம் 31-ந் தேதியன்று, தேசப் பிதாவின் சிதையை மூட்டிய போது சுற்றிலும் இருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் 'மகாத்மா காந்தி அமரராகி விட்டார்' என்று தொழுது வணங்கினர். தேசப் பற்று கொண்ட மனங்களிலெல்லாம் அவர் எந்நாளும் கோயில் கொண்டிருப்பார். ஆனால் வருங்காலச் சந்ததிகள், உலகில் நடமாடிய அந்தத் தெய்வத்தைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புவார்களே? இதுதான் இப்போதையப் பிரச்னை. பல நூற்றாண்டுகள் கழிந்த பிறகும், காந்திஜி நடத்திய சுதந்திர இயக்க சரித்திரத்தின் பல நிலைகளையும் வருங்கால இந்தியர்கள் மனத்திரையிலாகிலும் காண வேண்டும்; அவர் வாழ்ந்து புனிதப் படுத்திய அந்த நாட்களை ஓரளவுக்காவது பார்க்க வேண்டும். இதற்காகத்தான் புது தில்லியில் தலைமைக் காரியாலயத்தைக் கொண்டுள்ள, 'மகாத்மாகாந்தி ஞாபகார்த்த டிரஸ்ட்' ஒரு ஒழுங்கான திட்டத்தை நிறைவேற்றி வருகிறது.


இதன்படி, அவரது நினைவை நிரந்தரமாக்கும் பொறுப்பு முழுவதும் ஸ்ரீ காகா சாஹேப் காலேல்கருக்குக் கீழ் இயங்கும் மகாத்மா காந்தி ஞாபகார்த்த மியூஸியத்துக்கு 1949-ம் ஆண்டு அளித்ததுடன் ஒரு கோடி ரூபாய் பணமும் ஒதுக்கியது. ஆரம்பத்தில் இந்தப் பொருட்காட்சி சாலையில் ஒரு உதவி 'கியூரேட்ட'ரும் ஒரு உதவி 'லைப்ரேரிய'னும் இன்னும் ஆறு பேர்களும் காரியாலயக் குழுவினராக இருந்தனர். முதலில் பம்பாயில் இருந்த தலைமைக் காரியாலயம் பின்னர் தில்லிக்கு மாறியது. ராஜ்காட்டில் காந்தி ஞாபகார்த்தம் கட்டி முடிந்த பின்னர் இறுதியாக அங்கு இருக்கும் இந்தக் காரியாலயம்.

இந்த நவீன நூற்றாண்டில் கிடைக்கக் கூடிய எல்லா உதவிகளும் இருந்தும் அந்த முனிவரின் ஞாபகார்த்தப் பொருள்களையும் புனித நினைவுச்சின்னங்களையும் சேகரிப்பது எளிய காரியமாக இல்லை. ஆனால் தனது அலுவல்களைச் செய்வதில், காந்தி ஞாபகார்த்த மியூஸியத்துக்கு ஒரு சௌகரியம் இருக்கிறது. அமெரிக்காவில் லிங்கன் ஞாபகார்த்தப் பொருட்காட்சிசாலை அதிகாரிகள் ஆப்ரஹாம் லிங்கனின் ஞாபகார்த்தங்களை அமைக்கப் பின்பற்றிய வழிகளையே இவர்களும் பின்பற்றலாம். ஆப்ரஹாம் லிங்கன் ஞாபகார்த்த டிரஸ்டுக்குக் கடினமான தனது அலுவல்களைச் செய்து முடிக்கப் பதினேழு வருஷங்கள் பிடித்தன என்பதைச் சொல்ல வேண்டும். தற்சமயம் திட்டமிட்டுள்ளபடி காந்தி ஞாபகார்த்தங்கள் என்பவை இந்தியா முழுமைக்கும், நான்கு ஞாபகார்த்த மியூஸியங்களையும், பன்னிரண்டு ஞாபகார்த்தத் தூண்களையும், முந்நூறு ஞாபகார்த்தக் கற்களையும் கொண்டதாக இருக்கும்.

மேற்சொன்ன, நான்கு பொருட்காட்சி சாலைகள் புதுதில்லி, சேவாகிராம், சபர்மதி ஆசிரமம், மதுரை ஆகிய இடங்களில் இருக்கும். இவை காந்திஜியைப் பற்றிய முக்கியமான குறிப்புக்கள், புனிதமான நினைவுச் சின்னங்கள் அவர் எழுதியதும் அவரைப் பற்றி எழுதியதுமான புத்தகங்கள், கடிதங்கள், ஓவியங்கள், புகைப்படங்கள் முதலியவற்றைச் சேகரித்துப் பாதுகாத்து வைக்கும்.

இந்த நான்கிலும் முக்கியமான பொருட்காட்சிசாலை புதுதில்லியில் இருக்கும். ஞாபகார்த்தக் கூடத்தின் கட்டட வேலைகள் ஏற்கனவே ஆரம்பமாகி விட்டன. இந்தப் பெரிய கட்டடத்தைக் கட்டி முடிக்க 88 லட்சம் ரூபாய் செலவாகும். 1955 ம் வருஷம் அகில உலகப் போட்டி நடத்தி இந்தக் கட்டடத்தை அமைக்கும் விதத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். சிறிய குன்று போன்ற மண் மேட்டினிடையே ஒரு முற்றமும் அதன் நடுவே சமாதியும் இருக்கும். முற்றத்தை அடையக் குடவறைப் பாதைகளும் முற்றத்தின் ஓரங்களில் குகைகளும் அமைப்பார்கள். காந்திஜியின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் சிற்பங்கள் நிறைந்த இந்தக் குகையின் சுவர்களும் கூட அலங்கரிக்கப்பட்டிருக்கும். கன சதுரமான ஒரு கருங்கல் விளக்கு தூரத்தில் வருபவர்களின் கவனத்தையும் கவருமாறு உயரமான இடத்தில் அமைந்து சதா ஒளிபரப்பிக் கொண்டே இருக்கும். மண்ணினால் அமைந்த அந்தச் சிறிய குன்று இயற்கை அளிக்கும் ஞாபகார்த்தமாகவும் கருங்கல் விளக்கு தூய்மையையும் உண்மையையும் வலிமையையும் எடுத்துக் காட்டுவதாகவும் விளங்கும்.

இங்கு வருபவர்கள் அமைதியான தியானத்தில் ஈடுபடவும், படிக்கவும் பூங்காவில்



சத்தக்கறை படிந்த காந்திஜியின் ஆடைகள். நடுவே உள்ள பீடத்தில் காந்திஜியைத் தாக்கிய குண்டு இருக்கிறது.


கொட்டகைகள் கட்டப்படும். வருபவர்களுக்குப் பூஜைக்குரிய பொருள்களை விற்கக் கடைகளுக்கு வசதி செய்வதுடன் பூங்காவில் நீரோடைகளும் அமைப்பார்கள்.

தற்சமயம் இந்தப் பொருட்காட்சி சாலை காந்திஜியின் அந்யோன்யமான நண்பர்களில் ஒருவருடைய மாளிகையில் இருந்து வருகிறது. காந்திய இலக்கியங்களை இந்தி, ஆங்கிலம் மற்றும் முக்கியமான இந்திய மொழிகளில் சேகரித்ததுடன், காந்திஜி எழுதிய 25,000 கடிதங்களையும் சேகரிப்பதில் அளப்பரிய வேலைகளைச் செய்திருக்கிறது இந்த மியூஸியம். இந்தக் கடிதங்களை யெல்லாம் புகைப்படம் எடுப்பதுடன் தனித்தனியாகத் தேதி, உள்ளடக்கம் வாரியாக அட்டவணையும் தயாரித்திருக்கிறார்கள். இது வரையில் சுமார் ஆறாயிரம் கடிதங்கள் இவ்வாறு ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன. இந்த வேலை முழுவதும் முடிந்ததும் அசல் கடிதங்கள் இந்திய தேசிய தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்துக்குக் கொடுத்து விடுவார்கள்.

காந்திய எண்ணங்கள், லட்சியங்கள் நடைமுறை வழிகள் ஆகியவற்றைப் பற்றி விரிவாகக் கூறும் பகுதி இந்தப் பொருட்காட்சி சாலையின் புத்தகசாலையில் இடம்பெற்றிருக்கிறது. புத்தகசாலையில் இந்திய மொழிகளிலும், ஆங்கிலத்திலும், பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா, ஹாலந்து, இத்தாலி, ஸ்விடன், ஜப்பான், சீனு, தாய்லந்து, பர்மா, இந்தோனேஷியா, போர்ச்சுகல், ஸ்பெயின் ஆகிய நாடுகளின் மொழிகளுமாகச் சேர்ந்து பதினேராயிரம் புத்தகங்கள் இருக்கின்றன. இவற்றில் மூவாயிரம் புத்தகங்கள் மகாத்மாவின் அந்தரங்கக் காரியதரிசியான காலஞ்சென்ற ஸ்ரீ மகாதேவ தேசாய் சேர்த்து வைத்திருந்தவற்றிலிருந்து எடுத்துக் கொண்டவை. 1896ல் மகாத்மா இந்தியாவுக்குத் திரும்பி வது பற்றியும் 1897ல் தென் ஆப்பிரிக்காவுக்குத் திரும்பிய போது அவர் மீது ஏற்பட்ட தாக்குதல் பற்றியும் இது வரையில் அச்சிடப்படாத பல ருசிகரமான செய்திகளைத் தரும் புத்தகம் ஒன்று குஜராத்தியில் சமீபத்தில் தயாரிக்கப்பட்டிருக்கிறது; சீக்கிரத்தில் வெளியாகும். காந்திஜி ஆரம்பித்து வைத்த வாரப் பத்திரிகைகளின் தொகுப்பும் காந்திய எண்ணங்களுக்கு ஒப்பான லட்சியங்களைப் பற்றிச் சொல்லும் நாற்பது சஞ்சிகைகள், வாரப் பத்திரிகைகளும் இந்தப் புத்தகசாலைக்கு நிறைவை அளிக்கின்றன.

காந்திஜியின் வாழ்க்கையைப் பற்றி விஸ்தாரமான 30,000 அடி நீளமுள்ள திரைப்படத்தை இந்த மியூஸியம் தயாரித்து வருகிறது. 'ஆசியாவைப் பற்றிய ஆராய்ச்சிக்கான அமெரிக்க அகாடமி' தயாரித்த ''மகாத்மா காந்தி-இருபதாம் நூற்றாண்டின் அவதார புருஷர்'' என்ற 800 அடி நீளமுள்ள திரைப்படத்தை உலக 'காப்பிரைட்'டுடன் சமீபத்தில் இந்தப் பொருட்காட்சிசாலை வாங்கிக் கொண்டது. காந்திஜியின் வாழ்க்கையைப் பற்றிய திரைப்படங்களை வாரம் இரு முறை காட்டி வருகிறார்கள்.

மேலும் இந்திய அரசாங்கத்தினிடமிருந்து காந்திஜியின் பிரார்த்தனைக் கூட்ட 'இசைத் தட்டு'களை மியூஸியம் எடுத்துக் கொண்டிருக்கிறது. புத்தகசாலைக்குப் பக்கத்தில் இருக்கும் கூடங்களில் எழுபது காட்சிப்பொருள்கள் இருக்கின்றன. காந்திஜியின் கடிகாரம்; மூக்குக் கண்ணாடி; செருப்பு; பற்பல காலங்களிலும் அவர் உபயோகப்படுத்திய பாத்திரங்கள்; அவர் வாழ்க்கை முற்றுப் பெறக் காரணமாயிருந்த மூன்று தோட்டாக்களில் ஒன்று; மரணத் தறுவாயில் அவர் அணிந்திருந்த உடுப்புக்கள்; அவருடைய வாழ்க்கையின் பல்வேறு நிலைகளையும் அவர் ஈடுபட்ட பல காரியங்களையும் எடுத்துக் காட்டும் பொறுக்கி எடுத்த 700 புகைப்படங்கள்; வால்ஹாமர் தீட்டிய உயிரோவிய ஓவியம் உள்பட 32 ஓவியங்கள்; சேவாகிராமில் உள்ள குடிசையைப் போலவே மற்றொரு குடிசை இவையெல்லாம் காட்சிப் பொருள்கள் வரிசையில் சில. புதுதில்லி பிர்லா மாளிகையில் காந்திஜி உபயோகித்த பொருள்கள் கடைசியாகக் குறிப்பிட்ட குடிசையினுள் இருக்கின்றன. கதர்ப் படுக்கை தரையில் விரித்திருக்கிறது. இரண்டு தலையணைகள், ஒரு விசிறி, உமிழ்வதற்கு ஒரு கிண்ணம், பிரார்த்தனை மணி மாலை, ஒரு சிறிய புத்தகத் தட்டு. அவர் உயிர் துறந்த தினத்தன்று நூற்ற நூல் சிட்டங்கள் இவை குடிசையினுள் இருக்கின்றன. இன்னொரு அறையில் தண்டி யாத்திரையின் போது 251 மைல் தூரத்தை 25 நாட்களில் நடக்க அவர் உபயோகப்படுத்திய ஊன்று



காந்திஜியின் உடைமைகளில் சில.



தில்லியில் காந்திஜி ஞாபகார்த்த மியூஸியம்

கோளும் இருக்கிறது. அதன் அருகே உள்ள தேசப்படம் அவர் நடந்து சென்ற பாதை முழுவதையும் காட்டுகிறது.

பிரதி மாதமும் கிட்டத்தட்ட ஐயாயிரம் பேர்கள் இந்தப் பொருட்காட்சி சாலையைக் காண வருகிறார்கள். அநேகமாக எல்லாப் புனிதமான ஞாபகச் சின்னங்களையும் புது தில்லியிலேயே வைக்கவேண்டியிருப்பதால் அங்குள்ள காட்சிப் பொருள்களைப் போல வேறு புதிதாகச் செய்து மற்ற மூன்று பொருட்காட்சி சாலைகளிலும் வைக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள். பிரசித்தமான மூன்று குரங்குக் குட்டிகளும் இவற்றில் இடம் பெற்றிருக்கும். ஆனால் அதே சமயம் மற்ற மூன்று பொருட்காட்சி சாலைகளிலும் தற்போது இருந்துவரும் புனித ஞாபகச் சின்னங்கள் எதையுமே புதுதில்லிக்கு எடுத்துச் செல்லப் போவதில்லை. அந்தந்தப் பகுதியில் உள்ள மக்கள், தங்களிடமிருந்து காந்திஜியின் புனிதமான ஞாபகச் சின்னங்களைப் பறித்துச் செல்வதின் மூலம் புதுதில்லி மியூஸியத்துக்கே காந்திஜி ஞாபகார்த்த டிரஸ்ட் தேவைக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுக்கிறது என்று நினைக்குமாறு எதையும் செய்துவிடக் கூடாது என்பதுதான் பொதுவான கொள்கையாகும்.

உதாரணமாக, சபர்மதியில் உள்ள காந்திஜியின் கடிதங்களையெல்லாம் அங்கேயே வைத்திருக்க முடிவு செய்துள்ளார்கள். 1930ம் வருஷம் காந்திஜி, ஆசிரம புத்தக சாலையை நகரசபைக்குக் கொடுத்து விட்டார். இப்போது அந்தப் புத்தகங்களை ஆசிரமத்துக்கே நிரந்தரமாகத் திரும்பப் பெற டிரஸ்ட் திட்டமிட்டிருக்கிறது. காந்திஜி வசித்த சேவா கிராமத்தில் பாபுஜியின் குடிசை நல்லபடியாகப் பாதுகாக்கப்பட்டு வருவதுடன், அங்கே உள்ள பிரார்த்தனைத் திடலில் தழைத்து வளர்ந்திருக்கும் புனிதமான மரத்தினடியில் மாலைப் பிரார்த்தனையின்போது காந்திஜி முன்பு உட்கார்ந்திருந்த மரப் பலகைகளும் தலையணைகளும் ஆசான் நம்முடன் இருந்த போது எப்படி இருந்ததோ அப்படியே ஒழுங்கு படுத்தப்படுகின்றன. மதுரை மியூஸியத்துக்காக மகாத்மா காந்தி ஞாபகார்த்த டிரஸ்ட் ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. 17ம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட நாயக்க மன்னர்களின் அரண்மனையான பிரசித்தி பெற்ற திருமலை நாயக்கன் அரண்மனையில் பொருட்காட்சி சாலை அமைந்திருக்கிறது.

பன்னிரண்டு ஞாபகார்த்தத் தூண்களை எழுப்ப வேண்டுமென்பது இரண்டாவது தீர்மானம். இந்தியா முழுவதிலும் இந்திய சரித்திரத்தின் போக்கையே காந்திஜி மாற்றியமைத்த இடங்களில் இவை எழும். சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்ட உப்பு சத்தியாக்கிரஹம் ஆரம்பமான தண்டி; ''க்விட் இந்தியா'' இயக்கம் ஆரம்பமான பம்பாய் கௌவாலியா ஏரி; தோட்ட முதலாளிகளின் இரும்புப் பிடியிலிருந்து கிராமவாசிகளை அவர் மீட்டுக் கொடுத்த பீகாரில் உள்ள மோதிஹாரி முதலிய இடங்களில் இந்தத் தூண்கள் அமையும். ஒவ்வொரு தூணிலும் காந்திஜியின் மணிமொழிகளில் சில பொறிக்கப்பட்டிருக்கும். இவற்றில் முதல் தூண், 1942ம் வருஷம் ஆகஸ்டு மாதத்திய 'க்விட் இந்தியா' தீர்மானத்தை நினைவுபடுத்தும் வகையில் இவ்வருஷம் காந்தி ஜயந்தியன்று பம்பாய் கௌவாலியா ஏரியில் திறந்து வைக்கப்படும். திட்டப்படி ஒரு லட்சம் ரூபாய் செலவில் எழுப்பப்படும் 32 அடி உயரமுள்ள இந்தக் கல் தூணின் உச்சியில் ஒரு காளையின் உருவம் இருக்கும்.

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் அங்கு காந்திஜி விஜயம் செய்ததைப் பற்றிப் பொருத்தமான வாசகங்கள் பொறிக்கப்பட்ட 300 நினைவுக் கற்களை அமைக்க வேண்டும் என்பது மூன்றாவது தீர்மானம். இந்த நினைவுக் கற்கள் ஹாட்லி, பார்டோலி, கோக்ஹாரா, மாரோலி, காசி வித்தியா பீடம், சிம்லா, சபர்மதி சிறைச்சாலை ஆகிய இடங்களில் ஏற்கெனவே அமைக்கப் பட்டிருக்கின்றன.

இவற்றைத் தவிர காந்திஜி ஞாபகார்த்தங்கள் இந்தப் பரந்த உபகண்டத்தின் பல இடங்களிலும் எழுந்திருக்கின்றன. இவற்றில் மிக மிக அழகானதொன்று சென்னையில் கிண்டி ராஜபவனத்துக்குப் பக்கத்திலுள்ள காந்தி மண்டபம். இந்த மண்டபத்தில் ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிக்கிழமை மாலை அமைதியான சூழ்நிலையில் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறுகிறது.

அர்ஜன்டைனா போன்ற பல வெளிநாடுகளில் முக்கியமான வீதிகள் காந்திஜியின் பெயரைக் கொண்டிருக்கின்றன. ஏடனில் சட்டசபைக் கூடம் அவர் நினைவை நிரந்தரமாக்கி யிருக்கிறது. நெய்ரோபியில் அரசினர் துணைக் கல்லூரியைச் சேர்ந்த காந்தி ஞாபகார்த்த அகாடமி மக்களுக்கு அந்த முனிவரின் வாழ்க்கையை நினைவூட்டிக் கொண்டிருக்கும்.

ஆனால் காந்திஜிக்கோ இப்படியெல்லாம் அவரைப் போற்றுவது மனவருத்தத்தையே கொடுக்கும். தமது அறுபதாவது பிறந்த நாளன்று, பம்பாய் பாகினி ஸமாஜத்துக்கு அவர் அளித்த அறிவுரையில், ''எனக்கு வாழ்த்துத் தந்திகள் அனுப்புவதற்குச் செலவிட்ட பணத்தைக் கொண்டு ஏழைகளுக்கு உணவும் உடையும் கொடுத்திருந்தால், அப்படிக் கொடுத்தவர்களை அவர்கள் மனதார வாழ்த்த மாட்டார்களா?'' என்றல்லவா சொன்னார்?

காந்தி ஜயந்தி

கதர் வாரம்

ஒரு வேண்டுகோள்

கதர்

அணிந்து அண்ணலுக்கு அஞ்சலி செலுத்துவோம்

சுத்தமான கதர்

காதி கிராமக் கைத்தொழில் கமிஷனின்

அத்தாட்சி பெற்ற

ஸ்தாபனங்களிலும் அவற்றின் கிளைகளிலும் கிடைக்கும்

கீழ்க்கண்ட ஸ்தாபனங்களே சென்னை ராஜ்யத்தில் அத்தாட்சி பெற்றவை

1 சென்னை அரசாங்க காதி இலாகா

2. தமிழ்நாடு சர்வோதய சங்கம்

3 காந்தி ஆசிரமம் (திருச்செங்கோடு)

4 காந்தி கிராமம் (மதுரை ஜில்லா)

5 சென்னை கதர் அபிவிருத்தி கூட்டுறவு சங்கம்

6. காதி கிராமோத்யோக பவன, சென்னை

அத்தாட்சி பெறாத கடைகளில்

போலிக் கதரை வாங்கி

ஏமாறாதீர்கள்!

நாட்டு வைத்தியம்

ஸ்ரீஹரி

120 கங்காவதரணம்—புதிய புராணம்

தேவகங்கையைப் பூலோகத்துக்குக் கொண்டுவர பகீரதன் என்ன பாடு பட்டான், எத்தனை வருஷகாலம் தவஞ் செய்தான் என்பது போன்ற விருத்தாந்தங்கள் பழைய கதை. யாவரும் அறிந்த விஷயம்....கேட்டறிந்த கதை.

'பூலோகத்துக்குச் செல்வதா ?' என்று சீற்றமுற்ற கங்கை மகாவேகத்துடன் பூமியை நோக்கி இறங்கலானாள்.

"போச்சு ! போச்சு !!—பூமி பிளந்து துகள் துகளாகச் சிதறப் போகிறது. அல்லது கங்கை வெள்ளத்தில் கரைந்து விடப் போகிறது. அடடா ! அடடா ! என்று ஈரேழு பதினாலு லோகமும் நடு நடுங்கிய நேரத்தில் 'க்ஷிப்ர ப்ரஸாதி"—[ஒரு கணப் பொழுதில் மனம் நெகிழ்ந்து போய் உருகி, வேண்டும் வரத்தை யளிக்கும் தயாளு]—என்று கீர்த்தி வாய்ந்த சிவபெருமான், பகீரதனின் பிரார்த்தனைக்கு இரங்கி, தன் நிலையமான இமயத்தின்மேல் நின்று, மிக்க ஆரவாரத்துடனும் அட்டகாசம் போட்டுக்கொண்டும் கடுவேகத்தில் இறங்கிய கங்கையைத் தமது விரித்த செஞ்சடையில் ஏந்தினர் : ஜடை முழுவதையும் நன்கு ஈரமாக்கி விடவே போதவில்லையாம் அந்தக் கங்கையின் நீர்.

ஆயினும், மயிர்க்கால் வழியே ஒழுகிக் கீழே சொட்டலாமல்லவா ! அப்பொழுதுங்கூடப் பூமியைப் பாதாளம் வரையில் குழித்துப் பாழாக்கலாமே ! ஆகவே அவ்விதத்திலும் கங்கையால் ஆபத்து ஏற்படாமல் தடுக்க வேணுமென்று தீர்மானித்தார் சிவபெருமான். விரித்த செஞ்சடையைத் திரட்டி முடிந்து கொண்டான் அவ்வளவுதான் ; கங்கை சிவபெருமானின் செஞ்சடைக் கானகத்தில் சிக்குண்டாள். சுற்றிச் சுற்றி வந்தாலும் காட்டினின்றும் எல்லை தாண்டி வெளி வரும் வழி தெரியாது சடை முடியினுள்ளேயே கிடந்து உழலலானாள்.

சிவபிரானின் வாசமோ கைலையங்கிரி — ஹிமாசலம் பனிமலை. குளிருக்குக் கேட்க வேணுமா ?

தலையிலோ— புதரென மண்டிக் கிடக்கும் சடை. அதைத் தட்டி முடிந்த முடியிலோ பிறைச் சந்திரன். போதாக் குறைக்குப் பொன்னியம்மன் குற்றம் என்ற கணக்கில் கங்கையும் சேர்ந்தாள். பிறகு...?

பிறகு...? ஒருகால் பிரமனுக்கு ஜல தோஷம், சிரோபாரம்—மூக்கில் சளி—காதில் சீழ்—தொண்டையில் டான்ஸில் என்று இப்படி ஏற்பட்டாலோ ? என்ற பயம் தோன்றியது உமையாளுக்கு.... பாவம்! என்ன செய்வாள் ?

"மகனே ! நந்தி ! பரமனின் பூஜைக்கான ஏற்பாடுகளைச் செய்தாயா ?" என்று கேட்டாள்.

"அம்மணி! தேவையான வகையில் யாவற்றையும் ஏற்பாடு செய்துவிட்டேன் " என்றான் நந்திதேவன்.

பூஜைக்கான சாமக்கிரியைகளைக் கண்ணுற்ற தேவி "இதென்ன இது மகனே, ஏதோ முட்செடியின் இலைகளையெல்லாம்..."

"மன்னிக்க வேணும், தாயே! பரமனுக்குச் சீதத்தின் பாதை ஏற்படுமோ என்ற எண்ணம் தங்கள் மனத்தில் உதித்ததல்லவா? அப்படி ஏற்படுமாயின் அதைப் போக்கவும், ஏற்படாமல் தடுக்கவும் உதவக் கூடிய இவ்வில்வத்தின் இலைகளைப் பறித்து வந்துள்ளேன். இவைகளால் பரமனை அருச்சிப்பீர்களானால்..."

"சீதத்தின் பாதை விஷயமான அச்சத்துக்கே இடமிராது என்கிறாயா?" என்று கேட்டாள் பார்வதி, சிரித்துக்கொண்டே.

'இஹிஹிஹி' என்று நந்திதேவன் தலையைக் குனிந்து கொண்டான்.

பார்வதி வில்வ இலை கொண்டே பரமனை அருச்சித்தாள்.

இப்படியொரு கதையை நீங்கள் கேட்டிருக்கிறீர்களா? இல்லாவிட்டால் இப்போதுதான் கேட்டு... இல்லை, இல்லை, இல்லை படித்தே விட்டீர்களே!

இது என் கற்பனைதான். ஆனால் முன் கட்டுரையில் குழந்தைகளின் காதில் வழியும் சீழுக்குச் சொன்ன சிகிச்சையை இக்கட்டுரையைப் படித்த பிறகு ஒருமுறை வாசித்துப் பாருங்கள், நம்பிக்கை பிறக்கும்.

இன்றையக் கங்காதரர்களுக்கு ஒரு விஷயம். கிராப்பு அடித்த முடி "படீசைய" இருக்க வேண்டுமென்று எண்ணெயும் தண்ணீரும் கலந்து-தமது சடைகளுக் குத் தடவித் திமிரித் தேய்த்து "எழைய்ய்ய்ய" முடியைச் சீவிக் கொள்ளும் நவீன கங்காதரர்களும் ஒருநாளில்லாவிட்டால் ஒருநாள் வில்வத்தின் இலை—வில்வத்தின் வேர் போன்றவைகளை உபயோகிக்க வேண்டிய அவசியம் ஏற்படும். எச்சரிக்கை. இவர்களுக்குக் காதுவலி ஏற்படுவது சகஜம். இவ்வுபாதை அடிக்கடியும் ஏற்படலாம். அதைத் தக்கபடி சிகிச்சிக்காது ஏதோ தாற்காலிகச் சிகிச்சை செய்து வருவதால் நிரந்தரமான கர்ண ரோகத்துக்கு விதை விதைத்தது போலாகும்.

அடிக்கடி காது குத்தல் வலி ஏற்படுவது இருக்கட்டும். சிலருக்கு அவ்வித உபாதைகள் ஒன்றுமே இராது. ஆனால் சதா காதிலிருந்து ஒருவகை நீரோ அல்லது சீழோ—இரண்டுமேயோ ஒழுகிக்கொண்டே இருக்கும். சில சமயங்களில் இதில் சிறிது ரத்தமும் கலந்திருக்கும். ஒழுகும் ஜலம் பட்ட இடத்திலெல்



புது யோசனை!

'மணமானவர்களுக்கு ஒரு யோசனை, தம்பதிகளுக்கு மட்டும், புது வாழ்வில் ஈடுபடும் தம்பதிகளுக்கு' என்பனபோன்ற புத்தகங்கள் தம்பதிகளுக்குப் பரிசாக வந்து குவிந்தன. அதைப் பார்த்த தம்பதிகள் திகைத்துப் போனார்கள். திகைப்புக்குக் காரணம் அது அவர்கள் சஷ்டி அப்த பூர்த்தி கல்யாணம்!

'லைட்' விஷயம்!

"இந்த ஹோட்டலில் காப்பி 'ஸ்ட்ராங்'காவே இல்லை. ரொம்ப 'லைட்டா' இருக்கே!"

"தவறிப் பல பேர்கள் மேலே கொட்டிக் கொண்டு விடுகிறார்கள், ஸ்ட்ராங்கா இருந்தா கறை பட்டுத் துணி பாழாகி விடுகிறது. அதற்குத்தான் இப்படிச் செய்கிறோம்!"

தனிப் பிரகிருதி!

"நான் தனிமையில் தனக்குத்தானே பேசிண்டு இருக்கேன். அதற்கு ஏதேனும் வைத்தியம் இருக்கா?"

"அதற்கு வைத்தியம் இல்லை, அதனால் என்ன? சும்மா பேசிண்டு இருங்கோளேன்!"

"கொஞ்சம் குறைச்சலாகப் பேசும்படி ஏதேனும் கொடுங்களேன். ரொம்பப் பேசி நானே என்னை 'போர்' அடித்துக் கொண்டு விடுகிறேன்!"

சொன்னதைச் செய்தால்....

"இன்றைக்கு உடம்பு கொஞ்சம் சரியாக ஆகிவிட்டது டாக்டர்!"

"மருந்து புட்டிமேல் எழுதியிருந்தபடி மருந்தைப் பார்த்துச்சாப்பிட்டீங்களா?"

"மருந்து புட்டிமேல் எழுதி இருந்ததைப் பார்த்ததனால் தான் சாப்பிடவில்லீங்க. புட்டியிலுள்ள 'கார்க்கை' நன்றாக அழுத்தி மூடிவைக்கவும் என்று எழுதிய் தந்தது. அப்படியே செய்து வைத்து விட்டேன். உடம்பு சரியாக ஆகிவிட்டது, சார்!"

மரியாதை!

"இன்னொரு லட்டு தா!"

"என்ன 'தா'வா?"

"எப்படிச் சொல்லணும்?"

"இன்னொரு லட்டு தாங்கோன்னு சொல்லணும்!"

"அவ்வளவுதானே?"

"மரியாதையாஎப்படிச்சொல்லணும்?"

"அம்மா இன்னொரு லட்டுதாங்கோ."

"உம்! இன்னும் மரியாதையா எப்படிச் சொல்லணும்...?"

"அம்மா தயவுசெய்து இன்னொரு லட்டு தாங்கோ!"

"அப்படி இப்பத்தான் சரியா சொன்னே....நீ நிறையத் தின்னுட்டே. இனிமேல் லட்டு கிடையாது."

லாம் ஒரு விரணமுண்டாகும். ஆனால் வலியோ குத்தலோ இராது.

திடீரென்று அதிசைத்தியம் தட்டுவதால் ஒழுகும் திரவமானது உறைந்து கட்டிவிடத் தொடங்கும். இமயத்தில் குளிர்காலத்தில் கங்கையின் நீர் பனிக் கட்டியாக உறைந்து விடுவதில்லையா? அவ்விதமேதான் தணுப்புத் தட்டியதும் காதிலிருந்து ஒழுகும் திரவம் உறையும்.

ஒழுகுஞ் சீழ் நின்றதைத் தொடர்ந்து காதின் சுற்றுப்புறம், கன்னம், தவடை, தாளின் அடிப்புறமெல்லாம் ஒரு வீக்கம் ஏற்படும். தாளை அசைக்க முடியாது வாயைத் திறந்து சாப்பிட முடியாது. இத்துடன் சிறிது சுரமும் காதில் சகிக்க முடியாத குத்தல் வலி ஆகியவையும் ஏற்படும். அசப்பில் பார்த்தால் பொன்னுக்கு வீங்கியோ என்று தோன்றும். ஆனால் காதில் சீழ் வரும் வழக்கமான கதை உண்டல்லவா? இதைக் கொண்டு தான் இது பொன்னுக்கு வீங்கியல்ல என்று தெரிந்துகொள்ள வேண்டும். சரி, இத்தனை தொந்தரவுகளும் வந்தாயிற்று. இவற்றுக்கு விமோசனம் என்ன?

பரமசிவனின் சடைமுடியில் ஒடுங்கிய கங்கை வெளிவரவில்லை. பகீரதன் பார்த்தான்... "அட நாராயணா! இவ்வளவு கஷ்டப்பட்டும்...." என்று பரமனையே மேலும் துதித்தான். பரமசிவன் தான் க்ஷிப்ர பிரஸாதி யாயிற்றே! "பிரபோ! பரமேஸ்வரா!" என்றது தான் தாமதம். உடனே பிரசன்னமான பரமசிவன் "மதபக்தாக்ரணீ! வத்ஸ!" என்று அன்புடன் அழைத்துப் பகீரதன் வேண்டுதலுக்கு இரங்கித் தன் ஜடையில் கட்டுண்டிருந்த கங்கையைச் சிறுகச் சிறுக ஒழுக விட்டார்.

பூமியைத் தொட்டு-பூப்பரவலில் ஓடத் தொடங்கினாள் கங்கை. சிறிது நேரத்துக்கெல்லாம் பழைய மமதை அவள் உள்ளத்தில் தோன்றியது. இமயத்தின் சாரலில் ஓடிக்கொண்டிருந்தவள் வழியில் தவஞ் செய்து கொண்டிருந்த ஜன்னு மகரிஷியை வெள்ளப் பெருக்கால் அடித்துக்கொண்டு போக முயன்றாள்.

கங்கையின் அசட்டுத்தனத்தைக்கண்டு ஜன்னு மகரிஷி சிரித்தார். இந்த அசட்டுப் பெண்ணுக்கு ஒரு புத்தி கற்பிக்கலாம் என்று எண்ணி, கங்கையின் நீரை அள்ளிக் குடித்துவிட்டார். கங்கை ஜன்னு மஹரிஷியின் குக்ஷியில் அடங்கி விட்டாள்.

மறுபடியும் பகீரதன் கடுந்தபம் புரிந்தான். தபஸினால் எழுந்த தாபம் அவர் உடலையே ஒரு தீப்பிழம்பாக்கிற்று. அவரைச் சுற்றுமுள்ள இடங்களிலும் இவ் வெப்பம் வரலாயிற்று... மஹரிஷியையும் தாக்கியது. அவ்வளவுதான்; இவ் வெப்பம் தாக்கியதும் பனிக்கட்டி போல் ஜன்னுமஹரிஷியின் உதரத்தில்உறைந்து கிடந்த கங்கை உருகித் திரவமானாள். குக்ஷியை நிரப்பினாள். நிரம்பியபிறகு காதின் வழியாக வெளியே பிரவஹிக்கலானாள். ஜன்னுவின் வயிற்றிலிருந்த முட்டலும் அழுக்கமும் குறைந்தது.

ஜன்னு மஹரிஷியின் வயிற்றிலிருந்து பிறந்ததால் கங்கைக்கு ஜான்னவீ என்ற பெயரும் ஏற்படலாயிற்று.

இப்படியாகத்தானே இமயத்தின் பனிக்கட்டிபோல் உறைந்து கிடந்த கங்கையே ஜன்னுவின் காது வழியாகத் தானாகவே பிரவஹிக்கலானாள். எதனால்? [பகீரதனின் தவத்தீயின்] வெப்பத்தால்.

அவ்வாறாயின், மேலே குறிப்பிட்டபடி ஒழுகிக்கொண்டிருந்த சீழ் உறைந்து போய் நின்றுவிடுமானால் தாபஸ் வேகத்தினால் உருகி மறுபடியும் ஒழுகத் தொடங்குவது பெரிய காரியமா? ஒழுகத் தொடங்கினால்....காதின் சுற்றுப்புறத்தின் வீக்கம்—வலி—காது குத்தல் ஜ்வரம் இவை....? யாருக்கு வந்ததோ என்னும்படி குணமாகி விடும். (தொடரும்)


கால்கேட்டின் மூலம் பற்கள்
சொத்தையாவதைத் தடுப்பதோடு
நாள் முழுவதும்
வாய் துர்நாற்றத்தையும்
அகற்றுங்கள்!
ஏனெனில், கால்கேட் பற்பசை சொத்தையையும் துர்நாற்றத்தையும் உண்டாக்கும் கிருமிகளில் 85 சதவிகிதத்தை ஒரேதடவையில் ஒழிக்கிறது!
வழக்கமாக கால்கேட் உபயோகித்தால், அது:
✔ சொத்தையைத் தடுக்கிறது
✔ துர்நாற்றத்தை அகற்றுகிறது
✔ பற்களை அதி வெண்மையாக வைத்திருக்கிறது
COLGATE
TOOTH POWDER
COLGATE
DENTAL CREAM
வெண்ணிற பற்களைப் பெறவும், வாயில் நறுமணம் கமழவும், உலகிலேயே பெரும்பாலான மக்கள் மற்றெல்லா பற்பசைகளையும் விட கால்கேட்டையே பெரிதும் விரும்புகிறார்கள்.

வேங்கையின் மைந்தன்



அகிலன்

இருபத்தேழாம் அத்தியாயம்

தண்டனையும் தந்திரமும்

வீர தீர பராக்கிரமசாலி என்று சொல்லப்படுபவனும்கூட மனிதன்தான். இடம், காலம், சுற்றுப்புறம், சூழ்நிலை. இவை ஒன்றுசேர்ந்து மனிதனுக்குக் கை கொடுப்பதும் உண்டு; மனிதனைக் கை விடுவதும் உண்டு. இளங்கோவும் மனிதன்தானே? இன்று அவை அவனைக் கைவிட்டு விட்டன; காட்டிக் கொடுத்து விட்டன.

இளங்கோவுக்கு இப்போது மரண தண்டனை. வீரன் கோழையிடம் அகப் பட்டுக் கொண்டான். மறைந்து வாழும் மன்னர் மகிந்தரின் ஆணை அவன் உயிரை ஊசலாடச் செய்தது.

மயங்கி விழுந்த ரோகிணி சில விநாடிகளில் சுய உணர்வு பெற்று, இளங்கோவின் முகத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். இளங்கோ அவளைப் பார்க்காமல் குகைக்கு வெளியே நிலவில் முழுகியிருந்த மலைச்சாரலை ஊடுருவிக் கொண்டு நின்றான். மன்னரின் காவலர்கள் அவனைக் கயிற்றால் இறுக்கிப் பிணைப்பதில் சுறுசுறுப்பாக முனைந்து நின்றனர். காவலர்களின் தலைவனான விஜயபாகு அவன் கரங்களை உடலோடு சேர்த்து வைத்துக் கட்டினான். மலைமீதிருந்து உருட்டி விட்ட பிறகு, கீழே விழும்போது கரத்தால் எதையாவது எட்டிப் பிடித்துப் பற்றிக்கொண்டு அவன் உயிர் பிழைத்துவிடக் கூடாதல்லவா?

ஒரு முறையேனும் தன் பக்கம் முகத்தைத் திருப்பித் தன் கண்களைச் சந்திக்க மாட்டானா என்று ஏங்கினாள் ரோகிணி. விநாடிக்கு விநாடி அந்த ஏக்கம் அதிகரித்துத் துடிதுடிப்பாக மாறியது. வாய் திறந்து அவள் பேசா விட்டாலும், அவள் கண்கள் பேசின.

'கொடும்பாளூர் இளவரசே! இருந்திருந்தும் நான் தானா உங்கள் உயிருக்கு எமனாக வந்து வாய்க்க வேண்டும்? நீங்கள்தாம் அந்த ஒற்றரென எனக்குத் தெரியாமல் போய் விட்டதே! தெரிந்திருந்தால் ஒருகாலும் இவ்வளவு தூரம் நடந்திருக்காது, இளங்கோ! உங்களுடைய மரண தண்டனை நிறைவேறுவதற்குள் என்னுடைய நெஞ்சம் வெடித்துச் சிதறி விடும்



போலிருக்கிறது. என்னைச் சற்றுத் திரும்பிப் பார்க்க மாட்டீர்களா? நான் வேண்டுமென்றே உங்களைக் காட்டிக் கொடுக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ள மாட்டீர்களா?'

ரோகிணியின் கண்கள் பேசிய பேச்சைக் கவனிக்கும் நிலையில் இல்லை இளங்கோ. இனியும் தப்பிச் செல்வதற்கு ஏதாவது மார்க்கம் இருக்கிறதா என்று ஆராய்ந்து கொண்டிருந்தான் அவன். ஒரு வழியும் தோன்றவில்லை. நின்ற நிலையிலிருந்து அணுவளவு முன் பின் அசைந்தாலும், அவனைக் குத்திக் கிழிப்பதற்குக் கொடுவாட்கள் கூர்முனையைக் காட்டிக் கொண்டு நின்றன.

மரணத்தைப் புன்னகையுடன் வரவேற்பது ஒன்றுதான் கடைசி வழி. உயிரை ஒரு பொருட்டாக அவன் என்றுமே மதித்ததில்லை. ஆனால், அந்த உயிருக்குள் இப்போது ஒரு மாபெரும் ரகசியம் மறைந்து கொண்டிருக்கிறதே! மணிமுடியின் இருப்பிடத்தை மாமன்னரிடம் சொல்லிவிட்டுச் சாக முடியாதா? அதற்குப் பிறகு ஒரு முறையல்ல; ஓராயிரம் முறை அவன் சாவதற்குச் சித்தமாயிருந்தான்.

"விஜயபாகு! இவனை இழுத்துச் செல்" என்று காவலர் தலைவனிடம் கட்டளையிட்டார் மகிந்தர். "வீரர்கள் எல்லோருமே இவன் பின்னால் சென்று வாருங்கள்; மிகவும் பொல்லாதவன்; தப்பி ஓடினாலும் ஓடி விடுவான்."

"ரோகணத்து அரசர் அவர்களே! தங்களிடம் கடைசியாக ஒரு முக்கியமான செய்தியைச் சொல்ல விரும்புகிறேன்" என்றான் இளங்கோ.

"என்ன?"

"அமைச்சர் கீர்த்தியின் ரகசிய ஓலைகள் எங்கள் சக்கரவர்த்திகளுக்குக் கிடைத்திருக்கின்றன. அவருடைய திட்டங்களில் தங்களுக்கும் பங்கு இருக்குமோ எனச் சக்கரவர்த்திகள் சந்தேகப்படுகிறார்கள். சோழ சாம்ராஜ்யத்தின் நட்பைப் பெறுவதற்கு இன்னும் சிறிது இடம் இருக்கிறது. மணிமுடியைத் திருப்பிக் கொடுத்து விட்டு, சக்கரவர்த்திகளின் விருப்பத்துக்கு இணங்கினால், தாங்கள் இனிமேல் இந்தக் காட்டில் மறைந்து வாழவேண்டு மென்பதில்லை."

கீர்த்தியின் ரகசிய ஓலைகளைப் பற்றிய செய்தியைக் கேட்டவுடன் மகிந்தரின் முகத்தில் அச்சம் படர்ந்தது. ஒரு கணம் யோசனை செய்தார். பிறகு தமது பயத்தை வெளியில் காட்டிக் கொள்ளாமல், "நீ இப்போது தூதுவனில்லை; உளவு பார்க்க வந்தவன். உன் கடைசி விருப்பம் ஏதாவது இருந்தால் சொல்; எனக்கு யோசனைகள் சொல்லித் தர வேண்டாம்" என்றார்.




"கடைசி விருப்பமா?" சிரித்துக் கொண்டே ரோகிணியைத் திரும்பிப் பார்த்தான் இளங்கோ. அந்தப் பார்வை ரோகிணியின் இதயத்தைப் பிளந்தெடுத்து முறுக்கிப் பிழிந்தது. 'என்னைப் பார்க்க வேண்டுமென்பதுதான் இவருடைய கடைசி விருப்பமா? இதுவரையில் என்னை அலட்சியம் செய்தவர் இப்போது எதற்காக என் பக்கம் திரும்பிச் சிரிக்கிறார்?' என்று நினைத்தாள் அவள்.

"ஆமாம்; கடைசி விருப்பமும் ஒன்று இருக்கிறது" என்றான் இளங்கோ. "வெற்றியை எட்டிப் பிடிக்கும் தறுவாயில் நான் இடறி விழுந்து இறந்து விட்டேன் என்ற செய்தியை எங்கள் சக்கரவர்த்திக்குத் தெரியப்படுத்த வேண்டும். 'வெற்றி அல்லது வீர மரணம்' என்று ஆசி கூறி அனுப்பிய என் தந்தையாருக்கு அவர் எனக்கு ஏற்பட்ட முடிவைத் தெரிவித்து விடுவார்."

மன்னர் மகிந்தரிடம் அவன் இந்த விருப்பத்தை வெளியிடவில்லை. யாரிடம் வெளியிடுகிறான் என்று ரோகிணி புரிந்து கொண்டு விட்டாள். 'அவன் மரணத்துக்குக் காரணமாக இருக்கும் நம்மிடமே இந்த வேண்டுகோள் விடுகிறானா?'

மகிந்தரின் முகத்தில் பரிகாசம் தாண்டவமாடியது. "ஓ! உனக்கு நான் தண்டனையளித்த செய்தி உன் சக்கரவர்த்திக்கு எட்ட வேண்டுமென்று பார்க்கிறாயா? ஒற்றா! நீ மிகவும் தந்திரசாலி தான். ஆனால் உன்னுடைய இந்த விருப்பம் ஒருகாலும் நிறைவேறப் போவதில்லை." படைத் தலைவன் விஜயபாகுவை நோக்கித் தலையசைத்தார் மன்னர் மகிந்தர்.

குகையிலிருந்து இளங்கோவை இறக்கி விட்டு அவனை நடத்திச் சென்றார்கள் காவலர்கள். கொடும்பாளூர் இளவரசன் என்ற பெயரே அவர்களுக்கு இதுவரையில் சிம்ம சொப்பனமாக இருந்ததால், அவனை ஒழித்துக் கட்டுவதில் எல்லோருக்குமே இப்போது பேரானந்தம். காவலர்களில் ஒருவன்கூடக் குகையில் பின் தங்கவில்லை.



மகிந்தர் தமது படுக்கையில் அமர்ந்திருந்தார். வைத்த கண் வாங்காமல் இளங்கோ சென்ற திசையைப் பார்த்துக் கொண்டு குகையின் விளிம்பில் ரோகிணி நின்றாள். குகைக்கு வெளியே ஒரு பாறையில் கந்துலன் மட்டிலும் தனியாக அவர்களுக்குக் காவலாக உட்கார்ந்திருந்தான்.

"ஏனப்பா, இந்த ஒற்றனுக்குத் தண்டனையளித்த செய்தி அவனைச் சேர்ந்தவர்களுக்குத் தெரிந்தால் என்ன?" என்று தன் தந்தையிடம் கேட்டாள் ரோகிணி.

"தெரிந்தால் என்னவா! சாதாரண ஒற்றனா இவன்? அந்தச் சக்கரவர்த்தியின் வலது கரமே இவன்தானாம். இவனை நாம் தண்டித்திருப்பது தெரிந்தால் அவர்கள் நம்மைச் சும்மா விடுவார்களா? நாளைக்கே நம்மைப் பழிக்குப் பழி வாங்கி விடமாட்டார்களா? பிறகு உன் தாயாரின் கதி என்ன ஆகுமோ, தெரியாது. நம்மைச் சேர்ந்தவர்கள் எல்லோருமே அவர்களிடம் அகப்பட்டு என்ன பாடுபடுவார்களோ, தெரியாது."

"அப்படியானால் மரண தண்டனை அடைந்தவனின் கடைசி ஆசையைக்கூட நம்மால் நிறைவேற்ற முடியாதென்று சொல்லுங்கள்."

"ரோகிணி!" என்று அதட்டிவிட்டு, "விளையாட்டுப் பெண்ணைப் போல் நீ பேசுகிறாயே! அவனுடைய கடைசி ஆசைதான் நம் கடைசி முடிவு. பிறகு நாம் நிர்மூலமாகி அழிந்து விடுவோம்" என்று கூறினார் மகிந்தர்.

தொலை தூரத்தில் தெரிந்த அந்தச் சிறிய கூட்டம் ரோகிணியின் பார்வையிலிருந்து மறையத் தொடங்கியது. இளங்கோவும் இந்த உலகத்திலிருந்தே மறைந்துவிடப் போகிறானா? ஏதாவது அதிசயங்கள் நடந்து அவன் உயிர் பிழைக்கக் கூடாதா என்று ஏங்கினாள் ரோகிணி. அவளுடைய இரு கண்களும் குளங்களாக மாறின.

கண்ணீர் பெருக்கிப் பலனில்லை. அதிசயங்கள் தாமாக நடப்பதாகவும் தோன்றவில்லை. ஒவ்வொரு கணத்திலும் அவன் மரணத்தை நோக்கி ஒவ்வொரு அடி எடுத்து வைத்துக் கொண்டிருந்தான். தன் தந்தைக்குத் தெரியாமல் கண்ணீரை மெல்லத் துடைத்து விட்டுக் கொண்டாள் ரோகிணி.

காவலர்களுக்கு மத்தியில் ஏறுநடை போட்டுச் சென்ற இளங்கோவின் மனம் அவனது உயிரிலும் மேலான ஒரு கடமையை நினைத்துக் கலங்கியது. உயிருக்காகக் கலங்கவில்லை அது.—மணிமுடியின் இருப்பிடத்தை மாமன்னரிடம் தெரிவிக்காமல் தான் மாண்டு மடிய வேண்டியிருக்கிறதே!

'மலைச்சாரலில் வீசிக் கொண்டிருக்கும் மென்காற்றே! நீ எனக்காக ஒரு பேருதவி செய்வாயா? மாமன்னர் இராஜேந்திரரிடம் தூது சென்று, என் மனத்திலிருக்கும் பொக்கிஷத்தை இறக்கி வைப்பாயா? இளங்கோ எந்த இடத்தில் இறந்து விழுந்தானோ, அந்த இடத்துக்கு வெகு அருகில்தான், ஒரு சுனைக்குள்ளே உள்ள சிறு குகையில் நாங்கள் தேடி வந்த தமிழ்நாட்டுச் செல்வம் இருக்கிறது என்பதைத் தெரிவிப்பாயா?'

பிறகு தன்னைத்தானே நினைத்துப் பரிகசித்துக் கொண்டான் இளங்கோ. 'ஹூம்! ரோகணத்து இளவரசியே என்னைக் காட்டிக் கொடுத்து விட்ட போது, அந்த நாட்டில் வீசும் காற்றாகிய நீயா எனக்கு உதவி செய்யப் போகிறாய்! உன்னிடம் போய் நான் கெஞ்சிக் கேட்கிறேன், பார்!'

வேகமாக நடந்து கொண்டிருந்தவன் திடீரென்று நின்று, "அகால மரணமடைந்தவர்கள் ஆவிகளாக மாறுவதுண்டல்லவா!" என்று காவலர் தலைவனிடம் கேட்டான். இதைக் கேள்வியுற்றவுடன் சுற்றியிருந்த வீரர்களில் சிலர் வெலவெலத்துப் போனார்கள்.

"இப்படிச் சொல்லி எங்களைப் பயமுறுத்தப் பார்க்கிறாயா?" என்று திருப்பிக் கேட்டான் விஜயபாகு.

"அவனுக்குச் சித்தப்பிரமை பிடித்து விட்டது; உளறுகிறான்!" என்று கூட்டத்தில் யாரோ முணுமுணுத்தார்கள். ஏச்சுப் பேச்சும், எக்காளச் சிரிப்பொலியும் அதைத் தொடர்ந்து வெளி வந்தன. "உன்னுடைய பிசாசு எங்களை ஒன்றும் செய்து விடாது; எங்களுக்கு மந்திரமும் தெரியும்" என்றான் ஒருவன்.

'அப்படியானால் நான் இறந்தவுடன் ஆவியாக மாறி, மணிமுடி இருக்கும் இடத்தை மாமன்னருக்கு அறிவித்து விடுவேன். கூடுமானால் அதை எடுத்துக் கொண்டே போய் அவரிடம் கொடுத்து விடுவேன்' என்று உறுதி செய்து கொண்டான் இளங்கோ. இந்த முடிவுக்குப் பிறகு அவனுடைய நடையில் தனியான ஒரு மிடுக்கு இருந்தது. 'உடனடியாக இதே கணத்தில் அவர்கள் வாள் வீசிக் கொன்று தொலைக்கக் கூடாதா?'

குகைக்குக் கிழக்கே ஒரு மூலையில் கூர்மையாக நீட்டிக் கொண்டு நின்றது, ஒரு பெரிய பாறை. அதன் மேலேறிச் சென்றார்கள் காவலர்கள். உற்சாகத்துடன் இளங்கோ அதன் விளிம்பை நோக்கி வந்தான். அவர்கள் தன்னைப் பிடித்துத் தள்ளும் வரையில் எதற்காகக் காத்திருக்க வேண்டும்? தானாகக் குதித்து விட்டால் என்ன?

ஒருகணம் கண்களை மூடித் தன்னைப் பெற்றெடுத்த தங்கத் தமிழ்த் திருநாட்டுக்குத் தன் இறுதி வணக்கத்தைச் செலுத்தினான். 'வெற்றி அல்லது வீர மரணம்' என்று கட்டிக் கொடுத்த


அக்டோபர்
வெளியீடு
ஸ்வஸ்திஸ்ரீ யின்
ராஜ
சேவை
டைரக்ஷன்...K.காமேஸ்வரராவ்-கேமரா..M.A.ரஹ்மான்
தயாரிப்பு...N.திருவிக்ரம ராவ்
ஸ்டுடியோ...விஜயா வாஹினி

தந்தையாரையும், கண்ணீருடன் வழி அனுப்பிய அன்னையாரையும் நினைத்துக் கொண்டான். நெற்றியிலே திலகமிட்ட பெண் திலகம் அருள்மொழி நங்கையை அப்போது அவனால் மறக்க முடியவில்லை.

"வாழ்க, சோழ வளநாடு! வாழ்க வேங்கையின் மைந்தன்!" என்று தன் உயிரனைத்தையும் சேர்த்து விண்ணதிர வாழ்த்தொலி எழுப்பினான் இளங்கோ.

அதன் எதிரொலியைக் கிழித்துக் கொண்டு, மற்றொரு குரல் ஒன்று திடீரென்று குன்றின் உச்சியை நாடிப் பறந்து வந்தது. ஆம், அதிசயம் ஒன்று அந்த வேளையில் நடக்கத்தான் செய்தது! ரோகிணி ஏங்கி ஏங்கி எதிர்பார்த்த அதிசயந்தானா அது?

"விஜயபாகு! நிறுத்து! நிறுத்து!"

மன்னர் மகிந்தரின் குரலைக் கேட்டவுடன், இளங்கோவைத் தடுத்து நிறுத்திப் பரபரவென்று பின்னால் இழுத்தான் விஜயபாகு. காவலர் அனைவருமே ஏமாற்றத்துடனும் ஒன்றும் புரியாமலும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு திகைக்கலானார்கள்.

"தண்டனையை நிறைவேற்றாதே!" என்று திரும்பத் திரும்பக் குரல் கொடுத்தபடியே இருளில் தட்டுத் தடுமாறி ஓடிவந்து கொண்டிருந்தார் மன்னர். இளங்கோவைப் பத்திரமாக அழைத்துக் கொண்டு வரச் சொல்லி விட்டு விஜயபாகுவும் விரைந்து கீழே இறங்கி வந்தான்.

"அரசே! என்ன இது?"

மகிந்தருக்குக் கைகால்கள் விளங்கவில்லை. அவர் பதறினார்; பதைபதைத்தார்; நடுநடுங்கினார். "மற்றொரு ஒற்றன் வந்திருக்கிறான், விஜயபாகு! மற்றொரு ஒற்றன்!"

"அதனால் என்ன? எதற்காக நாம் இதை நிறுத்த வேண்டும்?"

"விஜயபாகு! உனக்கு ஒன்றுமே தெரியாது. பகைவர்களுக்குச் செய்தி எட்டினால் பிறகு பட்டமகிஷியைப் பழி வாங்கி விடுவார்கள்! ரோகணத்தையே சூறையாடி விடுவார்கள்!"

இதற்குப் பிறகும் மன்னர் வாளாவிருக்கவில்லை. சுற்றுமுற்றும் திரும்பிப் பார்த்துக் கொண்டே விநோதமான முறையில் குரல் கொடுக்கலானார். அருகில் விஜயபாகு நிற்கும்போதே, தூரத்தில் நிற்பவர்களிடம் கூறுவதுபோல் சத்தமிட்டார். "தண்டனையை நிறைவேற்ற வேண்டாம்! அவனை அழைத்துக் கொண்டு வாருங்கள்! தண்டனையை நிறைவேற்ற வேண்டாம்!"

அச்ச மிகுதியினால் இப்படி அவர் அவதியுறுகிறார் என்று நினைத்த விஜயபாகு, "அரசே! தங்களுடைய மூதாக் குரலைக் கேட்டவுடன் நாங்கள் தங்கள் கட்டளைக்குப் பணிந்து விட்டோம். அப்படியிருக்கும் போது..." என்று தயங்கியபடியே கூறினான்.

காரணத்துடன்தான் அவர் அப்படி நடந்து கொள்கிறார் என்பது அவனுக்கு மறு கணத்திலேயே விளங்கி விட்டது. மகிந்தர் விஜயபாகுவை அருகில் அழைத்து அவன் காதுகளில் மெல்லக் கூறினார்: "புதிய ஒற்றன் இப்போது தான் குகைக்குள்ளிருந்து எங்கோ தப்பிச் சென்றிருக்கிறான். கொடும்பாளூர் இளவரசனை நாம் கொல்லவில்லை என்பது அவனுக்குத் தெரிய வேண்டாமா? அவன் காதுகளில் விழவேண்டுமென்றுதான் உரத்துக் கூவுகிறேன்"

இதைக் கேட்ட விஜயபாகுவும் அடித்தொண்டையால் கத்தி, தன்னுடைய



வீரர்களுக்குக் கட்டளை பிறப்பிக்கலானான். "அவனைப் பத்திரமாகக் குகைக்கு அழைத்துக் கொண்டு செல்லுங்கள்; அவனுக்கு ஒரு துன்பமும் கொடுக்க வேண்டாம்!"

குகையின் வாயிலில் நின்றுகொண்டிருந்த ரோகிணி, இளங்கோவை வரவேற்பதற்காகக் காத்துக் கொண்டிருந்தவள்போல், அவன் வரவைக் கண்டவுடன் அவனை நோக்கி ஓட்டமும் நடையுமாகக் குதித்து வந்தாள். அவளுடைய விழிகள் இரண்டும் அமாவாசை இரவின் விண்மீன்களெனப் பிரகாசித்தன.

மகிந்தர் விஜயபாகுவை அணுகி, "வீரர்கள் சிலரை அனுப்பி அந்த மற்றொரு ஒற்றனையும் தேடிப் பிடிக்கச் சொல்" என்றார். "அவன் கிடைத்து விட்டால் இருவருக்குமாகச் சேர்த்து மரண தண்டனை விதித்து விடுவோம். அவன் கிடைக்காவிட்டால் நாம் மிகவும்

எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டியது அவசியம்.''

மற்றொரு ஒற்றனைப் பற்றிய பரபரப்பான செய்தி இளங்கோவின் காதுகளுக்கும் எட்டியது. யார் அந்த ஒற்றனென்று அவனுக்குத் தெரியவில்லை. ரோகிணிக்குத் தெரிந்திருக்கக் கூடுமென்று நினைத்தான் இளங்கோ. ஆனால் அவனும் அவளிடம் கேட்கவில்லை; அவளும் சொல்லவில்லை. ஒருவேளை, வல்லவரையர் வந்தியத்தேவர் அங்கு வந்திருக்கக் கூடுமோ என்று ஐயமுற்றான்.

இருபத்தி எட்டாம் அத்தியாயம்

கூரம்பு பாய்ந்தது!

உண்மையில் வல்லவரையர் வந்தியத் தேவரோ, அல்லது வேறெந்த சோழ நாட்டு ஒற்றனோ அங்கு வரவில்லை. ரோகணத்து இளவரசி தானாக ஒரு கற்பனை ஒற்றனை உருவாக்கி அவனை அந்தப் பயங்கரமான பிரதேசத்தில் உலவ விட்டிருந்தாள். அவளுடைய ஒற்றனுக்கு உருவமும் இல்லை; உயிரும் இல்லை. மகிந்தரின் காவலர்கள் அவனை அந்த இரவு முழுவதும் தேடினாலும் அவன் அவர்களின் கண்களுக்குத் தென்படவா போகிறான்?

தான் செய்த தந்திரம் பலித்து விடும் என்ற நம்பிக்கை ரோகிணிக்கு இல்லை. ஆனால் அது எப்படியோ பலித்து விட்டது. அதை நினைத்து நினைத்துத் தனக்குள் சிரித்துக் கொண்டிருந்தாள் அவள். இளங்கோ ஒன்றும் புரியாதவனாகத் தன்னுடைய நிலையை எண்ணி மகிழ்ச்சியும் துயரமும் மாறி மாறி அடைந்து கொண்டிருந்தான்.

வல்லவரையர் வந்திருந்தால் மணிமுடியின் இருப்பிடத்தைத் தெரிந்து கொண்டிருப்பார் என்பதை எண்ணி மகிழ்ந்தான். பொறிக்குள் அகப்பட்ட புலிபோல் தான் ரோகிணிக்கு முன்னால் செயலற்றிருப்பதை நினைத்து வருந்தினான். இறுக்கமாகக் கட்டப்பெற்றிருந்த கயிறு அவன் தசைகளை மென்று கொண்டிருந்தது. அந்த வலியை அவன் தாங்கிக்கொண்டாலும், அவமானத்தை அவனால் தாங்க முடியவில்லை. 'ரோகிணி என்னைப் பார்த்துத்தான் தனக்குள் ஏளனமாகச் சிரித்துக் கொள்ளுகிறாளா?' கொன்று விடுவதைப் போல் அவளைக் கோபமாக விழித்து நோக்கினான்.

சுற்றிப் பார்த்துத் தங்களை யாரும் கவனிக்க வில்லை என்பதைக் கண்ட ரோகிணி, "உங்களைத் தவிர வேறு எந்த ஒற்றனும் இங்கே வரவில்லை!" என்றாள் ரகசியமான குரலில்.

"என்ன?"

தன் உதட்டில்விரலை வைத்துக் காட்டி அவனை அமைதியாக இருக்கும்படி எச்சரிக்கை செய்தாள் ரோகிணி. உண்மையைப் பிறகு சொல்வதாகச் சாடை காட்டினாள். 'என்னவாக இருந்தால் என்ன? கோழையான மன்னரின் குயுக்தமான அரச தந்திரங்களில் இதுவும் ஒன்றாக இருக்கும்' என்ற எண்ணம் இளங்கோவுக்கு.

ஆனால், உண்மைதான் என்ன?

இளங்கோ அவளுடைய கண்களிலிருந்து மறைந்த சிறிது நேரத்துக்கெல்லாம், குகையின் பின்புறத்துக்குச் சென்று ஆர்ப்பாட்டம் செய்யத் தொடங்கினாள் ரோகிணி. பாறையின் மேலிருந்த சிறிய கல் ஒன்று பயங்கரமான சத்தத்துடன் கீழே விழுந்து உருண்டது. "ஒற்றன்! இன்னொரு ஒற்றன்!" என்று உளறியடித்துக் கொண்டு ஓடி வந்தவள், எரிந்து கொண்டிருந்த விளக்கையும் தட்டி விட்டு, அவள் தந்தையின் மடியில் பதறி விழுந்தாள்.

"ஓடுகிறானப்பா! ஓடுகிறானப்பா! போய்ப் பாருங்கள்!" என்று சொல்லிக் கொண்டே, அவரை எழுந்திருக்க விடாமல் சாகசம் செய்தாள். கடைசியில் தந்தையும் மகளும் நடுநடுங்கிக் கொண்டே எழுந்து சென்றனர். அதற்குள் வாசலில் அமர்ந்திருந்த கந்துலனும் அவர்களுடைய துணைக்கு வந்து சேர்ந்து விட்டான்.

"அதோ பாருங்கள்! அதோ பாருங்கள்!" என்று கூவினாள் ரோகிணி. "புதருக்கு வெளியே அவன் தலையைப் பாருங்கள்!"

ஆம்! புதர்கள் அசைந்தன; கற்கள் உருண்டன; பயந்தவர்களின் கண்களுக்கு ஒற்றன் மறைந்து மறைந்து ஓடுவது போலவே தோன்றியது. "கந்துலா, பிடி அவனை! பிடி அவனை!" என்று கூச்சலிட்டார் மகிந்தர். கந்துலனுக்கோ தனியாக அந்த ஒற்றனைப் பின்பற்றிச் செல்வதற்குத் தயக்கம். மேலும் அவனுடைய கண்களும் அவ்வளவு கூர்மையான கண்களல்ல.

"எனக்குத் தெரிய வில்லை, அரசே! எங்கே ஓடுகிறான் அவன்?"



உங்கள் பல் டாக்டர் 'கோலினஸ்' முறை பற்களின் ஆரோக்கியத்திற்கு உகந்தது எனக் கூறுவார்



புதிய சேர்க்கை 'கோலினஸ் சூப்பர் ஒயிட்' பற்பசை அதன் 3 சுத்திகரணிகள் மூலம் பற்களை சுத்தம் செய்வதுடன் அவற்றைப் பாதுகாக்கிறது

இது புதியது! இது சிறந்தது! ஏனெனில், 'கோலினஸ் சூப்பர் ஒயிட்' பற்பசை அளிக்கும் நுரையில் சாதாரணமாகவுள்ள 2 சுத்திகரணிகளுக்குப் பதில் 3 சுத்திகரணிகள் உள்ளன. இந்த அதிகப்படியான சுத்திகரணியுள்ள பற்பசையினால் பல் துலக்கும்போது பற்களிடையிலிருக்கும் சொத்தைப் பற்கள் ஏற்படுவதற்குக் காரணமான உணவுத் துகள்கள் அகற்றப்படுவதுடன் உங்கள் பற்களை இயற்கையான வெண்மையுடனும் பிரகாசத்துடனும் இருக்கச் செய்கிறது. வேறெந்தப் பற்பசையும் உங்களுக்கு இதைவிட அதிக திருப்தியை அளிக்க முடியாது.

'கோலினஸ் முறை' உங்களுக்கு அதிக ஆரோக்கியமான பற்களை அளிக்கும்

உங்கள் பல் டாக்டரைக் கேளுங்கள்

1. சமமான பிரஷ்ஷின்மீது அரை அங்குல அளவுமட்டும் 'கோலினஸ் சூப்பர் ஒயிட்' பற்பசையை உபயோகிக்கவும்.
2. காலையிலும் இரவிலும் இரண்டு நிமிஷங்களுக்கு உங்கள் பற்களின் எல்லா பாகங்களையும் நன்கு கவனித்து துலக்கவும்.
3. இரவில் பல் துலக்குவது மிகவும் அவசியம், ஏனெனில், அது சொத்தைப் பற்களுக்கு முக்கிய காரணமான உணவுத் துணுக்குகள் பற்களிடையில் தங்கிவிடாமல் வெளியேற்றுகிறது.
4. உங்கள் பல்டாக்டரிடம் வருஷத்திற்கு இருமுறையாகிலும் சென்று பற்களைப் பரிசோதித்துக்கொள்ளுங்கள்.

கோலினஸ் ஆரோக்கியமான பற்களை அளிக்கும்

Registered User: GEOFFREY MANNERS & CO. PRIVATE LTD.

"அப்பா! கந்துலன் கோழையப்பா! பயந்து சாகிறான் அவன்" என்று அவன் மேல் எரிந்து விழுந்தாள் ரோகிணி.

"இல்லை, ரோகிணி! அவனைக் குறை சொல்லாதே. பகலிலேயே அவனுக்குப் பார்வை குறைவு" என்று அவனுக்குப் பரிந்து பேசினார் மகிந்தர். கூர்ந்த பார்வையுடைய அவருக்கு ஒரு ஒற்றனல்ல, ஒன்பது ஒற்றர்கள் தட்டுப் பட்டார்கள். தமது மகள் கூறிய வார்த்தைகளை நம்பி, அவன் ஒருவனைத் தான் இருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்து விட்டார்!

அதற்குள் ரோகிணி அந்தக் குகையே உருகிக் கசியும்படியாகக் கதறி அழத் தொடங்கினாள். "நானாவது போய் அவனைப் பிடித்துக் கொண்டு வருகிறேன். இல்லா விட்டால், நாம் எல்லோருமே சர்வ நாசமாகி விடுவோம். இவன் போய் இந்த மரண தண்டனையைப் பற்றிச் சொல்லிவிட்டால், பிறகு அம்மாவின் கதி என்ன ஆகும்?...அப்பா! நம்முடைய நாட்டுக்கும் ஆபத்து; குடும்பத்துக்கும் ஆபத்து! நான் போய் அவனைப் பிடிக்கட்டுமா? இல்லை, நீங்கள் போகிறீர்களா, அப்பா?"

"கந்துலா! ரோகிணியைப் பார்த்துக் கொள். இதோ, நானே போகிறேன்" என்று சொல்லிக் கிளம்பினார் மகிந்தர்.

அவர் எங்கு போவார் என்பது ரோகிணிக்குத் தெரியும். ஒற்றனைப் பின் தொடர்ந்து செல்லக் கந்துலனே தயங்கியபோது, அவர் பாவம், வேறென்ன செய்வார்? நேரே இளங்கோவை வீரர்கள் இழுத்துச் சென்ற திக்கில் ஓடினார். தன்னை ஒற்றன் பின்பற்றுகிறான் என்று நொடிக்கொருமுறை திரும்பிப் பார்த்துக் கொண்டே பறந்தார். "தண்டனையை நிறுத்துங்கள்!" என்று அவர் கொடுத்த குரலும், அந்தக் குரலின் எதிரொலியும் ரோகிணியின் செவிகளில் தேன் துளிகளாகச் சிதறின. 'அப்பாடா!' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே தக்கசமயத்தில் தனக்குக் கைகொடுத்த கண்ணீர்த் துளிகளைத் துடைத்து விட்டுக் கொண்டாள்.

மாண்டவன் மீண்ட அதிசயத்தைக் கண் இமைத்துப் பார்க்கப் பிடிக்கவில்லை ரோகிணிக்கு. 'கண் இமைத்துக் காண்பார்தம் கண் என்ன கண்ணே!' என்றபடி, அவனுடைய தோற்றத்தை விழுங்கிப் பேரானந்த மடைந்து கொண்டிருந்தாள் அவள். தன்னுடைய திறமையால் உயிர் பெற்று மீண்டவன் என்ற கர்வம் அவள் உள்ளத்தில் பொங்கி எழுந்து விம்மியது.

இல்லாத ஒற்றனைத் தேடாத இடத்திலெல்லாம் தேடிக் களைத்தார்கள் மகிந்தரின் காவலர்கள். புதர்கள், செடிப் பத்தைகள், பாறைப் பிளவுகள் எங்கெல்லாமோ புகுந்து பார்த்தார்கள். இருளில் இடந் தடுமாறித் தங்களுக்குள் ஒருவரை யொருவர் ஒற்றனென்று எண்ணிப் பிடித்து ஏமாந்தார்கள். மூன்றும் சாமம் வரையில் தேடி விட்டுக் களைத்துப் போய்க் குகைக்குத் திரும்பினார்கள்.

குகைக்குள்ளே ஒருமூலையில் இளங்கோ படுத்து உறங்குவதுபோல் குறட்டை விட்டான். இப்போது அவன் கால்களும் கட்டப்பெற்றிருந்தன. உடல் முழுதும் பிணைக்கப்பட்டிருந்த நிலையிலும் அவன் உறங்குவதைக் கண்டு வியப்புற்றார் மகிந்தர். ரோகிணியும் தன் தந்தையின் அருகில் முடக்கிக் கொண்டு உறங்குவது போல் கிடந்தாள். மன்னரோ விழிப்புக்கும் உறக்கத்துக்கும் இடையில் அகப்பட்டு மன்றாடிக் கொண்டிருந்தார்.

"எங்கு தேடியும் ஒற்றனைக் காணவில்லை, அரசே!" என்றான் காவலர் தலைவன் விஜயபாகு.

"கண்டுபிடிப்பது மிகவும் கடினந்தான். இந்த வேளையில், இதைப்போன்ற ஓர் இடத்தில் அவனை எப்படித் தேடுவது? போனது போகட்டும். பொழுது விடியும் வரையில் வீரர்களைச் சற்று விழிப்போடு இருக்கச் சொல்."

வீரர்களை விழிப்போடிருக்கச் சொல்லியவர் தம்முடைய விழிப்புக்கு விடை கொடுத்தார். விஜயபாகுவும் அரசரின் ஆணையை அப்படியே சொல்லுக்குச் சொல் நிறைவேற்றி வைத்தான். அதாவது மன்னரின் கட்டளையை மற்றவர்களிடம் சொல்லி விட்டு, உட்கார்ந்தவாறே கண்களை மூடினான். மன்னர் அவனை விழித்துக் கொண்டிருக்கச் சொல்லவில்லையல்லவா?

மூன்றும் சாமமாகி விட்டது. தேடிக் களைத்த அலுப்பில் மற்றவர்களும் தங்கள் தலைவனின் சொல்லைப் பின்பற்றாமல் செயலைப் பின்பற்றலானார்கள்.

குகைக்குள்ளே இருந்த இருவருக்கு மட்டிலும் நித்திராதேவியின் அன்பு கிடைக்கவில்லை.

இளங்கோவின் கட்டப் பெற்றிருந்த கரங்களை நாடி மற்றொரு இளம் கரம் நகர்ந்தது. வாழைக் குருத்தைப் போல் மிருதுவாகவும் குளுமையாகவும் இருந்த அந்தக் கரத்தில் ஒரு சிறு கத்தி இருந்தது. மெல்ல அந்தக் கரம் தன் கத்தியால் சத்தம் செய்யாமல் இளங்கோவின் கைக்கட்டை அறுத்து விட்டது. பிறகு கத்தியை அவனிடமே கொடுத்தது.

தன் தளைகளிலிருந்து விடுபெற்ற இளங்கோ இருளை ஊடுருவிக் கொண்டு வலது புறம் திரும்பிப் பார்த்தான்.

இரண்டே இரண்டு விழிகள் மட்டிலும் சுடர் மணிகள் போல் புலப்பட்டன. மெல்ல மெல்ல அந்த விழிகள் அவன் முகத்தை நெருங்கி வந்தன. அவன் தன் காதருகில் புத்தம் புது மாந்தளிர்களென இரு இதழ்கள் துடிதுடிப்பதை உணர்ந்தான். என்ன சொல்கின்றன அவை?

"இளவரசே! உங்கள் தண்டனைக்கு நானே காரணம் என்ற பழியை இனிமேல்என்மீது சுமத்தமாட்டீர்களல்லவா? இங்கிருந்து விரைந்து சென்றுவிடுங்கள்."

மாந்தளிர்களின் துடிப்பு நின்றது. நன்றிப் பெருக்கால் இளங்கோவின் விழிகளில் நீர்த் துளிகள் கொப்பளித்தன. அன்றொரு நாள் அரண்மனையில் ரோகிணியின் கரங்களைப் பற்றித் தன் கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டுமென்று அவன் துடித்தானல்லவா? அன்று அது நிறைவேறவில்லை.

இன்றுகூட இளங்கோவுக்குத் தன்னைக் காப்பாற்றிய காரணத்தால் மட்டும் அவளிடம் நன்றி ஏற்படவில்லை. உயிரைத் திருப்பிக் கொடுக்கிறாள் என்பதும் உண்மைதான். ஆனாலும் அந்த உயிரின் மதிப்பைத் தெரிந்து கொண்டே திருப்பிக் கொடுக்கிறாள். மணிமுடியைத் திருப்பிக் கொடுத்தாலும், அதன் இருப்பிடத்தைத் தெரிந்துகொண்டவனின் உயிரைத் திருப்பிக் கொடுத்தாலும் ஒன்றுதானே?

வெறி கொண்டவனைப்போல் அவள் கரங்கள் இரண்டையும் பற்றி இழுத்துத் தன் கண்களில் ஒற்றிக் கொண்டான் இளங்கோ. அவனுடைய வெம்மை நிறைந்த கண்ணீர்த் துளிகள் ரோகிணியின் விரல்களில் பட்டு அவளை மெய் சிலிர்க்க வைத்தன. அந்தச் சின்னஞ் சிறு அதிர்ச்சியிலிருந்து அவள் மீள்வதற்குள் அவன் எங்கோ மாயமாக மறைந்து போய் விட்டான்.

அவன் போனபிறகு, ரோகிணியின் கண்கள் ஊற்றுப் பெருக்கெடுத்துப் படுக்கை முழுவதும் நனைத்தன. அவன் தன்னை விட்டுப் போனதற்காக அவள் அழவில்லை. அவனை அப்படிப் போக வைத்ததற்காக அழுதாள்.

'ரோகணத்துக்குத் துரோகம் செய்து விட்டேன்! தாய்த்திரு நாடு காலங் காலமாகப் போற்றி வைத்திருந்த ரகசியத்தைக் காட்டிக் கொடுத்து விட்டேன்! எந்த மலை உச்சியிலிருந்து இளங்கோவைத் தள்ளப் பார்த்தார்களோ, அதே மலை உச்சியிலிருந்து கீழே விழுந்து இறந்தால்கூட என் துரோகத்துக்குப் பிராயச்சித்தமாகாது!' என்று அவள் மனம் துடிதுடித்து அலறியது.


பின்னர், தன்னைத் தானே அவள் ஒரு விதமாகத் தேற்றிக் கொண்டாள். 'அவர்களுக்குரிய பொருளை அவர்கள் எடுத்துக் கொள்வதில் தவறில்லை. மாமன்னர் இராஜேந்திரர் தந்தையாரின் முடியை என்னிடமே கொடுத்து விடவில்லையா? இந்தக் காட்டில் இப்படி வாழ்வதைவிட அவர்களுடன் உறவு கொண்டு நாட்டைப் பெறுவதே மேல். இதை அப்பாவிடம் சொல்ல வேண்டும். பொழுது புலர்ந்தவுடன் அப்பாவுக்கு எடுத்துச் சொல்லி அவர் மனத்தை மாற்ற வேண்டும்.'

பொழுது புலர்ந்து சிறிது நேரம் சென்ற பின், இளங்கோவைக் காணாததால் மற்றவர்களுக்கு ஏற்பட்ட பரபரப்பு குறைந்தவுடன், ஏதுமறியாதவள் போல் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள் ரோகிணி. விஜயபாகு, கந்துலன் இன்னும் மற்ற வீரர்கள் தாம் இளங்கோவைக் காணவில்லை என்பதற்காக மிகவும் துடித்துக் கொண்டிருந்தார்களே தவிர, மன்னர் மகிந்தர் அமைதியாகவே காணப்பட்டார்.

"அவன் போனதற்காகக் கலக்கமுறுகிறீர்கள். நானே அவனைப் பொழுது விடிந்தவுடன் அனுப்பிவைக்க நினைத்தேன். அதற்குள் அவன் அவசரப்பட்டு விட்டான்" என்றார் மகிந்தர்.

"அவனை அனுப்பி வைப்பதா!"—விஜயபாகுவின் வியப்பொலியில் மற்றவர்களும் பங்கு கொண்டார்கள்.

"ஆமாம், சிறிது நேரத்தில் நாமெல்லோருமே கப்பகல்லகத்துக்குப் புறப்படுகிறோம். குதிரைகளைச் சித்தப்படுத்தி, புறப்படுவதற்கான ஆயத்தங்களைச் செய்யுங்கள்" என்றார் மகிந்தர். பிறகு கந்துலனைப் பார்த்து, "நீ முதலில் சென்று நம்முடைய வரவைச் சோழநாட்டுச் சக்கரவர்த்தியிடம் அறிவித்துவிடு; நீ போய்ச் சேர்ந்த ஒரு நாழிகைக்குள் நாங்கள் வந்து விடுவோமென்றுசொல்."



அதிகரித்து வரும் பட்டினிப் பிரச்னைக்கு ஒரு கனிசமான நிவாரணமாகவும், பெருவாரியான மக்களின் பயிற்சிக்கும் உய்வுக்கும் ஏற்ற சாதனமாகவும் கதர் உதவுவதே அதற்குள்ள பெரு மதிப்புக்குக் காரணமாகும்.



— நவ இந்தியாவில் காந்திஜீ

மன்னரின் திடீர் மாறுதலுக்குக் காரணம் வீரர்களுக்கும் புலனாக வில்லை; ரோகிணிக்கும் புலப்படவில்லை.

" கந்துலா ! சக்கரவர்த்தியிடம் நீ நேரில் சென்று செய்தியைச் சொல்ல வேண்டும். அவர்கள் அனுப்பி வைத்த தூதனை யாரென்று தெரிந்து கொள்ளாமல் முதலில் துன்பம் கொடுத்துவிட்டதாகவும், பிறகு தெரிந்துகொண்டு அவனிடம் செய்தி சொல்லி அனுப்புவதற்குள் அவனே கிளம்பி வந்து விட்டதாகவும் சொல். தெரியாமல் நடந்த தவறென்றால் அவர்கள் ஒப்புக் கொள்வார்கள். அவர்கள் நட்பை நாடி விரைந்து வருகிறோம் என்பதை அவர்கள் உணர வேண்டும். தெரிந்ததா?—நான் ஓலை தருகிறேன்."

" மன்னிக்க வேண்டும், அரசே ! இப்படித் திடீரென்று முடிவுக்கு வந்தால்..." என்று இழுத்தான் விஜயபாகு.

" நம்முடைய இருப்பிடம், நம் ரகசியம் எல்லாமே அவர்களுக்குத் தெரிந்து விட்டன. ஆனால் நமக்கோ இன்னும் அமைச்சரின் இருப்பிடமும் அவர் நடவடிக்கைகளும் ரகசியங்களாகவே இருக்கின்றன. அவர்களாக நம்மை வளைத்துக் கொள்வதற்கு முன்னால் நாமாகச் சென்று விடுவது நல்லது. மேலும், நேற்று இரவு வந்த இரண்டாவது ஒற்றன் கொடும்பாளூர் இளவரசனை நாம் கொன்று விட்டோம் என்று நினைத்துக் கொள்வதற்கும் இடம் இருக்கிறது. அப்படிப் போய்ச் சொல்லியிருந்தால் பட்டமகிஷிக்கு அவர்கள் துன்பம் கொடுக்க மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?"

பட்டமகிஷிக்கு அபாயம் நேரலாம் என்ற எண்ணம் எழுந்தவுடன், "தங்கள் சித்தம், அரசே !" என்றான் விஜயபாகு.

ரோகிணிக்குத் தன் தந்தையாரின் மனமாற்றத்துக்கு என்ன காரணம் என்பது விளங்கி விட்டது. அவருடைய முடிவை அவள் வரவேற்றாள் என்றாலும், தன் தாயாருக்கு ஏதும் நேர்ந்து விடாது என்று சொல்லத் துடித்தாள்.

" அப்பா !..." என்று அவள் பேசத் தொடங்கியவுடன், " ரோகிணி! இந்த விஷயங்களில் நீ தலையிடாமல் இருப்பது நல்லது" என்று அடக்கினார் மகிந்தர்.

கந்துலன் புறப்பட்ட ஒரு நாழிகைக் கெல்லாம், மாமன்னர் தமது வீரர்களுடன் குகையை விட்டுப் புறப்பட்டு மலைச்சாரலில் நடந்தார். ரோகிணியும் மௌனமாக அவரைப் பின்பற்றினாள். சமவெளிக்கு வந்தவுடன் குதிரைகள் சித்தமாகி நின்றன.

இடையில் நாற்சந்திச் சாவடியில் உணவையும் ஓய்வையும் முடித்துக் கொண்டு அவர்கள் மீண்டும் கிளம்பினார்கள்.

மாலை மயங்கும் நேரத்தில் கப்பகல்லகம் கோட்டை வாயிலில் திரள்திரளாகச் சோழ நாட்டு வீரர்கள் ரோகணத்து மன்னரை வரவேற்பதற்காகக் காத்திருந்தனர். வல்லவரையர் மிகவும் உயர்ந்த முறையில் ஏற்பாடுகளைச் செய்திருந்தார். மகிழ்ச்சி ஆரவாரத்துடன் மக்களும் கூடி நின்றனர்.

இராஜேந்திரரே நேரில் கோட்டை வாசலுக்கு வந்து மன்னர் மகிந்தரை வரவேற்பதாக இருந்தார்.

கப்பகல்லகம் நகரத்தின் எல்லைக்குள் மகிந்தர் நுழைந்து சென்ற தருணத்தில் எங்கிருந்தோ ஒரு கூரம்பு வந்து அவர் ஆரோகணித்திருந்த குதிரையின் பிடரியில் பாய்ந்தது. அச்சத்தினால் அலறிக் கொண்டு ரோகிணி தன் புரவியின் கடிவாளத்தைப் பற்றி நிறுத்தினாள். மற்றக் குதிரைகளும் நின்றன.

குதிரையின் மீது பாய்ந்த அம்பின் பின்புறத்தில் ஒரு நறுக்கோலை கட்டியிருந்தது. அதைப் படித்துப் பார்த்த மகிந்தரின் முகத்தில் படர்ந்த பீரேதக் களையை ரோகிணி கண்ணுற்றாள். மகிந்தருக்கு முன்னால் போகவும் மனமில்லை; பின்னால் திரும்பவும் மனமில்லை.

" என்ன அப்பா, அது ?"

" நாம் திரும்பி விடுவோமா ?" என்று நடுங்கும் குரலில் தம்மோடு வந்தவர்களிடம் கேட்டார் மகிந்தர்.

இதற்குள் வரவேற்பு வாழ்த்தொலிகளுடன் அவரைச் சோழநாட்டு வீரர்கள் சூழ்ந்து கொண்டனர்.

" வாழ்க, ரோகணம் ! வாழ்க, சோழ வளநாடு !"


" வாழ்க, மன்னர் மகிந்தர் ! வாழ்க, மாமன்னர் ராஜேந்திரர் !"

மகிந்தரின் குதிரை அவரது விருப்பத்துக்கும் மாறாக அரண்மனையை நோக்கிச் சென்றது. (தொடரும்)

உலகச் சாம்பியன்கள் தேர்ந்தெடுப்பது

பயர்ஸ்டோன்

....நீங்களும் அதையே தேர்ந்தெடுங்கள்



'இன்டியானா பொலிஸ்'ல் நடைபெற்ற உலகப்பிரசித்தி பெற்ற 500 மைல் ஓட்டப் பந்தயத்தில், மோட்டார் ஓட்டிகளுக்குக் கடுஞ்சோதனையாக வாய்ந்த பந்தயப் பாதையிலே, கடுமையான அதிர்ச்சிகளுக்கும், அபாயகரமான நெளிவு சுளுவுகளுக்கும், உராய்தலுக்கும் ஈடு கொடுத்து மணிக்கு 180 மைல் வேகத்துடன் ஓடி வெற்றிபெற தனக்கு உதவிய பயர்ஸ்டோன் டயர்களை ஜிம்மி ப்ரையன் பெரிதும் பாராட்டினார்.


உங்களுக்கும் அத்தகைய பாதுகாப்பையும் நம்பிக்கையையும் அளிப்பது பயர்ஸ்டோன் டயர்கள். ஏனெனில், உங்கள் மோட்டாருக்கான டயர்களின் தயாரிப்பிலும், ஓட்டப் பந்தய டயர்களிலுள்ள அதே பாதுகாப்பு தரும் அம்சங்கள் பொருந்தியிருக்கின்றன. பயர்ஸ்டோன் அளிக்கும் சிறந்த பாதுகாப்பு செயலில் நிரூபிக்கப்பட்டது.

Firestone

பயர்ஸ்டோன்

நியூ டீலக்ஸ் சாம்பியன்

ட்யூப் இல்லாதது அல்லது ட்யூப் உள்ளது





நாகரீகபெண்கள்
நம்பிக்கையுடன்
அணிவது
TRAYONS
"டிரெயான்ஸ்"
ரேயான் நூல்களினால்
நெய்யப்பட்ட
ஆடைகளையே
இந்தியாவில் முதல் முதலாக சிறந்த ரசாயன முறையில் தயாரிக்கப் பட்ட உன்னத நூல் "டிரெயான்ஸ்" ரேயான் நூல்கள்.
"டிரெயான்ஸ்" ரேயான் நூலின் விசேட குணங்கள் – விலைமலிவு – நீண்டகால உழைப்பு – பகட்டான உடைகளுக்கு ஏற்றது.
"டிரெயான்ஸ்" ரேயான் நூல்கள் 120, 150, டினையர்களில் தயாரிக்கப்பட்டு எங்களால் வினியோகிக்கப்படுகிறது.
ஸ்டாக்கிஸ்டுகள்:-
ரேயான் டிரேடர்ஸ்
பிரைவேட் லிமிடெட்
61, செம்புதாஸ் தெரு, சென்னை-1
தந்தி: "CELYARN"
கிளைகள் :
போன் : 253
தந்தி : "CELYARN"
போன் 598
தந்தி "CELYARN"
தந்தி : "RAYONS"
கோவை

மூன்று தலைமுறைகள்

நாயா

" ஏன், பாட்டி! இந்த வயசிலே, உனக்கு இந்தத் தலையெழுத்து! பேசாமே, கம்முனு நீ கட்டில்லே காலே நீட்டிக்கிட்டு அக்கடான்னு கிடவேன். நான் இருக்கேன், வேலே கிடைச்ச நான் சம்பாதிக்க ஆரம்பிச்சதும் ஜம்முனு உன்னைப் பட்டணத்துலே பங்களா மாடியிலே நாற்காலியிலே உக்காரவைச்சு, சோறு போட மாட்டேன்! போட முடியாதா? சொகமா இருக்கிறதை விட்டுட்டு ஏன் பாட்டி, இந்தக் கிழ ராட்டையைச் கத்திக்கிட்டு அவதிப்படணும்? தூக்கிக் குப்பையிலே போடு அந்த எளவு சக்கரத்தை!"

எண்பத்து ஐந்து வயது முதிர்ந்த அன்னம்மாள் பழைய ராட்டையில் நூற்றுக் கொண்டிருப்பதைக் கண்டு பேரன் முத்தையன் பல முறைகள் இப்படிப் பாட்டியிடம் பேசுவதுண்டு. அவ்வாறு அவன் சொல்லும்போதெல்லாம் பொக்கைவாய்ப் புன்னகையுடன் அன்னம்மாள், "அப்பா, முத்து! இது என் கூட வந்த சொத்து! இதை விட்டு நான் பிரிய முடியாது! அன்று முதல் இன்று வரை எனக்குத் துணையாயிருந்து காப்பாற்றி வந்திருக்கிற இந்த என் குடும்பச் சொத்தைத் தூக்கி எறியச் சொல்றயே, குழந்தை! இதன் அருமை உனக்குத் தெரியலே, அப்பா!" என்று பரிவுடன் சொல்லி ராட்டையைச் சுற்றுவாள்.

"இந்தக் கிழக்கட்டைகளுக்கு இந்தக் காலத்துப் போக்கும் முன்னேற்றமும் என்ன தெரியும்! அவர்கள் பழம்பசலியிலேயே இன்னும் இருக்கிறார்கள்!" என்று பரிதாபப்பட்டுக் கொண்டு போய் விடுவான் முத்தையன்.

ராட்டை சுழலும்போது அன்னம்மாளின் எண்ணங்களும் சுழன்று, எழுபது வருஷங்களுக்கு முன்னால் நடந்த சம்பவங்களை, அவள் நினைவூட்டிக் கொள்வாள்.

* * *

அன்னம்மாள் போன நூற்றாண்டில் பிறந்து வளர்ந்தவள்தான். எழுபது வருஷங்களுக்கு முன்தான் அவள் கல்யாணம் வெகு விமரிசையாகச் சின்னநல்லூரில் நடைபெற்றது. அன்னம்மாளின் தகப்பனார் சின்னையாக் கவுண்டர் பெரிய பணக்காரரல்ல. ஏதோ கொஞ்சம் நிலம், ஒரு சிறிய வீடு இவை பூர்வீகச் சொத்தில் மிச்சமாகக் கிடைத்தன. இவற்றை வைத்து விவசாயத்தில் வரும் சொற்ப வருமானத்தை வைத்துக் கொண்டு கௌரவமாகவே காலட்சேபம் நடத்தி வந்தார். பக்கத்துக் கிராமமான கருகம்பட்டியில் பெரியண்ண கவுண்டர் இவருக்கு ஒன்று விட்ட உறவுமுறைக்காரர். அன்னம்மாள் பிறந்ததுமே சின்னைய கவுண்டரும், பெரியண்ண கவுண்டரும் ஐந்து வயது வந்த பெரியண்ண கவுண்டர் பையன் கருப்பண்ணனுக்கே அன்னம்மாளைக் கட்டிக் கொடுப்பது என்று தீர்மானித்து விட்டார்கள். அன்னம்மாளுக்குப் பதின்மூன்று வயது வந்ததும், கலியாணத்தையும் தடபுடலாக நடத்தி விட்டார்கள். வழக்கம் போல், கல்யாணப் பெண்ணுக்கு விமரிசையாகச் சிறப்புக்களும் செய்தார்கள். அந்தக் காலத்து வழக்கப்படி வீட்டில் வழங்கி வந்த ஏதாவது ஒரு அரிய பொருளைச் சீர் வரிசைகளுடன் கொடுப்பார்கள்.

அன்னம்மாளின் தாயார் அன்றுவரையில் தானே உபயோகித்து வந்த கைராட்டினத்தைச் சீருடன் பெண்ணுக்கு வழங்கினள்.

அந்தக்காலத்துக் கைராட்டினங்கள், பெரிய சக்கரத்துடன் மரத்தில் செதுக்கிய அழகிய வேலைப்பாடுகளுடன் விளங்கின. அன்னம்மாளுக்கு ஸ்திரீதனமாக வந்த அந்தப் புராதன ராட்டினம் இந்த நவீன காலத்தில் ஓர் அதிசய கலைப் பொருளாகக்கூட மதிக்கப்படலாம்.

* * *

அன்னம்மாள் புருஷன் வீட்டுக்கு வந்த சில காலம் வரையில் அந்த ராட்டினத்தைச் சுற்றி நூலெடுத்து வந்தாள். அந்த நூலையும் வாங்கிப்போகத் தறிகாரர்கள் இருந்தார்கள். ஆனல் நாளடைவில் தறிகாரர்கள் வருவது நின்று விட்டது. சீமைத்துணி அந்தக் கிராமத்துக்கும் வர ஆரம்பித்து விட்டது. அன்னம்மாளின் ராட்டைக்கு வேலையில்லை. தன் தாயார் கொடுத்த வெகுமதியாதலால் அதை விட மனமில்லாமல் பத்திரமாக வேண்டாத சாமான்கள் போடும் பரண் மேல் போட்டு வைத்தாள்.

கருகம்பட்டியில் புருஷன் வீட்டுக்கு அன்னம்மாள் வந்து பத்து வருஷங்கள் ஆயின.

அவர் தகப்பனர் காலமானதும், கருப்பண்ணக் கவுண்டருக்குக் கிடைத்தது ஒரு காணி நிலமும் அந்த ஒரு சிறிய வீடுந்தான். அவருக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன; இரண்டு பெண் குழந்தைகள், ஒரு ஆண்குழந்தை. பையன் இரண்டாவதாகப் பிறந்தவன். தம் குடும்பத்தைக் காப்பாற்ற நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு சமாளித்து வந்தார்.



ராட்டை சுழுமுவது நின்றாலும், காலம் சுழலாமல் இருக்குமோ? இன்னும் சில வருஷங்கள் கழிந்தன. அந்த வட்டாரத்தில் ஐந்து வருஷங்களாக மழையில்லை.

அந்த வட்டாரத்திலுள்ள கிராமங்கள் எல்லாம் வறட்சியில் தவித்தன. வயல்கள் காய்ந்து வெடித்தன. மரங்கள் செடி கொடிகளெல்லாம் தண்ணீரில்லாமல் கருகி மடிந்தன.

கருகம்பட்டிக் கிராமமும் இதற்குத் தப்பவில்லை. ஊருக்கு வெளியில் இருந்த பாறைக் கிணறு ஒன்றில்தான் குடிதண்ணீர் கொஞ்சம் கிடைத்து வந்தது. அதுவும் வற்றிவிட்டது. ஐந்து மைல்களுக்கப்பாலிருந்து தண்ணீர் வண்டியில் நாளைக்கொரு முறை கொண்டு வருவார்கள். ஒரு வீட்டுக்கு ஒரு குடம், இரண்டு குடம் தண்ணீர் அகப்பட்டால் பெரிது.

கருப்பண்ண கவுண்டர் மூத்த மகளின் கலியாணத்தை எப்படியோ முடித்து அவளைப் புருஷன் வீட்டுக்கு அனுப்பி விட்டார். பையனைப் பக்கத்து ஊர்ப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி வந்தார். எட்டாவது வகுப்புடன் அவன் படிப்பு நின்று விட்டது. அவனும்



தகப்பனுடன் விவசாய வேலை செய்து வந்தான். மழையில்லாமல் ஊரில் பஞ்சம் வந்ததும் தகப்பன் பிள்ளை இருவரும் விவசாய வேலை இல்லாமல் திண்டாடினார்கள்.

வெள்ளையன் - அவன்தான் கருப்பண்ண கவுண்டரின் பையன் - ஊரில் எல்லோரும் நகரத்தில் வேலை தேடப்போகிறார்களே என்று தானும் போக வேண்டுமென்று கோரினான். வேறு வழியின்றிக் கருப்பண்ண கவுண்டரும் அன்னம்மாளும் போக அனுமதித்தனர்.

கருப்பண்ண கவுண்டர் நிலைமை மிகவும் மோசமாகி வந்தது. குடும்பம் சிறிதாகி விட்டாலும் பொறுப்பு பெரிதாகிவிட்டது. என்ன செய்வதென்று தெரியாமல் முதலில் மாடுகளை விற்றார்; பிறகு நிலத்தை அடமானம் வைத்தார். பிறகு வீட்டையும் அடமானம் வைக்கும் நிலை வந்து விட்டது. இந்தக் கவலையினாலேயே அவர் தேகநிலை குன்றி விட்டது. ஒரு நாள் கடுமையான காய்ச்சல் கண்டது. ஒரு வாரத்தில் அவர் காலம் முடிந்து விட்டது.

அன்னம்மாள், பாவம், திக்கற்றுத் தவித்தாள். பிள்ளை போன இடம் தெரியவில்லை. பெரிய பெண்ணின் புருஷன் எங்கேயோ பட்டணத்தில் வேலையில் இருந்ததால் அவனுடன் பெண்ணும் போய்க் குடித்தனம் நடத்த வேண்டியதாயிற்று. கடைசி மகள் பாப்பம்மாள் இளம் பெண். அவளைக் காப்பாற்றும் பொறுப்பும் ஏற்பட்டுவிட்டது. கூலி வேலை செய்து பிழைக்கலாம் என்றால் அதுகூடக் கிடைப்பது அரிதாயிற்று.

* * *

இந்த அவல நிலையில், தன்னையும் தன் நிலைமையையும் அன்னம்மாள் நொந்துகொண்டு கடவுளுக்குக் கண்ணில்லையா என்று, தன் கணவர் வைத்துப் பூஜித்து வந்த வேலன் படத்தின் எதிரே கண்ணீர் விட்டுக் கதறிக் கொண்டிருந்தாள் ஒரு நாள். அப்போது திடீரென்று அந்த ஊரில் ஒரு சின்ன பரபரப்பு ஏற்பட்டது. ''யாரோ காந்திக்காரங்களாம்! வந்து நமக்கெல்லாம் வேலை கொடுக்கப் போறாங்களாம்'' என்று பேசினார்கள்.

சன்னியாசி போல், காவிபிடித்த முரட்டுத் துணியணிந்த ஒரு மனிதர் அன்னம்மாள் வீட்டு வாசலில் வந்து நின்றார். என்னதான் வறுமைக் கொடுமை இருந்தாலும் பழைய பண்பாடு அன்னம்மாளுக்கு மறக்கவில்லை!

''வாங்க ஐயா! வாங்க! குந்துங்க. மோரு சாப்பிடறீங்களா? இந்த வாழைப் பழத்தைச் சாப்பிடுங்க. நான் உங்களுக்குப் பசிக்கு வேறே என்ன கொடுக்க முடியும்?'' என்றாள். வந்த ஆசாமி முகத்தில் இரக்கமும் சாந்தமும் குடிகொண்டிருந்தன.

''அம்மா! உங்கள் அன்பே என் பசி, தாகத்தைத் தீர்த்துவிட்டது. இருக்கட்டும்! நான் வந்த காரியத்தைச் சொல்கிறேன். இப்போது இங்கே உங்கள் ஊரில் பஞ்சத்தால் கஷ்டப்படுகிறீர்கள். இல்லையா? வேலையில்லாமல் கஷ்டப்படுகிறீர்கள். உங்களைப் போல் நம் நாட்டில் லட்சக் கணக்கான மக்கள் கஷ்டப்படுகிறார்கள். நம்மைக் காப்பாற்றி நமக்கெல்லாம் நல்ல வழி காட்ட ஒரு மகான் அவதரித்திருக்கிறார். அவர் பெயர் காந்தி. நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். உங்கள் போன்றவர்கள் கௌரவமாகப் பிழைக்க அவர் ஒரு எளிய வழி கண்டுபிடித்து உபதேசம் செய்து வருகிறார். நீங்கள் அதைப் பின்பற்றுவீர்களா?'' என்று கேட்டார்.

''என்ன வழிங்க? மகான் என்கிறீர்களே! அவர் சொல்ற வழி நல்லாத்தான் இருக்கும்! என்னங்க அது?'' என்று ஆவலுடன் அன்னம்மாள் கேட்டாள்.

''அம்மா! நீங்கள் எப்போதாவது நூல் நூற்று இருக்கிறீர்களா?'' என்றார் வந்தவர்.

''அது எப்பவோ நூத்து இருக்கேனுங்க. அப்பல்லாம் நல்லா நூப்பேனுங்க. பழைய ராட்டை கூட எங்கம்மா குடுத்தது இன்னும் வச்சிருக்கேன்'' என்றதும் வந்தவர் முகம் மலர்ந்தது. காணாதது கண்டவர் போல் குதூகலத்துடன் குதித்தார். ''பேஷ்! பேஷ்! எங்கே எடுங்கள் அந்த ராட்டையை!'' என்றதும் அன்னம்மாள் பரணில் ஏணியைச் சாத்தி ஏறப் போனாள்

''பெரியம்மா! நீங்கள் இருங்கள் நான் ஏறி எடுக்கிறேன்'' என்று அவரே ஏணிமேல் ஏறிப் பரணில் போட்டிருந்த ஓட்டை உடைசல் சாமான்களுக்கிடையே இருந்த ராட்டையை மீட்டார். அதில் ஏறியிருந்த தூசி தும்புகளைத் தட்டி, சிலந்திக் கூடுகளைக் கலைத்து, அதை மீண்டும் இயங்க வைத்தார்.

அன்னம்மாள் தன் அருமை ராட்டையை அன்புடனும் ஆர்வத்துடனும் பார்த்தாள். அன்று முதல் அன்னம்மாள் வீட்டில் ராட்டினத்தின் கானம் ஒலித்தது.

அன்று முதல் அன்னம்மாளுக்கும் அவள் பெண் பாப்பம்மாளுக்கும் குடிக்கக் கஞ்சிக்குக் குறைவில்லை.

* * *

நாட்கள், மாதங்கள், வருஷங்கள் ஓடின. அன்னம்மாள் அரை நூற்றாண்டை வயதில் எட்டி விட்டாள். வயலிலோ, காட்டிலோ, மேட்டிலோ வெளி வேலை அகப்படும் போது அதில் வரும் சிறிது ஊதியத்தையும், எஞ்சிய நேரத்தில் நூல் நூற்று அதில் வரும் வருவாயையும் கொண்டு எப்படியோ தன்னையும் தன் கடைசிப் பெண் பாப்பம்மாளையும் காப்பாற்றிக்கொண்டு வந்தாள்.

பாப்பம்மாள் மிகவும் சுறுசுறுப்புள்ள பெண். நூல் நூற்றுச் சம்பாதிக்கும் பத்துப் பதினைந்து ரூபாய்களை மாதா மாதம் வீட்டுச் செலவுக்குக் கொடுத்து உதவி வந்தாள்.

* * *


பாப்பம்மாளின் அத்தை மகன் கப்பையன் அவளைக் கலியாணம் செய்துகொள்கிறேன் என்றதும் பாப்பம்மாளுக்கும் அன்னம்மாளுக்கும் ஆனந்தம் தாங்கமுடியவில்லை. கப்பையன் யோக்கியமுள்ள பிள்ளை; குணசாலி; உழைப்பாளி. அவனும் சிறு வயதில் தாய் தகப்பனை இழந்துவிட்டதால், அன்னம்மாளையே தாயாராகப் பாவித்தான். அன்னம்மாள் அவனைப் பார்த்து, ''அப்பா! கப்பையா! எனக்கிருந்த பிள்ளைதான் எங்கேயோ போய்விட்டான். நீயாவது தள்ளாத வயதில் என்னுடன் இருந்து என்னைக் காப்பாற்று'' என்றதும் கப்பையன் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டான். அவன் உழைப்பினாலும் பாப்பம்மாள் சாமர்த்தியத்தாலும் நாளடைவில் வீட்டையும் நிலத்தையும் கடன் அடமானத்திலிருந்து மீட்டார்கள். கப்பையன் நிலத்தைச் சீர்ப்படுத்திச் சாகுபடி செய்து வருவாயைச் சிறிது பெருக்க முடிந்தது.

கப்பையனுக்கும் பாப்பம்மாளுக்கும் ஒரு ஆண் குழந்தையும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. பையன் முத்தையன் சிறு வயதிலேயே மிக புத்திசாலியாகவும் துருதுருவென்றும் இருந்தான். கப்பையன் அவனைப் பள்ளிக்கூடத்தில் போட்டான். பள்ளிக்கூடத்தில் வகுப்பில் எல்லாம் முதலில் வந்தான் முத்தையன். பிறகு அவனை மேற்படிப்புக்குப் பட்டணத்தில் கலாசாலைக்கு அனுப்பினார்கள் அவன் பெற்றோர். முத்தையனுக்கு விஞ்ஞானத்தில் மிகவும் ஆர்வம் இருந்ததால் விஞ்ஞான ஆராய்ச்சியில் அவன் ஈடுபட்டான்.

* * *

இதற்கிடையில் ஒரு நாள்—கப்பையனுக்குக் கலியாணமான சில மாதங்களுக்குப் பின்—கருகம்பட்டியில் காக்கிச் சட்டை போட்ட சிப்பாய் ஒருவர் வந்தார். காக்கிச் சட்டையைப் பார்த்ததும் ஊரில் உள்ள குழந்தைகள் பெரியவர்கள் அவரைப் பின்தொடர்ந்து வந்து அவர் முறுக்கு மீசையையும் மிடுக்கு நடையையும் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்.

அன்னம்மாள் தன் அருமை ராட்டினத்தைச் சுற்றிக்கொண்டிருந்தாள். ''அம்மா!'' என்று வெளியில் யாரோ கூப்பிட்டார்கள். வயதினால் காது கொஞ்சம் மந்தம் தட்டிய அன்னம்மாளுக்கு எங்கிருந்தோ தொலைவிலிருந்து பழைய தெரிந்த குரல் மாதிரி தொனித்தது. வெளியில் வந்தாள். ''என்னைத் தெரியலையா அம்மா?'' என்று காக்கி உடுப்புக்குள்ளிருந்து குரல் வந்தது. அரைக் கணம் உற்று நோக்கினாள். அந்த முறுக்கு மீசையையும் ஊடுருவிப் பாய்ந்தது அவள் பார்வை— ''அடே, வெள்ளையா! உயிரோடு இருக்கயா, மகனே!'' என்று தன் மகனை வரவேற்றாள்.



''நான் சாதாரண வெள்ளையன் இல்லே அம்மா! நான் சுபேதார் வெள்ளை! இதோ பார்த்தாயா! நம்ப மெடல் எல்லாம்! நான் இப்போ பெரிய வீரனாயிட்டு வந்திருக்கேன், அம்மா!'' என்றதும் அன்னம்மாளுக்குப் பெருமை தாங்க முடியவில்லை. காக்கி உடுப்பு இருந்தால் என்ன? முறுக்கு மீசை இருந்தால் என்ன? மகன் எவ்வளவு பெரியவனானாலும் தாய்க்குக் குழந்தைதானே! அப்படியே அவனை அணைத்து உச்சி முகர்ந்தாள்.

* * *

சுபேதார் வெள்ளையன், தன்னுடைய குடும்ப விவகாரம், தன் தந்தை இறந்தது எல்லாம் கேட்டுத் தெரிந்து கொண்டான். தங்கை புருஷன் சுப்பையனை அவனுக்குச் சிறு வயதிலிருந்து தெரியும். நல்ல பையன் என்று மகிழ்ந்தான். சுப்பையனும் ''நீங்க வந்துட்டீங்க; உங்க நிலபுலத்தைப் பார்த்துக்கிட்டுச் சுகமா இருங்க'' என்றான். ஆனால் ராணுவத்தில் சேர்ந்து வெளியூர்களில் சஞ்சாரம் செய்து, படுகளத்தையும் பட்டணவாசத்தையும் அனுபவித்த வெள்ளையனுக்குப் பட்டிக் காட்டில் இருப்புக் கொள்ளுமா? பட்டாளத்தில் அவனுக்கு வேறு சில பழக்கங்களும் ஏற்பட்டிருந்தன. சாராயம் இல்லாமல் அவனால் ஒரு ராத்திரிகூடத் தூங்க முடியாது.

பட்டாளத்தில் உழைத்தவர்களுக்குப் பட்டணத்தில் ஆலைகளில் வேலை கிடைப்பதாகச் சொன்னார்கள். வெள்ளையன் துப்பாக்கி பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டது முதல் ஏர் பிடிக்கும் தொழிலை இழிவாகவே கருதினான். பட்டணத்துக்குப் போய் மில்லில் வேலை கேட்டான். பட்டாளத்திலிருந்து வந்திருந்ததால் முதலில் 'வாட்ச்மேன்' வேலை கிடைத்தது. பிறகு மில்லுக்குள் கண்காணிப்புக் காவலர் வேலை கிடைத்தது. பட்டாள பென்ஷனுடன், இந்த வேலையில் ஐம்பது ரூபாய் கிடைத்தும், அவன் குடி முதலிய பழக்கங்களுக்குப் போதவில்லை. மில்லில் வேலை செய்யும் சின்னாயி தனக்குப் பத்து வயதில் கட்டிய கணவன் கொடுமை பொறுக்காமல் ஓடிவந்தவள். சின்னாயிக்கும் வெள்ளையனுக்கும் நட்பு ஏற்பட்டது. அவள் கணவனும் எங்கோ ஊரில் ஏற்பட்ட கலகத்தில் கலந்து கொண்டு அடிபட்டு ஆஸ்பத்திரியில் மாண்டு போய் ஒரு வருஷமாகி விட்டது. வெள்ளையன் சின்னாயிவை, ''இப்பத்தான் உன் புருஷனும் போயிட்டான். உனக்கு வேறு யாரு துணை? என்னைத்தான் கண்ணாளம் கட்டிக்கயேன்'' என்றதும் அவளும் இணங்கினாள்.

* * *

அன்னம்மாளுக்கு எழுபதாம் ஆண்டு பூர்த்தியாகிவிட்டது. அப்பொழுதும் அவள் தன் செல்வமாகிய ராட்டினத்தை விடவில்லை. அவள் பெண் பாப்பம்மாளும் கால மாறுதலுக்கேற்ப, இரு சக்கரங்கள் கொண்ட புது மாதிரி 'கிஸான்' ராட்டையை வாங்கி நூல் நூற்று வந்தாள். தாயும் மகளும் தாங்கள் நூற்ற நூலைக் கொண்டே, தங்களுக்கு வேண்டிய துணிமணிகளை இப்போது பெறமுடிந்தது. சுப்பையன் நிலத்தைப் பண்படுத்தி விளைச்சலை அதிகரித்து வந்தான். முத்தையன் பட்டணத்தில் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஆழ்ந்திருந்தான். நவீன விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த முத்தையனுக்கு, தன் குடும்பத்தார் இப்படிக் கட்டுப் பெட்டிகளாக இருப்பது கட்டோடு பிடிக்கவில்லை.

* * *

அன்னம்மாள் எண்பதாவது வயதைக் கடந்தாள். கருகம்பட்டியில் ஒரு பரபரப்பு ஏற்பட்டது. கதர்க்காரர்கள் ஏதோ ஒரு புதிய ராட்டையைக் கொண்டு வந்து, ''இதில் நீங்கள் நூற்கக் கற்றுக்கொள்ளுங்கள். இதைக் கொண்டு நீங்கள் நாளைக்கு ஒன்றரை ரூபாய் சம்பாதிக்கலாம்'' என்றார்கள். அந்த ஊரில் அம்பர் ராட்டையில் நூற்பதற்குப் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்தார்கள்.

சுப்பையனின் கடைசி மகள், குப்பம்மாள் பயிற்சிக்கூடத்தில் சேர்ந்தாள். மூன்று மாதங்களில் அந்தப் பயிற்சியில் எல்லோரையும்விடத் திறமையாகத் தேறினாள். ஓர் அம்பர் ராட்டையையும் அவளுக்குக் கொடுத்தார்கள். அதை வீட்டுக்குக் கொண்டு வந்து அதில் நூற்கத் தொடங்கினாள். விரைவில் அதன் மூலம் வாரம் ஒன்றுக்குப் பத்துப் பதினைந்து ரூபாய் வருவாய் கிடைத்தது.

ஆனால் பாப்பம்மாள் தன் இரண்டு சக்கர 'கிஸான் ராட்டை'யை விடவில்லை. அன்னம்மாள் தன் பழம்பொக்கிஷமாகிய பெரிய சக்கர ராட்டையை விடவில்லை. பாட்டியும் மகளும், பேத்தியும், அவரவர்கள் காலத்துக்குத் தகுந்த ராட்டையில் நூற்பதை விட்டுவிடவில்லை.

* * *

அன்னம்மாள் எண்பத்தைந்து வயதை எட்டிப் பிடித்தாள். கருகம்பட்டியில் அன்னம்மாள் குடும்பத்தில் தீபாவளி ஒரே குதூகலமாகக் கொண்டாடப்பட்டது. அன்னம்மாள் குடும்பத்தினர் அனைவரும் பட்டணத்திலிருந்து வந்திருந்தார்கள். அன்னம்மா பாட்டிக்குப் பெருமை பிடிபடவில்லை. அந்தக் குடும்பத்தில் மூன்று தலைமுறை ராட்டைகளில் நூற்ற நூலைக் கொண்டு குடும்பத்தார் எல்லோருக்கும் கதர் ஜவுளிகள் எடுத்து வைத்திருந்தனர்.

முத்தையன் 'லூனிக்' பொம்மை அச்சடித்திருந்த கதர் 'ஸ்லாக்' சட்டை போட்டுக் கொண்டு காட்சியளித்தான்.

''பாட்டி! நான் சந்திர மண்டலத்துக்குப் போகப் போறேன்! நீ வறயா?''

''வரேன், முத்துக்கண்ணு! இந்த என் செல்வத்தை எடுத்து வரலாமில்லே'' என்று தன் உயிருக்குயிரான ராட்டையை அன்புடன் அணைத்துக்கொண்டு கேட்டாள்.

''சந்திர மண்டலத்திலே வந்து கூடவா நீ ராட்டினம் சுத்தணும்?''

''அந்த ராட்டினம்தானப்பா என்னைக் கைவிடாமே, காப்பாத்தின பொக்கிஷம். என் ராட்டினம் இருந்துட்டா அதுதான் என் சொர்க்கம்'' என்றாள் அன்னம்மாள்.

விஞ்ஞான ஆராய்ச்சி நிபுணன் முத்தையன் கண்களில் நீர் துளித்தது. அணுயுகத்தில்கூடப் பாட்டிக்கும், அவள் சுற்றும் பழைய சக்கரத்துக்கும் இடமுண்டு என உணர்ந்தான்.



அத்தியாயம் 10

குறுக்குச் சுவர்


அந்தக் காட்சி மாலாவின் நெஞ்சை இரு துண்டுகளாகப் பிளந்தது. அவள் எதற்காக வந்தாள்? இங்கே நடந்து கொண்டிருப்பது என்ன?

ஆம், அவள் எதற்காகத்தான் இந்த முன்னிரவு நேரத்தில் தன்னந்தனியே வீணாவின் ஆஸ்பத்திரிக்கு வந்தாள்? அதை அறிந்து கொள்ள நாம் சிறிது பின்னோக்கிப் போக வேண்டும். போய் அன்று சுந்தரம் "என்னை மறந்து விடு!" என்று அவளை விரட்டியதும், "இல்லை, மறக்க முடியாது. இவர் மனத்தை மாற்றியே தீருவேன்; இவரை மணந்தே தீருவேன்" என்று உறுதி செய்துகொண்டு திரும்பினாளே, அங்கிருந்து ஆரம்பித்து முன்னோக்கி வர வேண்டும்.

இந்தப் பெண்களின் உள்ளந்தான் எவ்வளவு வேடிக்கையானது! சில நாட்களுக்கு முன் இதே மாலாதான் வீணாவின் விஷயமாகப் பேச்சு எழுந்தபோது, விதவைகளின் வாழ்வு மறுமலர்ச்சிபெறாமல் இருப்பதற்கு இன்றைய இளைஞர்களின் நெஞ்சுரமற்ற தன்மையே காரணம் என்று குற்றம் சாட்டிச் சுந்தரத்துக்கு ரோசத்தை உண்டு பண்ணினாள். ஆனால் இப்பொழுது அவன் தன்னைப் புறக்கணித்து அந்த வீணாவுக்கே வாழ்வளிக்கத் துணிந்து விட்டான் என்பதை உணர்ந்ததும் அவள் எப்படி மாறிப் போய் விட்டாள், பாருங்கள்! இதைச் சுயநலம் என்பதா? அல்லது காதலின் கண்மூடித்தனம் என்பதா?

எதாக இருந்தால் என்ன? உடனடியாக ஏதாவது செய்து அவர்களைப் பிரித்தே ஆக வேண்டும் என்ற வேகத்தோடுதான் அன்று அவள் வீட்டுக்கு வந்தாள். ஆனால் வீட்டுக்கு வந்து மேலே என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைச் சிந்தித்தபோது, சரியான வழி ஒன்றுமே அவளுக்குத் தட்டுப்படவில்லை. ஓரிரு வழிகள் தோன்றின. ஆனால் அவற்றின் மூலம் தன் எண்ணம் நிறைவேறக்கூடும் என்று அவளால் நிச்சயமாகக் கருத முடியவில்லை.

வீணாவிடம் போய், "நீங்கள் என் காதலரைப் பறித்துக் கொள்ள முயலுகிறீர்கள். இது உங்களுக்கு அடுக்காது" என்று அவள் சொல்லலாம். ஆனால் முதலில், சுந்தரத்துக்கும் தனக்கும் இடையேயுள்ள காதலைத் தானே வெளியிட அவளுக்கு வெட்கமாக இருந்தது. இப்பொழுது காரியம் கை மிஞ்சி விட்டதால் வெட்கத்தை ஒதுக்கி விட்டுச் சொல்லி



விடுகிறாள் என்று வைத்துக் கொண்டாலும், வீணா உடனே அவனுக்கு இரங்கிச் சுந்தரத்தின் தொடர்பைத் துண்டித்துக் கொள்ளுவாள் என்பது என்ன நிச்சயம்? "நான் உன் நிலையில் உள்ளவளில்லை, அம்மா! உன்னை, இவர் இல்லாவிட்டால் வேறு ஆயிரம் பேர்கள் போட்டி போட்டுக் கொண்டு மணந்து கொள்ள முன்வருவார்கள். ஆனால் என் விஷயம் அப்படிப்பட்டதில்லையே! நான் விதவை. 'என்னதான் வாய் கிழியப் பேசினாலும், எந்த ஆண்மகனும் கிட்டிமுட்டி வரும்போது வாழ்விழந்தவள் ஒருத்தியை மணந்து கொள்ளத் துணிய மாட்டான்' என்று நீயே பல தடவைகள் சொல்லியிருக்கிறாயே, மாலா! அப்படியிருக்க, ஏதோ தெய்வச் செயலாக இவராவது மனம் துணிந்து என்னை ஏற்றுக் கொள்ளத் தயாராகயிருக்கிறாரே என்று நான் களிப்புற்றிருக்கையில், அவரை மறந்து விடுங்கள் என்று சொல்லுகிறாயே! இது உனக்கு நியாயமாகப் படுகிறதா, அம்மா?" என்று திருப்பிக் கொண்டு விட்டால் மாலா என்ன பதில் சொல்ல முடியும்?

ஆகையால் அவன் இந்த ஆலோசனையை விட்டு விட்டு அடுத்த வழியை ஆராய்ந்தான். அடுத்தாற்போல் அவன் செய்யக் கூடியது, தன் தாயிடம் போய் முறையிட்டுக் கொள்வது ஒன்றுதான். ஆனால் இங்கேயும் தைலம்மாளுக்குத் தன் மகன் சுந்தரத்தைக் காதலித்து வருவது தெரியாது. ஆதலால் மாலா வெட்கத்தை விட்டு விட்டுத் தானே தான் அதை அவளுக்கு அறிவிக்க வேண்டும். அறிவித்தால் தைலம்மாள் நிச்சயமாக அவனைப் போலவே கொதிப்படைவாள். ஏற்கெனவே அவளுக்கு வீணா டாக்டர் தொழில் செய்வதும், அதையொட்டிக் கண்ட கண்ட பேர்களுடன் பழகுவதும் பிடிக்கவில்லை. எனவே இந்த விஷயத்தை அறிந்ததும், அவள் வீட்டில் ஒரு பெரிய ரகளையே உண்டுபண்ணி விடுவாள். ஆனால் அதன் பலன் என்ன ஆகுமோ, யார் கண்டார்கள்?

சச்சிதானந்த மாமா ஊரோடு ஒத்து வாழ விரும்புகிறவர்தான். அதே சமயம் அவர் வீணா அக்காள்மீது அளவற்ற பாசமும் வைத்திருக்கிறார். ஒருகால் ஊர் தூற்றினால் தூற்றட்டுமென்று அக்காளுக்குச் சாதகமாகத் திரும்பி விட்டால், என்வரையில் முதலுக்கே மோசம் வந்த கதையாகவல்லவா ஆகிவிடும்? ஆமாம்; மாமா மட்டும் அப்படித் துணிந்து விட்டால் அவர் மிக எளிதாகப் புஷ்பவன மாமாவை இணங்க வைத்து விடுவார். புஷ்பவன மாமாவின் மனமும் மாறிவிட்டால், பிறகு எனக்கு அத்தான் கிடைத்தாற் போல்தான். ஆகையால் இந்த வழி ஆபத்தானது. இதை நினைக்கவேகூடாது.

சரி அதை மறந்து விடலாம். அப்படியானால் வேறு என்னதான் செய்வது?




இந்தக் கேள்வியுடன்தான் அவள் நாட்களைத் தள்ளி வந்தாள். உறங்கும்போது, விழித்திருக்கும்போது, பேசும்போது, காரியம் செய்யும்போது, எப்பொழுதும் இதே கேள்விதான் அவள் உள்ளத்தில் சுழன்றது.

கடைசியில்பலநாள் பலவாறு சிந்தித்த பிறகு அவள் ஓர் அருமையான வழியைக் கண்டுபிடித்து விட்டாள். இந்தச் சுலபமான வழி தனக்கு இதுவரையில் தோன்றாமல் போய் விட்டதற்காக மாலாவுக்குத் தன்மீதே கோபம் கோபமாக வந்தது.

அவள் கண்டுபிடித்த வழி இதுதான்: நேரே மரகத அத்தையிடம் போவது; வீணா அக்காளும் சுந்தரம் அத்தானும் பழகும் விதத்தைப் பற்றி ஊரில் விபரீதமான வதந்திகள் உலவுவதாகப் பேச்சோடு பேச்சாக வத்தி வைத்துவிட்டு வந்து விடுவது.

அன்று மரகத அத்தை ஆற்றங்கரையில் எங்களைத் தனித்திருக்கப் பார்த்தபோதே, நாங்கள் ஒருவரையொருவர் விரும்புவதைக் கூடமாக உணர்ந்திருப்பாள். ஆகையால், நான் இப்படிச் சொன்னதும், அவள் நிச்சயமாகத் தக்க நடவடிக்கைகள் எடுப்பாள். அத்தான் வேறு யாருக்குப் பயந்தாலும், யாருக்குப் பயப்படா விட்டாலும், அத்தையிடம் மட்டும் அவருக்கு நிச்சயமாகப் பயம் உண்டு. எனவே, அவள் தடை



தூத்துக்குடி இந்திய வர்த்தகச் சங்கத்தின் மானேஜர் திரு பி. சுப்பிரமணிய அய்யருக்கு ஆகஸ்டு மாதம் 25ந் தேதி சஷ்டியப்தபூர்த்தி வைபவம் வெகு விமரிசையாக நடைபெற்றது. நண்பர்களும் உறவினர்களும் திரளாக வந்திருந்து சிறப்பித்தனர்.

போடும்போது அவர் கட்டாயம் வழிக்கு வந்துதான் ஆகவேண்டும்.

அது மட்டுமில்லை. இந்த வழியில் இன்னொரு அரியவாய்ப்பும் இருக்கிறது. அன்று நாங்கள் ஆற்றங்கரையிலிருந்து வீடு திரும்பியபோது, அத்தையின் மனத்தில் எங்களை இணைத்துவிட வேண்டும் என்ற எண்ணம் இருப்பது வெளிப்படையாகத் தெரிந்தது. இல்லாவிட்டால், அவள் மறதியாகத் தண்ணீர்க் குடத்துடன் நடுத் தெருவுக்கு வந்துவிட்டதை நான் கேலி செய்தபோது, "நிறை குடத்துடன் சுமங்கிலி ஒருத்தி ஒருவர் வீட்டுக்கு வந்தால், அங்கே கல்யாணம் வரும் என்பார்கள்" என்று கூறிவிட்டு எதற்காக என்னை ஒருவிதமாகப் பார்த்துச் சிரிக்க வேண்டும்? ஆகவே அந்த எண்ணமும் இருந்து, இப்பொழுது இந்த விபரீதச் செய்தியையும் கேள்விப்பட்டால் அவள் மனம் பதறிக் கொண்டு, இந்தச் செய்தி மேலும் பரவுவதற்குள் எங்களுக்குத் திருமணத்தை முடித்து வைத்துவிட வேண்டுமென்று அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் சாத்தியமே. ஆக எப்படிப் பார்த்தாலும் இந்த வழியே சிறந்தது என்று மாலா அன்றே அதைச் செயல்படுத்தத் தீர்மானித்தாள்.

ஆனால் அன்று மாலையில், அவள் மரகதத்தம்மாள் வீட்டுக்குப் போகத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்த போது தாணுவதி அவர்கள் வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அப்பொழுது சச்சிதானந்தம் பிள்ளை வீட்டில் இல்லை. அவரும் புஷ்பவனம் பிள்ளையும் ஏதோ அலுவலாக வெளியே சென்றிருந்தனர். மாலா வீட்டுப் பட்டகசாலையில் தலை சீவிப் பின்னிக் கொண்டிருந்தாள். தைலம்மாள் சமையல் அறையில் ஏதோ கைக் காரியமாக இருந்தாள். வீணா புங்கனூற்றுக் காலனிக்குப் போய் அரை மணி நேரத்துக்குமேல் ஆகிவிட்டது. அப்பொழுது, தனது வழக்கமான ஆர்ப்பாட்டக் குரலில், "மாமா! சச்சிதானந்த மாமா!" என்று கூப்பிட்டுக் கொண்டு அவன் உள்ளே வந்தான்.

அடுக்களையிலிருந்த தைலம்மாள் அவன் குரல் கேட்டதும், கூடத்துக்கு வந்து, "வாங்க தாணுவதித் தம்பி! சுகந்தானா? உங்களை என்ன கண்ணிலே காங்கலை?" என்று வரவேற்றாள்.

"வேலை, அத்தை! ஓய்ச்சல் ஒழிச்சல் இல்லாத வேலை. இந்த இழவுப் பயல் ஊரிலே ஒரு நல்லது-பொல்லாதது பார்த்துச் செய்ய இந்தத் தாணுவதியை விட்டா வேறே எந்தப் பயல் இருக்கான்? எல்லா இழவையும் இந்தச் சிங்கந்தான் தலையிலே தூக்கிப் போட்டுக்கிட்டுச் செய்ய வேண்டியிருக்குது. உங்களுக்குத் தெரியாதா? ஏங்க, சொல்லுங்களேன்; நான் சொல்றது நிசந்தானே?" என்றான் அவன் பல்லை இளித்துக்கொண்டு.

"ஆமாம், நீங்க கிராம முனிசிப்பு இல்லையா? ஊருக்கு நீங்கதானே ராசா! அதுனாலே நீங்கதான் எல்லாத்தையும் கவனிச்சுக்கிடணும். உட்காருங்க, தம்பி! நின்னுக்கிட்டிருக்கிறீங்களே."

தாணுவதி ஊஞ்சலில் அமர்ந்துகொண்டே, "மாமா எங்கே அத்தை, காணும்?" என்று கேட்டான்.

"அவனும் நம்ம புஷ்பவனம் தம்பியுமா வெளியே எங்கேயோ போனாங்க. வந்துடுவாங்க. ஏன் தம்பிகிட்டே ஏதானும் சோலியா வந்தீங்களா?"

தாணுவதி குரலைத் தாழ்த்திக்கொண்டு, "ஆமாம், அத்தை, ஆமாம். விசயம் ரொம்ப முத்திப்போச்சு. மாமாகிட்டே சொல்லாமப் போனா, நாளைக்கு அவங்க என்னைக் குறை சொல்லுவாங்களேன்னு வந்தேன்" என்று கூறிவிட்டு, சுற்றும் முற்றும் ஒருதடவை பார்த்தவாறே, "டாக்டர் அம்மா புங்கனூற்று ஆசுபத்திரிக்குப் போயிட்டாங்கல்லே?" என்று சந்தேகத்துடன் கேட்டான்.

"ஆமாம்; அவளுக்கு என்ன, கொடுத்து வைச்சவள். வீட்டிலே மாடா உழைச்சுக்கிட்டிருக்க நானும் என் மகளும் இருக்கிறபோது அவளுக்கு என்ன கவலை? ஒண்ணுக்கு ரெண்டு இடத்திலே ஆசுபத்திரி, அது-இதுன்னு வைச்சுக்கிட்டு, கண்ட ஆம்புள்ளைப் பிள்ளைங்ககூட எல்லாம் சிரிச்சுப் பேசிக்கிட்டு....அந்த வயித்தெரிச்சலை ஏன் கிளப்புறீங்க, தம்பி? மானம் போயிடும்போல் இருக்குது."

"இருங்க; இருங்க" என்று வேகத்துடன் கூறினான் தாணுவதி. "என்ன


அழகு எழிலோங்க
" ' ஹாஸலீன் ' ஸ்னோ " தினமும் உபயோகித்
தீர்களானால், உங்களுடைய சருமம் மிருதுவாகவும்
மழமழப்பாகவும், அழகாகவும் விளங்குகிறது.
சருமத்தினுள்ளே ஊடுருவிச் செல்லும் அதன்
சக்தி, சருமத்திற்கு கெடுதி வராமல் தடுப்பது
மல்லாமல் பவுடர் தடவிக்கொள்ள சிறந்த
ஆதாரமாகவும் உபயோகிக்கப்படுகிறது.
ஏமாற்றம் செய்யமுடியாத அதன் பாக்கிங்
இதனுடைய தூய்மையை உறுதியாக்குகிறது.
HAZELINE SNOW
"'HAZELINE' SNOW"
" ' ஹாஸலீன் ' ஸ்னோ "
டிரேட் மார்க்
ஒரு பர்ரோஸ் வெல்கம் தயாரிப்பு

சொன்னீங்க?' மானம் போயிடும்போலே இருக்குதா? அது போயி எத்தனைநாள் ஆயிப் போச்சு, அத்தை? நீங்க எந்த ஊரிலே இருக்கிறீங்க?"

"என்ன தம்பி? என்ன சொல்லுறீங்க?" என்று மனம் பதறிக் கேட்டாள் தைலம்மாள்.

"இன்னும் சொல்லலே, அத்தை; ஆனா, சொல்லிட்டுப் போகத்தான் வந்திருக்கேன். புஷ்பவன மாமா வீட்டுக்குக் கூடக் காலையிலே போயிருந்தேன். அவங்க இல்லே. அங்கே அத்தைகிட்டே சொல்லிட்டேன். இங்கே உங்ககிட்டே சொல்லிடறேன். ஊருக்குத் தலைவன் என்கிற முறையிலே, இந்தமாதிரி விசயத்தை அவங்க அவங்க வீட்டுப் பெரியவங்ககிட்டே சொல்லிக் கண்டிக்கச் செய்யறது என் 'கமைதலே' இல்லையா? ஏங்க, சொல்லுங்களேன்; நான் சொல்றது நிசந்தானே?"

"விசயத்தைச் சொல்லுங்க, தம்பி!"

"என்னத்தைச் சொல்ல அத்தை? உங்க மருமகள் டாக்டர் அம்மாவாகி நம்ம ஊருக்கு வந்தபோது நான்தான் ரொம்ப சந்தோசப் பட்டேன். ஆனல், அது இப்போ பெரிய ஆபத்தாப் போயிடிச்சு, அத்தை, ஆபத்தாப் போயிடிச்சு. டாக்டர் அம்மா நம்ம ஊரின் நல்ல பேரைக் கெடுக்கிற வழிகளிலே போய்க்கிட்டு இருக்கிறாங்க. அவங்களும் நம்ம புஷ்பவன மாமா மகனும் பழகிக்கிட்டு இருக்கிற போக்கைப் பற்றி ஊரெல்லாம் கேவலமாப் பேசிக்கிடறாங்க. இது எங்கே போய் நிக்கப் போகுதோன்னு எல்லாரும் கவலைப்படுறாங்க."

"வந்துடிச்சா? எனக்குத் தெரியும் தம்பி இப்படியெல்லாம் ஊர்ச்சனங்க பேசுவாங்கன்னு. அதுக்காகத் தான் அப்பொவே, டாக்டரும் வேண்டாம்; மண்ணும் வேண்டாமின்னு முட்டிக்கிட்டேன். ஆனா நான் அதைப் பற்றி ஏதானும் பேசினா என் தம்பிக்குப் பிடிக்கிறதில்லே. அவன் என்னவோ, மகன் டாக்டராகிட்டதினாலே, தலையிலே கிரீடம் வந்து விழுந்துட்டாப்போலே பெருமைப்பட்டுக்கிட்டு இருக்கிறான்..."

"தலையிலே கிரீடம் வந்து விழலே, அத்தை! கல்லுதான் வந்து விழப் போகுது. இப்படி இவங்களைப் போக்குப்படி விட்டுக்கிட்டு இருந்தால், ஒரு கல்லு இல்லே அத்தை, ஆயிரம் கல்லுகளை ஊர்க்காரங்க தலையிலே விட்டெறிஞ்சு தாக்குவாங்க."

"தாக்குவாங்களா? தாக்கட்டும்; நல்லாத் தாக்கட்டும். சொன்னாத் தெரியாதவங்களுக்குப் பட்டாத்தானே புத்தி வரும்."

பணத்தைவிட உயிர் மதிப்பு மிக்கது. ஒரு வேலைக்கும் உதவாத நமது வயோதிகப் பெற்றோர்களைக் கொன்று விடுவது மலிவான ஒரு காரியந்தான். அதே போல் பிரதிப் பிரயோசனமும் இல்லாமல், செலவை மட்டுமே நமக்கு



உண்டாக்கும் குழந்தைகளை அழித்து விடுவதும் மலிவானதுதான். ஆயினும் இந்த மலிவான செயல்களை நாம் செய்வதில்லை. அதற்குப் பதிலாக என்ன செலவானாலும் சரி இவர்களைக் காப்பாற்றுவதை நமது பெருமைக்குரிய ஒரு கடமையாகக் கருதுகிறோம். அதைப் போலத்தான் மற்றத் துணிகளில் எத்தனை சிறப்புக்கள் இருந்தபோதிலும் கதருக்கு நமது ஆதரவு. நாம் ஆற்றவேண்டிய கடமைகளில் உயர்ந்ததெனக் கருதவேண்டும்.

—ஹரிஜனில் காந்திஜி

"அட, இது என்ன பேச்சுப் பேசுறீங்க, அத்தை. ஊர்க்காரங்க மாமாவை மட்டுமா தூத்திக்கிட்டு இருக்கிறாங்க? உங்களையுமில்லா சேத்துத் தூத்துறாங்க. வீட்டிலே கல்லு மாதிரி ஒரு பொம்புள்ளை இருந்துக்கிட்டு இப்படி விட்டுக்கிட்டு இருக்கிறாளேன்னு உங்களையும் கண்டபடி பேசுறாங்களே, அத்தை!"

"பேசினாப் பேசிட்டுப் போகட்டும், தம்பி! நான் என்ன செய்யக் கிடக்குது? அந்த அதிர்ஷ்டம் கெட்டவளை மருமகளாக்கிக்கிட்டு மகனையே முழுசா அள்ளிக் கொடுத்துட்டேன்; இப்போ மானம் போகிறதா பெரிய காரியம்."

"உங்க மானம் போகிறது மட்டுமில்லே, அத்தை! ஊர் மானமே இல்லா இதுனாலே போயிடப் போகுது. நாளைக்குப் பக்கத்து ஊர்க்காரங்க இந்த விசயமாப் பேசிக்கிடறப்போது, 'கேசவபுரத்துக்காரியாம், தாலியறுத்த பொண்ணு ஒருத்தி'ன்னில்லா பேசுவாங்க அத்தை. பேச மாட்டாங்களா பின்னே? சொல்லுங்களேன்; நான் சொல்லுகிறது நிசந்தானே?"

"பேசத்தான் பேசுவாங்க. ஆமாம்; அன்னைக்கு நீங்களே அவங்களைக் காபந்து பண்ணிக்கிடறதாகச் சொன்னீங்களே; பண்ணிக்கிடறதுதானே?"

"காபந்து பண்ணிக்கிட்டுத்தான், இருந்தேன், அத்தை! ஆனா அவங்க

விசயத்தைப் புரிஞ்சுக்கிட்டு, இப்போ என்னைப் பக்கத்திலே அண்ட விடுறாங்கவில்லையே."

"அதுக்கு நாங்க என்ன பண்ண முடியும், தம்பி? இந்த ஊருக்குக் கிராம முனிசிப்பு நீங்க. ஊர் மானத்தைக் காப்பாத்தணுமின்னு நீங்க காப்பாத்திக்கிடுங்க. ஒருத்தி அடங்காப் பிடாரியாய்ப் போயுட்டா ஊர்க்காரங்கதான் அவளை அடக்கணும்."

"அடக்கிப் போடுவேன், அத்தை! ஒரு நிமிசத்திலே அடக்கிப் போடுவேன். ஆனா, சச்சிதானந்த மாமா முகத்துக்காகப் பாத்துக்கிட்டிருக்கேன். பாக்க வேண்டாமா? சொல்லுங்களேன்; நான் சொல்லுறது நிசந்தானே?"

"சரிதான்; ஊர் மானம் போகிற காரியத்திலே நீங்க இப்படி ஒருத்தன் முகத்துக்காகப் பாத்துக்கிட்டிருந்தா விளங்கினாப் போலத்தான்."

"அப்படிச் சொல்லிடக் கூடாது, அத்தை! நம்ம குடும்பத்தையும், நம்ம புஷ்பவன மாமா குடும்பத்தையும் நான் என் சொந்தக் குடும்பமா நினைச்சுக்கிட்டிருக்கேன். அதனாலேதான் உங்க கிட்டே முதலிலே ஒரு வார்த்தை சொல்லிப் போடுவோமின்னு வந்தேன். அவங்க - மரகத அத்தைகிட்டே சொன்னேன் - 'உங்க மகனை மரியாதையா நடந்துக்கிடச் சொல்லுங்க; இல்லாட்டி நான் பொல்லாதவனா யிருப்பேன்'னு சொன்னேன். அவங்க உடனே, 'தம்பி! தம்பி! நீங்க அவனுக்கு ஒண்ணில்லாட்டா ஒண்ணு பண்ணிடாதீங்க; புண்ணியமாப் போகுது. அவன் எங்களுக்கு ஒரே குழந்தை. இனிமேல் எங்க மகன் அவள் முகத்திலே முழிக்காதபடி நாங்க பாத்துக்கிடுறோம்' அப்படீன்னு வாக்குக் கொடுத்திருக்கிறாங்க; அது மாதிரி மாமாவும் உறுதி கொடுத்துட்டாங்கன்னாச் சரி; இல்லாட்டி....."

"அந்த இல்லாட்டித்தான் இங்கே நடக்கணும், தம்பி! என் தம்பிகிட்டே நீங்க கரடியா நின்னு கத்தினாலும் அவன் மகன் போக்கைத் தடுக்க மாட்டான். சும்மாவானும் தொண்டைத் தண்ணியை ஏன் வற்றடிச்சுக்கிட்டு இருக்கப் போறீங்க? அவனுக்குப் பதிலா நான் சொல்லுறேன், தம்பி! நீங்க அவளைக் கொன்னுதான் போடுங்க; நான் ஏன்னு கேட்கமாட்டேன். இந்தமாதிரி மானங்கெட்ட மூதேவிகள் இருக்கிறதைவிடச் செத்துட்டாக்கூட நல்லதுதான்."

"சே! சே! இதெல்லாம் என்ன பேச்சு, அத்தை! உங்க மனசை நான் ரொம்ப நோகப் பண்ணிட்டேன் போலிருக்குது. சரி, நான் பிறகாலே இன்னொரு நாள் வரேன். அதெல்லாம் டாக்டர் அம்மாளைச் சாகடிச்சுட மாட்டேன். அவங்களைச் சாகடிச்சுட்டா எங்கபாடெல்லாம் என்ன ஆகிறதாம்?"

இப்படிக் கூறிவிட்டு அன்று தாணுவதி விடைபெற்றுச் சென்றான். அவர்கள் உரையாடல் முழுவதையும் கேட்டுக் கொண்டிருந்த மாலா, தான் எடுக்க நினைத்திருந்த முயற்சியைத் தாணுவதி இன்னும் தீவிரமாக எடுத்து விட்டதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தாள். ஒரு வாரம் பொறுத்துப் பார்க்கலாம் என்ன நடக்கிறதென்று, என அவள் தீர்மானித்துக் கொண்டாள்.

ஒரு வாரத்துக்குப் பிறகு, தாணுவதி மீண்டும் வந்தான். இப்பொழுதெல்லாம் சுந்தரம் வீணாவின் ஆஸ்பத்திரிப் பக்கமே வருவதில்லை என்றும், வெளியேயும் அவள் பின்னால் சுற்றிக் கொண்டு இருப்பதில்லை என்றும் அவன் கூறினான். அவன் கூறியது உண்மைதான் என்பதை மாலாவும் உணர்ந்து கொண்டாள். ஏனென்றால் சுந்தரம் முன்போல் வீணாவைத் தேடித் தங்கள் வீட்டுக்குக்கூட வருவதை அவள் காணவில்லை. அவளுடைய மகிழ்ச்சியை அளவிட்டுக் கூற முடியுமா? இப்படி ஓரிரு மாதங்கள் சென்று விட்டால் அத்தானின் மனம் மாறிவிடும்; பிறகு அவரை நாம் எளிதில் வளைத்துவிடலாம் என்று எண்ணினாள்.

வீணாவின் மீதும், சுந்தரத்தின் மீதும் அவளுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பெல்லாம் இப்பொழுது பறந்தோடி விட்டன. தெய்வம் தன் பங்கில் இருப்பதாகவே அவள் நம்பினாள். சுந்தரத்தின் ஏமாற்ற அதிர்ச்சி தீர்ந்து, அவனுடைய மனம் தன்னைப் பற்றி நினைக்க அவகாசம் அளிப்பதற்காக அவள் நாட்களை எண்ணிக் காத்திருந்தாள். அதே சமயம் அவனை எங்கே எப்படி மீண்டும் தனியே சந்திப்பது என்பதையும் ஆலோசனை செய்து கொண்டிருந்தாள்.

இப்படித் தன் வாழ்வின்மீது மலை போல் விழ இருந்த சிக்கல் பனிபோல் நீங்கி விட்டதாக அவள் கனவு கண்டு கொண்டிருக்கையில் இன்று, சற்றுமுன் அவள் வேறொரு திடுக்கிடும் செய்தியைக் கேள்வியுற்றாள்.

அப்பொழுது இரவு எட்டரை மணி இருக்கும். வீணா அன்று புங்கனூற்று டிஸ்பென்சரியிலிருந்து திரும்பத் தாமதமாகி விட்டதால், வீட்டுக்கு வந்ததும், அவசரம் அவசரமாகச் சாப்பிட்டுவிட்டு ஆஸ்பத்திரிக்குச் சென்று விட்டாள். இப்பொழுது அவள் ஒரு நர்ஸை வேலைக்கு அமர்த்திக் கொண்டிருப்பதும், அவளைச் சாப்பாட்டுக்கு அனுப்பும் பொருட்டுத் தினந்தோறும் இரவு நேரத்

தில் ஆஸ்பத்திரிக்குப் போய்க் கொண்டிருப்பதும் மாலாவுக்குத் தெரியும். எனவே அதற்காகத்தான் அவசரமாகப் போகிறான் என்று அவள் நினைத்தாள்.

வீணா போய்ச் சிறிது நேரமானதும், சச்சிதானந்தம் பிள்ளையும் சாப்பிட்டு விட்டுத் தமது படுக்கையை எடுத்துக் கொண்டு வெளித்திண்ணைக்குப் படுக்கச் சென்று விட்டார். அதன் பிறகு தைலம்மாளும் மாலாவும் சாப்பிட அமர்ந்தனர். சாப்பிட்டுக் கொண்டிருக்கையில் தைலம்மாள் திடீரென்று "மெத்தப் படிச்ச மூஞ்சூறு கழனிப் பானையில் விழுந்ததாம்!" என்று கூறிவிட்டுத் தனக்குள்ளே சிரித்துக் கொண்டாள்.

மாலாவுக்குத் தன் தாயின் இந்தத் திடீர்ப் பழமொழியின் காரணம் விளங்கவில்லை. "என்ன அம்மா சொல்லுறே?" என்று அவள் கேட்டாள்.

"படட்டும்; நல்லாப் படட்டும். பட்டாத்தான் தெரியும், உன் அருமை அக்காளுக்கு" என்று மறுபடியும் புதிராகப் பேசினாள் தைலம்மாள்.

முன்பாயிருந்தால் மாலா தாயின் இத்தகைய குற்றச்சாட்டுக்களை மகிழ்வுடன் கேட்டுக் கொண்டு இருந்திருப்பாள். ஆனால் இப்பொழுதுதான் வீணா தன் வாழ்வுக்குக் குறுக்குச்சுவராக நில்லாமல் விலகி விட்டதாக அவள் கருதியிருந்தாளே. ஆதலால் இந்தக் குற்றச்சாட்டைப் பொறாமல், "எப்போ பார்த்தாலும் அக்காளை ஏதானும் குற்றம் சொல்லிக்கொண்டே இராவிட்டால் உனக்குப் பொழுது போகாதோ, அம்மா?" என்று அவள் வெடுக்கென்று கேட்டாள்.

"குற்றம் சொல்லலை; குதூகலப் படுகிறேன்! வேண்டாம் - வேண்டாம்னேனே, கேட்டாளா? ஆசுபத்திரியை வைச்சா; நர்சைப் போட்டுக்கிட்டா; இப்போ நல்லா மாட்டிக்கவும் மாட்டிக்கிட்டா. தாணுவதி என்ன இலேசுப் பட்டவனா?"

தாணுவதியின் பெயரைக் கேட்டதும் மாலாவின் மனம் பகீரென்றது. "என்னம்மா விஷயம்?" என்று அவள் பரபரப்புடன் வினவினாள்.

"தாணுவதிக்கு வவுத்து வலியாம். உங்க அக்கா ஆசுபத்திரியிலே படுக்க வைச்சு வைத்தியம் செய்யுறா."

"தாணுவதியையா?" என்று கூவினாள் மாலா. 'ஐயோ! அவனால் அக்காளுக்குத் தீங்கு ஏதேனும் ஏற்பட்டுவிடக்கூடாதே' என்ற அச்சம் சட்டென்று அவளைப் பற்றிக் கொண்டது.


அவளுடைய அச்சத்தோடு அச்சம் சேர்த்தாள் தைலம்மாள். "ஆமாம்; புலியைக் காட்டிலேயிருந்து புடிச்சுக்கிட்டு வந்து வீட்டிலே அடைச்சு வைச்சுக்கிட்ட கதைதான். தாணுவதிக்காவது! வவுத்து வலியாவது! அவன் என்ன நினைப்போட அங்கே போய்ப் படுத்துக்கிட்டிருக்கானோ?" என்றாள் அவள்.

இதற்கு மேல் மாலாவின் மனம் பொறுக்கவில்லை. "அக்காள் அவமானப் படப் போவதைப் பார்த்து நீ ஆனந்தப் படப் போகிறாயா அம்மா? சீ! எவ்வளவு கீழ்த்தரமான நினைவு உனக்கு." என்று கூறி விட்டுப் பாதிச் சாப்பாட்டிலே எழுந்து கையைக் கழுவிவிட்டு வடக்குத் தெருவுக்கு விரைந்தாள் அவள். 'அக்காளுக்கு ஏன் இப்படியெல்லாம் புத்தி போகிறது? நான் ஏற்கெனவே தாணுவதியைப் பற்றி மிகவும் நன்றாக எச்சரித்திருந்தும் அந்தக் கயவனுக்கு ஆஸ்பத்திரியில் இடம் அளித்து... போய், உடனே அவனைக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளச் செய்ய வேண்டும்' என்று அவள் ஓடோடி வந்தாள்.

ஆனால் வந்த இடத்தில் அவள் கண்ட காட்சி! தகர்ந்து விட்டதாகக் கருதியிருந்த குறுக்குச்சுவரல்லவா மீண்டும் எழுந்து நிற்கிறது!

ஒரு கணம் என்றால் ஒரு கணந்தான். அதற்குமேல் மாலாவால் அங்கே நிற்க முடியவில்லை, வேடனால் துரத்தப்பட்ட மான்போல் அவள் வந்த வழியே திரும்பி ஓடினாள். பின்னாலிருந்து "மாலா! மாலா!" என்று வீணா, உரக்கக் கூப்பிட்டது கூடக் காதில் விழாமல் விழுந்தடித்துக் கொண்டு ஓடினாள். (தொடரும்)

கதருக்காகப் போராடியவர்களெல்லாம் சர்க்காரின் அடக்குமுறைகளுக்கு ஆளான காலத்தில் ராட்டைக்கு மதிப்பும் உற்சாகமும் இருந்தன. ஆனால் இப்போது எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் சர்க்கார் ஆதரவும் கதருக்குக்




கிடைத்திருக்கையில் கதருக்கு மதிப்பு இல்லை; கதர் வேலையில் யாரும் ஆர்வமும் காட்டமாட்டேன் என்கிறார்கள். மக்கள் மனத்தில் கதரின் புனிதத்தன்மையும், கிராமத்தொழில்களின் மேன்மையும் மீண்டும் குடி புகுமென்று நம்புவோமாக!

— ராஜாஜி

பாத யாத்திரை





வேலையின் விளைவாக 8 மணிநேரம் நாற்காலியின் வடிவமும், ஓய்வின் விளைவாக 9 மணி நேரம் கட்டிலுக்கேற்ற வடிவமும் பூண்டு உயிர் வாழுகிறது கந்தையாவின் உடம்பு. மீதியிருக்கும் 7 மணி நேரத்தில் அது 'என் என்றால் என்னெனையாக' ஏதும் செய்துவிடுவதாகச் சொல்ல முடியாது—உட்கார்ந்து சாப்பிடும் அபிநயம் நீங்கலாக.

அன்று மாலை வழக்கப்படி தமது கார்யாலய நாற்காலியிடமிருந்து சமாதி நீங்கியபின், அவர், புதுமண வாழ்வு புகுந்த நண்பரொருவர் வழங்கிய சிற்றுண்டியை வயிற்றில் இறக்குமதி செய்துவிட்டு, நண்பர்கள் புடைசூழ பஸ் க்யூவைச் சரணடைந்தார். ஒரு மணி நேரம் கழிந்தும் பஸ்ஸே தென்படாததால் அவர் உடம்புக்கு நெடுநேரம் லாந்தல் கம்பத்தின் வடிவம்!

"இதைவிட நடந்தே போய்விடலாம், நடராஜா!" என்று குரல் கொடுத்தார் கந்தையாவின் மேலதிகாரி சுந்தரமூர்த்தி. ஆனால் இப் 'பாத யாத்திரைப் பிரேரணை' நடைமுறை'க்கு வருவதற்கு முட்டுக்கட்டையாக, கந்தையாவின் கால்கள் தயங்கின. சுந்தரமூர்த்தி சொன்னார்:

"ஒங்க காலிலே தெம்பு இல்லாமலில்லே, கந்தையா. இருக்கற தெம்பை உபயோகிக்கறதில்லே நீங்க. உங்களைச் சொல்றதைவிட, மனுஷனை சோம்பேறியாக்கிட்ட இந்தப் பாழும் பஸ், ரெயில், ஆட்டோரிக்ஷா நாகரீகத்தைத்தான் கொறை சொல்லணும்; இன்னைத் தேதிக்கி இந்தப் புண்ணிய பூமியிலே நடந்தாலே 'பாத தாமரைகள் நொந்திடுமே'ன்னு ஆயிப்போச்சு மனுஷன் கதி!"

"சொன்னதும் நெனப்பு வருதே. எங்க சங்கத்திலே ஒரு தரம் 'பாத யாத்திரை'ங்கற தலைப்பிலே பிரசங்கம் செய்யவேண்டிய புண்ணியவான் ஒருவர் மூணு மணி நேரம் லேட்டா வந்து பஸ் கிடைக்காததைச் சாக்காகச் சொன்னார்!" என்று கூறி, க்யூவில் கலகலப்பை உண்டுபண்ணினான் நையாண்டி நடராஜன்.

"புறப்படலாமா? என்று நெருக்கினார் மேலதிகாரி சுந்தரமூர்த்தி; கந்தையாவோ "... வந்து ... தம்ப வீட்டிலே பொன்சாதிக்கு உடம்பு சொகமில்லே, அதனாலே, போனதும் நானே சமையல் செய்தாகணும். 8 மணி நேரம் வேலை செய்துட்டு 2 மைல் நடந்த பெறவு எப்படி நான் ...?" என்று இழுத்த வண்ணம் நகரலானார்.



DL/P.1A-19 TM

" நடையை வேகமாப் போடுங்க, கந்தையா. உங்க காலிலே தெம்பு இல்லாமலில்லை, பால் சாப்பிடற பழக்கமுண்டா ? " என்றார் சுந்தரமூர்த்தி.

" எருமைப் பால் சாப்பிடுகிறாரோ ஒருவேளை, இவ்வளவு சோம்பேறியாக இருக்க ? " என்று இடைவெட்டினான் நையாண்டி. கந்தையா சொன்னார் :

" எங்க வீட்டுக்கு ஒரு சைக்கிள்தான் வந்து பால் கொடுத்துட்டுப்போகுது ! "

எதையோ திடும்மென்று நினைத்துக்கொண்ட மேலதிகாரி " ஒரு விஷயம், நடராஜ். நம்ப கந்தையாவுக்குக் கல்யாணம் ஆனபோது நம்ப ஆபீசுக்காரங்க அவருக்கு ஒரு சைக்கிளைப் பரிசாக் கொடுத்திருக்கணும் . . ." என்றார்.


" கரெக்டு ! அதை விட்டுவிட்டு ஒரு வெள்ளித் தட்டையும் ஒரு கட்டிலையும் கொடுத்த பலன், மனுஷன் தினமும் சாப்பிடறான், தூங்கறான் ! சைக்கிளைக் கொடுத்திருந் தோம்னா ஆபீசுக்காவது நேரத்திலே வருவாரில்லே, பஸ் மேலே பழியைப் போடாமே !" என்று நடராஜன் சளசளத்துவிட்டுக் கந்தையாவிடம் திரும்பி " இப்பத் தான் காண்டிபிடிக்கக் கிளம்பிவிட்டீங்களே, கந்தையா, ஆகார விஷயத்திலேயாவது தூங்கிடாம முழிப்பா இருங்க ! " என்றான்.

" மெய்தான், கந்தையா. நீங்க சாப்பிடற சாப்பாட்டுலே நல்லநல்லதா நாலுவித சத்தும் வைட்டமின்களும் கலந்திருந்தா, உடம்புலே தெம்பில்லேங்கற பல்லவிக்கே இடமிருக்காது " என்றார் சுந்தரமூர்த்தி.

" மருந்துக் கடைக்காரர் கொடுத்தால்தான் நமக்கு வைட்டமின் என்கிறதில்லே. காய்கறிக் கடைக்காரரிடமும் கிடைக்குது, பலசரக்குக் கடைக்காரரிடமும் கிடைக்குது ! " என்றான் நையாண்டி.

" பலசரக்குக் கடைக்காரரிடமா ? " கந்தையாவின் முகத்தில் கேள்விக் குறி !

" சரியாப் போச்சு ! பலசரக்குக் கடைக்காரரிடம் கிடைக்காத 'டால்டா' வனஸ்பதி ?" என்று எதிர்க் கேள்வி போட்டுக்கொண்டு விளக்கலானார் சுந்தரமூர்த்தி : " எல்லாவித சமையலுக்கும் உபயோகப்படற உயர்தர தாவரக் கொழுப்பான 'டால்டா'விலே வைட்டமின்கள் சேர்க்கப்பட்டிருக்கு—நோய்நொடிங்களை எதிர்த்து நிற்கத் தெம்பு தருகிற வைட்டமின் ஏ, பல்லுக்கும் எலும்புக்கும் வலிவு தருகிற வைட்டமின் டீ, இரண்டும் சேர்க்கப்பட்டிருக்கு!



" அப்போ நான் கால் சாத்தல் வாங்கிப் பார்க்கட்டுமா ? " என்று கேட்டுக்கொண்டார் கந்தையா. மேலதிகாரி சிரித்துவிட்டுக் கூறினார் : " அப்படியெல்லாம் கிடைக்காது கந்தையா, ஸீல் செய்த டின்களிலேதான் கிடைக்குது 'டால்டா' பிராண்ட் வனஸ்பதி. தூசி படிய, ஈ மொய்க்க, திறந்த டின்களிலே விற்கக்கூடியதல்ல 'டால்டா'. 'டால்டா'ன்னு சொல்லி எதையாவது கொடுத்தனுப்பக் கூடாதுன்னு கடைக்காரன்கிட்ட கண்டிப்பா சொல்லிப்புடுங்க. டின் மேலே பேரீச்ச மர அடையாளம் இருக்கான்னு பார்த்து வாங்குங்க !" சிந்தனைப் பாதையில் நடை போட்டது கந்தையாவின் மனது !

" எங்கேய்யா போயிகிட்டே இருக்கீங்க, கந்தையா, வீடு வாசல், சீக்குப் பொன்சாதி, சமையல் எல்லாத்தையும் தாண்டி எங்கே நழுவறீங்க ? " என்ற நையாண்டி நடராஜனின் எக்காளக் குரலும், இரும்புப் பிடியும் கந்தையாவை சிலிர்க்கச் செய்தன; இதென்ன ஆச்சரியம் ! வீட்டு வாசலுக்கே அல்லவா வந்துவிட்டார், எப்படி நடந்துவிட்டார் இரண்டு மைல்களை ! அந்த உற்சாகத்திலே, " எங்கே போகிறேனு ? கடைக்குப் போகிறேன் ஒரு 'டால்டா' டின் வாங்க, இது தெரியவில்லையா ! " என்று வெடுக்கென்று கந்தையா அந்த நையாண்டியின் நாக்கை அடக்கியபோது ஆளே மாறிப்போயிருந்தார் : பேச்சிலே ஒரு துடுக்கு, நடையிலே ஒரு மிடுக்கு !

ஊறல் அமர்ந்த உமாபதி

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

காவிரி நதியிலே மைசூரை அடுத்த கண்ணம்பாடியில் கட்டப் பட்டுள்ள அணை கிருஷ்ணராஜ சாகரம். இந்த அணைக்கட்டை விட, அங்கு இன்றைய இஞ்சினீயர்கள் சமைத் திருக்கும் பிருந்தாவனம் என்னும் வண்ணப் பூங்கா அழகானது. இரவு நேரத்தில் அங்குள்ள தண்ணீரை வான் நோக்கி எழும் வண்ணத் தாரைகளாக்கிப் பல வர்ண ஜாலங் களையே செய்திருக்கிறார்கள், இதுதான் பூலோக சுவர்க்கமோ என்னும்படி அத்தனை இன்பம் காண்பவர்களுக்கு. கண்ணனும் ராதையும் பளிங்குத் திருவுருவில் நிற்கிறார்கள் ஒருபுறத்தே; வழிந்தோடும் தண்ணீருக்குள் எல்லாம் வண்ண வண்ண விளக்குகள்; விசிறி எழுந்து பரவும் குழாய் நீரில் எல்லாம் வான வில்லின் அதிசயங்கள். இத்தனை கோலா கலத்தையும் தூக்கி அடிக்கும் காட்சி ஒன்று உண்டு அங்கே. அதுதான் காவிரித்தாயின் திருவுருவம். அணைக்கட்டிலிருந்து பிருந்தா வனத்துக்கு இறங்கும் வழியிலே அமைத்திருக் கிறார்கள். காகம் கவிழ்த்த கரகத்தை ஏந்தியவளாய் நிற்கிறாள் அவள், ஒரு மாடத்திலே. அந்தக் கரகத் திலிருந்து அளவான தண்ணீர் இடைவிடாமல்வழிந்து கொண்டே இருக்கிறது. காவிரி அன்னை ஏந்தி நிற்கும் குடம்வற்றாத பாத்திரமாக இருப்பது. அழகாக இருப்ப தோடு, அரிய கற்பனையாக வும் இருக்கிறது. இவ்வளவு பெரிய அணைக்கட்டில் தண் ணீரைத் தேக்கியதில் வியப் பில்லை. ஆனால், அந்த அணைக்கட்டின் சுவரிலே ஒரு மாடம் அமைத்து அதில் காவிரித் தாயை நிறுத்தி, அவள் கையில் ஒரு கரகத் தையும் கொடுத்து, அந்தக் கரகத்திலிருந்து அளவான தண்ணீர் இடைவிடாதுவிழ வகை செய்த கலைஞனின் கற்பனையை எண்ணிஎண்ணி வியக்கிறோம்.

இப்படி இருபதாம் நூற் றாண்டிலே, கலைஞன் ஒரு காவிரித் தாயை உருவாக்கி னால், இதற்கு எத்தனையோ வருஷங்களுக்கு முன்னாலேயே, ஒரு கங்காதரரை உருவாக்கி இருக்கிறான் ஒரு சிற்பி தக்கோலத்திலே. பாலாற்றின் கரையிலோ எங்கு பார்த்தாலும் நல்ல நீரூற்றுகள். பால் ஆறு இன்று வற்றிக் கிடப்பதைப் பார்த்து ஒரு நண்பர் சொன்னார், 'இது பாழ் ஆறு, தெரி யாமல் பால் ஆறு என்று சொல்லி விட்டார்கள் என்று. ஆனால் உண்மையில் இது நல்ல பால் ஆறுதான். பசுவின் மடியிலே உள்ள பாலை, கன்றுக்குட்டி முட்டிக் குடித்தால் தானே பால் சுரக்கும். அதுபோல், தன் மடியையும், கரையையும் அகழ்ந்து தோண்டுவாருக் கெல்லாம், வற்றாது பால் போலத் தண்ணீர் சொரியும் இயல்புடையது பாலாறு. இந்தப் பாலாற்றின் இருபுறமும், பத்துப் பதினைந்து மைல்வரை, மணற் பாங்கான இடத்தில் எல்லாம் பதினைந்து இருபது அடி ஆழத்தில் நல்ல தண்ணீர் கிடைக்கும், கிணறுகள் தோண்டினால். காஞ்சிக்கு வடக்கே ஏழெட்டு மைல் தூரத்தில் உள்ள புள்வேளூரிலே (பள்ளூர் என்று இன்று அழைக்கப்படுகிறது) ஏழுகிணறு என்ற பெயரோடு ஒரு கிணறு. அவ்வை புள்வேளூர்ப் பூதனிட்ட வரகரிசிச் சோற்றை உண்ட மகிழ்ச்சியில் பாடியபோது இதில் நீர் சுரந்தது என்பது கதை. இக்கிணற்றில் தண் ணீர் என்றும் நிறைந்திருப் பது இன்றும் கண்கூடு. இந்த ஊருக்கு வட கிழக்கே ஆறு ஏழு மைல் தூரத்தில் இருப்பது தக்கோலம். இந்த ஊரிலே ஓர் அதிசயம். ஊருக்கு வடகீழ் மூலையில் ஒரு சிறிய கோயில். அங்கு கோயில் கொண்டிருப்பவர் கங்காதரர். அந்தக் கங்கா தரரைச் சுற்றிய பிராகாரம் எல்லாம் ஒரே தண்ணீர். இந்தத் தண்ணீர் வருவது மேல் பிராகாரத்தில் உள்ள ஒரு சிறு நந்தியின் வாய் வழியாக. இந்த வட்டாரத் தின் நீர்நிலை (Water Table) உயர்ந்திருப்பதுகண்டு எந்த இடத்தில் நந்தியை அமைத் தால், தண்ணீர் இடை விடாது அதன் வாயினின் றும் வழியும் என்று கண் டிருக்கிறான் கலைஞன். நந்தியை அமைத்தோடு, கோயிலையும், அதற்குப்பிரா காரங்களையும் அமைத்து, அந்தக்கோயிலுக்குள் கங்கா தரரையுமே பிரதிஷ்டை செய்திருக்கிறான். தண்ணீர் வழியும் இடம் கண்டு நந் தியை, நந்தி தீர்த்தத்தை யெல்லாம் அமைத்தவன், கிருஷ்ணராஜ சாகரத்தில் காவிரித் தாயை வழிந்தோ



உமை

டும் கரகம் ஏந்திய கையனாய் நிறுத்திய கலைஞனுக்கே ஒரு வழிகாட்டி. இப்படி எப்போதும் நீர் ஊறிக் கொண்டே, வழிந்து கொண்டே இருக்கும் தலத்தை அன்று திரு ஊறல் என்றே அழைத்திருக்கிறார்கள் மக்கள். அந்த ஊறல் அமர்ந்த உமாபதியையே, ஞான சம்பந்தர் பாடி மகிழ்ந்திருக்கிறார். இந்த ஊரே இன்று தக்கோலம் என்று வழங்குகிறது. இந்தத் தக்கோலத் துக்கு இன்று சென்றாலும் கங்காதரரைக் கண்டு வணங்கலாம்; நந்தியையும் பார்த்து மகிழலாம். ஆனால் நந்திவாயிலிருந்து தண்ணீர் விழுவதைத்தான் காணமுடியாது. அந்த வட்டாரத்திலே உள்ள நன் செய் புன்செய் நிலங்களில் எல்லாம் எண்ணிறந்த பம்பு செட்டுகள் அமைத்து, மின்சாரத்தின் உதவி யால், கிடைக்கும் தண்ணீரை யெல்லாம் இறைத்து, பயிர் செய்கிறார்கள் மக்கள். ஆதலால் வற்றாத தண் ணீரும் வற்றியது அங்கே. கங்காதரரும் அபிஷேக மில்லாமலேயே நின்றுகொண்டிருக்கிறார் அங்கே. ஆம்! வயிற்றுச் சாமிக்குப் போய் மிச்சந்தானே மற்றச் சாமி களுக்கு. இங்கோ வயிற்றுச் சாமிக்கே போதிய அளவு கிடைப்பதில்லையே.

இந்தத் திரு ஊறல் என்ற தலத்திலே பிரதான மான கோயில் கங்காதரர் கோயில் அல்ல. கங்காதரர் கோயிலுக்குத் தெற்கே மேற்கு நோக்கிய பிரதான வாயிலுடன் இருப்பதே **உமாபதி ஈசுவரர்** கோயில். இங்கு உமாபதி உமையம்மையுடன் கோயில் கொண் டிருப்பதில் வியப்பில்லையே. இவர்கள் இங்கே எப்படி உருவானார்கள்? ஆம்! அன்று பிரமனும் விஷ்ணுவும் இறைவனது திருமுடி காணாமல் ஏமாற்றம் அடைந்து விட்டனர் திருவண்ணாமலையிலே. பின்னர் தந்தை யும் மகனுமாகச் சேர்ந்து சமாதான உடன்படிக்கை



பிரும்மா

செய்து கொண்டு பிரார்த்தித்துக் கொள்கிறார்கள், இறைவன் திரு உருவைக் காண. இதே சமயத்தில் பிருகஸ்பதியின் தம்பியான **சம்வர்த்தனரும்** இறை வன் திருக்கோலத்தைக் காணத் தவம் கிடக்கிறார் இந்தத் திருவூறலிலே. இந்த மூவர் விருப்பத்தையும் பூர்த்தி பண்ணும் பெரு நோக்குடன், உமாபதி தமது துணைவி உமையையும் அழைத்துக் கொண்டே வந்துவிடுகிறார் இந்தத் தலத்துக்கு. மூவரும் பெறு தற்கரிய பேறு பெறுகின்றனர் அங்கே. இந்தத் தலத் துக்கே சம்பந்தர் வருகிறார்; இறைவனை வாயாரப் புகழ்ந்து பாடுகிறார். அவருக்குப் பழைய கதை தான் தெரியும். அதன்பின் நடந்த புதிய விருத்தாந் தம் எல்லாம் தெரியாது. ஆதலால்

நீரின் மிசைத் துயின்றோன், நிறைநான்
முகனும் அறியாது அன்று,

நேரும் வகை நிமிர்ந்தான், அவன்
சேரும் இடம் விரைவில்

பாரின் மிசை அடியார் பலர்வந்து
இறைஞ்சி மகிழ்ந்து, ஆகம்


ஊரும் அரவு அசைத்தான்
திரு ஊறலை உள்குதுமே.

என்றுதான் பாடுகிறார்.




தக்ஷிணாமூர்த்தி

இந்தத் தலத்தைக் காணச் சென்னையிலிருந்து நேரேயே போகலாம். சென்னை பங்களூர் பாதையில் ஸ்ரீபெரும்புதூருக்கு வடக்கே ஐந்தாறு மைல் தொலை விலே, செம்பரம்பாக்கம் ஏரியைக் கடந்ததும், ஒரு பாதை திரும்பும் மேற்கே நோக்கி. அந்தப் பாதையில் கண்ணை மூடிக்கொண்டு காரை ஓட்டினால் நேரே தக்கோலமே சென்று சேரலாம். இல்லை, ரயில்பயணமே



திரு கே. சுந்தரமய்யர் அவர்களின் புதல்வர் திரு எஸ். நடராஜனுக்கும் சௌ. பட்டு தேவநாயகிக்கும் திருமணம் நடந்தது.



லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் ஏஜண்ட் திரு ஏ. ராமமூர்த்திக்கும் சௌ. புவனேசுவரிக்கும் திருமணம் நடைபெற்றது.



திருச்சி ஹிந்துஸ்தான் லிவர் கம்பெனியில் பணியாற்றும் திரு எஸ். விசுவநாதனுக்கும் சௌ. சேதுலக்ஷ்மிக்கும் திருமணம் நடந்தது.


வசதி என்றால், அரக்கோணம் போய், அங்கிருந்து செங்கல்பட்டு செல்லும் ரயில் ஏறி, நான்கைந்து மைல் சென்றதுமே, தக்கோலம் என்ற ஸ்டேஷன் வரும். அந்த ஸ்டேஷனுக்கும் தக்கோலத்துக்கும் நான்கு மைல், ஸ்டேஷனில் வண்டி கிடைப்பதெல்லாம் அருமை. காலிலே வலு இருந்தால் நடந்தே செல்லலாம் கிழக்கு நோக்கி. ஊருக்குக் கீழ்த்திசையில் விருத்த க்ஷீரநதி என்னும் கல்லாறு ஓடுகிறது. அந்தக் கல்லாற்றின் கரையிலேயே இருக்கிறது கோயில்கள் இரண்டும். வட பக்கம் இருப்பது கங்காதரர் கோயில். கோயில், மண்டபத்தின் விதானம் எல்லாம் தாழ்ந்தே இருக்கும். நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வை எல்லாம் அங்கே பலிக்காது. ஆதலால் கங்காதரரை நன்றாகத் தலை தாழ்த்தியே வலம் வர வேணும். கொஞ்சம் பயமாய்க்கூட இருக்கும், எந்த நேரத்தில் மண்டபம் இடிந்து நம் தலைமேல் விழுமோ என்று. ஆதலால் விரைவிலேயே தொழுது திரும்பி விட வேண்டும். திரும்பித் தென்பக்கம் வந்தால் மேற்கு நோக்கிய தலைவாயிலும், கிழக்கு நோக்கிய சந்நிதியும் உடையவராய் உமாபதி ஈசுவரர் இருப்பார். கர்ப்பக்கிருஹத்தின் வாயிலில் நிற்கும் துவார பாலகரே மிக்க 'ஸ்டைலாக' நிற்பார். இறைவனை வணங்கி விட்டுக் கர்ப்பக்கிருஹத்தை ஒரு சுற்றுச் சுற்றினால், நான்கு அழகான கோஷ்ட விக்கிரஹங்களைப் பார்க்கலாம்.

நல்ல அழகான வடிவங்களாக மாத்திரம் அல்ல, புதிய கோணங்களிலே அமைந்த கோலங்கள் அவை. சாதாரணமாக, தக்ஷிணாமூர்த்தி கால்மேல் கால் போட்டு யோக நிலையில் இருப்பதைத்தான் மற்றக் கோயில்களில் பார்த்திருப்போம். இங்குள்ள தக்ஷிணாமூர்த்தியோ ஒரு காலைத் தொங்கவிட்டு மற்றொரு காலை ஆசனத்தின் பேரிலேயே ஏற்றிவைத்து, தலை சாய்ந்த கோலத்தில் இருக்கிறார். அவர் தலை சாய்த்து, கையை உயர்த்தி இருக்கும் நிலை பார்த்தால், ஆசிரியத் தொழிலுக்கு ஏற்றவரே என்று தோன்றும். சிஷ்யர்களைப் பார்த்து, 'அட பயல்களா! நான் இருந்ததை இருந்தபடி இருந்து காட்டியதைப் புரிந்து கொண்டீர்களா?' என்று கேட்பது போலவே இருக்கும். கையில் பிரம்பு இல்லாத குறைதான். மற்றப்படி பழைய ஆசிரியருக்கு உரிய அத்தனை பாணியும் அப்படியே இருக்கிறது அவரிடம். பிரும்மாவும் அப்படியே. தஞ்சை ஜில்லாவிலே, கண்டியூரிலேதான் பிரும்மா இருந்த கோலத்தில் இருப்பதைப் பார்த்திருக்கிறோம். அவரைவிட அழகான கோலத்தில் இருக்கிறார் இங்கிருப்பவர். இவரது நான்கு முகங்களில் மூன்று முகம் நமக்குத் தெரியும். மற்றொன்று அந்தப் பக்கத்தில் இருப்பதாக பாவனை. தென்முகக் கடவுளும் நான்முகக் கடவுளும் உட்கார்ந்திருக்க, துர்க்கை மட்டும் எழுந்து நிற்கிறாள். மஹிஷ மர்த்தனம் பண்ணிய கோர வடிவைக் காணோம். மிகவும் சாந்தமான நிலை. ஏதோ நடனத்துக்கே புறப்படுவது போல வலக் காலை வேணுகோபாலன் பாணியில் ஊன்றி, இடக்கையை இடுப்பில் லாகவமாக இருத்தி ஒயிலாக நிற்கிறாள் அவள். இவர்கள் எல்


வோருமே உருவாகி இருக்கிறார்கள் கற்சிலைகளாக. நல்ல சோழர் காலத்து சிலா விக்கிரகங்கள் இவை. இவர்களைக் காணவே ஒரு நடை போகலாம் தக்கோலத்துக்கு. அப்படிப் போனால், அங்கே செப்புச்சிலை வடிவிலும், உமை உருவாகி இருப்பதைப் பார்க்கலாம். கொள்ளை அழகு இவளது வடிவம். மங்கைப் பருவம் தழைத்து நிற்கும் அந்தத் தங்க வடிவினைக் கண்டால், உள்ளம் தழைத்துக் குழையும். தாழ்ந்த இடக்கரத்தையும், அற்புத முத்திரை தாங்கிய வலக்கரத்தையும், புன்னகை தவழும் அதரங்களையும் உருவாக்கிய சிற்பிக்கு எத்தனை தரம் வேண்டுமானாலும் தலை வணங்கலாம். தக்கோலம் என்ற பெயர் இவ்வூருக்கு எப்படி வந்தது என்று சொல்வார் இல்லை. இத்தகைய தக்க கோலங்களை உள்ளடக்கிக் கொண்டிருப்பதனால்தானோ என்னவோ, இந்த ஊருக்கே தக்கோலம் என்று பெயர் வந்திருக்கிறது. கலை அன்பர்கள் சென்று காண வேண்டிய சிற்ப வடிவங்கள் அவை.

இனி, இச்சிலைகளைக் காண்பதிலேயே மெய் மறந்து விடாமல் வெளியே வரவேணும். தென்பக்கம் வடக்கு நோக்கி நிற்கும் **கிரிராஜ கன்னிகாம்பாளையும்** (இமவான் மகளாம் உமையைத்தான் இத்தனை படாடோபமாக நமக்கு அறிமுகம் செய்து வைப்பார்கள் அர்ச்சகர்கள்) வந்தித்து வணங்கலாம். கோயில் பிராகாரத்துக்குள்ளே மயில் வாகனக் கடவுளுக்கும் ஒரு கோயில் மண்டபத்துடன் சமீப காலத்தில் கட்டியிருக்கிறார்கள். ஆதலால் அவரையுமே வணங்கி வழிபட்டு விட்டு வெளியில் வரலாம்.


திரு ஊறல் என்னும் இத் தக்கோலம் சரித்திரப் பிரசித்தி பெற்ற ஊர் என்பதைச் சோழர் சரித்திரம் படித்தவர்கள் அறிவார்கள். தொண்டை மண்டலத்தைச் சேர்ந்த மணவில் கோட்டத்திலே, திருநாமநல்லூரிலே இருந்து அரசாண்டவன் முதல் பராந்தக சோழன். அவன் மகனே **ராஜாதித்யன்**. ராஷ்டிரகூட மன்னனான **மூன்றும் கிருஷ்ணன்** இந்த ராஜாதித்யனோடு போர் தொடுக்கிறான். ராஷ்டிரகூடரும், சோழரும் கி. பி. 949ல் போரில் கைகலந்த இடம் இத்தக்கோலமே. போர்க்களத்திலே யானை மீதிருந்தே உயிர் துறக்கிறான் ராஜாதித்யன். அதனால் யானைமேல் துஞ்சிய தேவன் என்ற பெயர் பெறுகிறான். போரில் வெற்றிபெற்ற கிருஷ்ணன், "கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னட தேவன்" என்று விருதுப் பெயர் சூட்டிக் கொள்கிறான். ராஜாதித்யனுக்குப் பின்வந்த சோழர் இந்தக் கன்னட தேவரை யெல்லாம் விரட்டி அடித்துத் திரும்பவும் சோழப் பேரரசை நிலைநாட்டுகிறார் என்பது வரலாறு. **தக்கோலப்போர்** சரித்திரப் பிரசித்தி பெற்றது. சண்டை நடந்த சமவெளியை ஊராரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம், அதில் அக்கறை உள்ளவர்கள். அதில் அக்கறை இல்லாதவர்கள், கோயிலில் உள்ள சிற்ப வடிவங்களைப் பார்த்து, உமை, உமாபதியைத் தரிசித்து விட்டுத் திரும்பி விடலாம் விரைவிலேயே.



திரு என். கிருஷ்ணமாச்சாரியாரின் புதல்வி சௌ. ஹேமாவுக்கும் திரு வரதராஜனுக்கும் சிறப்பாக விவாகம் நடந்தது.



ரம்பால் பிரைவேட் கம்பெனியின் டைரக்டர் திரு பி. ஆர். தாஸ் சௌ. சங்கரியைச் சென்னையில் மணந்துகொண்டார்.



ஸ்டில் போட்டோகிராபர் திரு வி. கோபால கிருஷ்ணனுக்கும் சௌ. விஜயலக்ஷ்மிக்கும் திருமணம் நடந்தது.

கொள்ளிடத்துச் சோதனை

கதிர்

ஒரு நாள் கொள்ளிடம் நதிக்கரையில் இரண்டு போர்வழிகள் குளிக்க வந்தார்கள். அவர்களிடையே வேட்டி துவைக்கும் கல்லுக்காகச் சண்டை மூண்டது.

"நான்தான் முதலில் வேட்டி துவைப்பேன்!" என்றான் ஒருவன்.

"அதெல்லாம் முடியாது. நான்தான் முதலில் துவைப்பேன்!" என்று கூறினான் மற்றொருவன்.

"உன்னால் முடிந்தால் என்னைத் தடுத்துப் பார்; மண்டையை உடைத்து விடுகிறேனா இல்லையா என்பது தெரியும்!" என்றான் முதல் மனிதன்.

"என்ன சொன்னாய்? மண்டையை உடைப்பாயா? முடியுமானால் உடை. அப்புறம் பார்க்கிறேன்" என்று இரண்டாவது மனிதன் கூறி விட்டு, கையில் தயாராக வைத்துக் கொண்டிருந்த ஈர வேட்டியைத் துவைக்க ஆரம்பித்தான்.

"இதோ வந்து விட்டேன் 'உன்னை என்ன பண்ணுகிறேன்' பார்!" என்று சொல்லிக் கொண்டு முதல் மனிதன் வேகமாகக் கரையை நோக்கி ஓடினான். தூக்க மாட்டாமல் ஒரு கல்லைத் தூக்கிக்கொண்டு வந்தான்.

தண்ணீர் அருகே நின்ற மனிதன் இதைக் கண்டு பரபரப்பு அடையவில்லை.

"சீக்கிரமாக அந்தக் கல்லைக் கொண்டாங்க, அண்ணே!" என்று கத்தினான்,

"ஏன், தலை போகட்டும் என்று உனக்கே ஆசையாயிருக்கிறதா?" என்று கேட்டான் முதல் மனிதன்.

"இல்லை, அண்ணே! வேட்டி துவைத்தேன். அந்தக் கல்லு உடைஞ்சு போச்சு. நீ கொண்டு வரும் கல்லை இப்படிப் போடு!" என்று இரண்டாவது போர்வழி கூறியபோதுதான், முதல் மனிதனுக்கு உண்மை விளங்கியது. கல்லை உடைத்தது முரட்டுக் கதர் வேட்டி என்பது. "இந்தக் கல்லையும் அந்தக் கதர் வேட்டியால் உடைத்து விடாதே, அப்பா!" என்று முதல் மனிதன் கெஞ்சினான்.

"அதெல்லாம முடியாது. மரியாதையாகக் கல்லைக் கீழேபோடு, இல்லாவிட்டால் இந்த வேட்டியால் உன் தலையை...!" என்று ஈரக் கதர் வேட்டியை வேகமாக ஓங்கினான் இரண்டாவது போர்வழி.

கதர் ஆடை சில ஆண்டுகளுக்கு முன் வரையில் இப்படிக் கல்லுடைக்கும் கருவிகளாக விளங்கி வந்தது.

ஒருவர் எவ்வளவுக் கெவ்வளவு முரட்டுக் கதர் அணிகிறாரோ அவ்வளவுக்கு அவ்வளவு மன உறுதி பெற்றவராக அவரைக் கொண்டாடுவது வழக்கம்.

இப்பொழுது கதர் ஆடையைக் கண்டு அப்படியெல்லாம் பயப்பட வேண்டிய அவசியமில்லாமல், மிக மிக மெல்லிய முறையில் தயாரிக்கப் படுகின்றன. "இது கதரா?" என்று கேட்கத் தகுந்த விதத்தில் ஆடைத் தயாரிப்பு தமிழ் நாட்டிலும், இதர ராஜ்யங்களிலும் வளர்ந்து வருகின்றது.

காந்தி மகான் உயிரோடிருந்தபோது தமது பிறந்த நாளைக் கொண்டாடுவதற்குப் பதிலாகச் சர்க்கா ஜயந்தி கொண்டாடும்படி பாரத மக்களைக் கேட்டுக் கொண்டார்.

காந்தி மகானின் விருப்பத்தையொட்டி ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் முதல் வாரத்தைச் சர்க்கா ஜயந்தியாகக் கொண்டாடி வருகிறோம்.

கதர் கட்டுவது பற்றி, எவ்வளவோ சர்ச்சைகளும் தர்க்க வாதங்களும் கிளம்பியபோதிலும்



நூற்பு யக்ஞத்தில் ஈடுபட்டிருக்கும் வினோபாஜி

கதர் உற்பத்தியும், மக்கள் அதை உபயோகிப்பதும் தடைப்பட்டு விடவில்லை. இதற்கு மாருக, கதர் உற்பத்தி பெருமளவுக்கு அதிகரித்து வருகிறது. பொதுமக்கள் கதர் வாங்கி உடுத்துவதும் அதிகரித்துத்தான் வருகிறது.

இதரவகைத் துணிகளைவிடக் கதர் விலை சற்று அதிகம்தான். ஆனல், கதருக்காக நாம் அளிக்கும் ஒவ்வொரு ரூபாயும் அதை உற்பத்தி செய்வோருக்கு நேரடியாகச் செல்கிறது. இதர துணிகள் விஷயத்தில், உற்பத்தி செய்பவர்கள், உழைப்பவர்களுக்குக் கால் பகுதிக்கு மேல் போவதில்லை. இடையில் அரசாங்கம் வரியாக ஒரு பகுதியை எடுத்துக்கொண்டு விடுகிறது. இந்த ஒரு காரணம் மட்டுமின்றி இன்னும் பல காரணங்களுக்காகவும் கதர் உடைக்கு நாம் ஆதரவு அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அணு விஞ்ஞான யுகத்தில், கதர் உருப்படுமா என்ற கேள்விக்கும், கதர் அன்பர்கள் தகுந்த விடை அளிக்கிருர்கள்.

அணு மின்சார கூடம் அமைத்தால் நாட்டில் மொத்தம் ஐயாயிரம் பேருக்குப் புது வேலை அளிக்கலாம். இதற்காக இந்திய சர்க்கார் 55 கோடி ரூபாய் ஒதுக்கி அது செலவிடப்பட்டு வருகிறது.


ஆனல் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கதருக்காக 55 கோடி ரூ. ஒதுக்கியிருக்கிருர்கள். இதன் மூலம் தமிழ் நாட்டில் மட்டும் ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்திருப்பதைக் கவனிக்க வேண்டும்.

காந்திஜி வகுத்த புனிதமான திட்டங்களில் கதர் இயக்கம் முக்கியமானதாகும். இந்த முக்கியமான திட்டத்தை நாடு சுயராஜ்யம் பெற்ற பின் அரசாங்கம் கிராம முன்னேற்றத் திட்டங்களில் ஒன்ருக எடுத்துக்கொண்டு அதற்கு ஆதரவு தர முற்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் கதர் வளர்ச்சித் திட்டம் ஒருபுறம் இருக்க, சர்வோதய சங்கம், கதர் வளர்ச்சிக்காகக் காந்திய நெறி வழியில் நின்று தனியாகப் பணிபுரிந்து வருவதைக் காண்கிறோம். இந்த சர்வோதய சங்கத்தின் பணிகளை இதற்குமுன் சர்வ சேவா சங்கமும், அகில பாரத சர்க்கா சங்கமும் நிறைவேற்றி வந்தன. தமிழ் நாட்டில் சர்வோதய சங்கம், அரசாங்கம், இவை தவிரத் தனிப்பட்ட கிராம சேவை ஸ்தாபனங்கள் பலவும் கதர் உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றன. இந்திய சர்க்கார் அகில இந்திய முறையில் கிராம உத்தியோக பவனம் ஸ்தாபனங்கள் மூலமாகக் கதர் வளர்ச்சியில் ஓரளவு ஈடுபட்டு வருகிறது.

இந்த நிர்வாக அம்சங்கள் ஒருபுறம் இருக்க, சாதாரண மனிதன் கதர் வாங்கும்போது கருணை உள்ளத்தோடுதான் அதை வாங்குகிறன். இந்தப் பண்பாடு வளர்ச்சி பெற வேண்டுமென்பதுதான் காந்திஜியின் நோக்கமும். கதர் வாங்குவது ஒருவகை தியாக உணர்ச்சியை எடுத்துக் காட்டுவதாகவும் கூறலாம்.

கதர் கட்டுபவர்களைத் திட்டுவதையும் நாம் கேள்விப்படுவதுண்டு. இதில் உண்மையிருந்தாலும், அரசியலில் மோச நாசம் செய்பவர்கள் அணிந்தும் கூடக் கதர் ஆடையின் மதிப்பு குறையவில்லை என்பதையே நாம் முக்கியமாகக் கருத்தில் கொள்ளவேண்டும்.

கதர் உற்பத்தியில் ஒரு புதிய சகாப்தத்தையே உண்டாக்கிவிட்டது அம்பர் சர்க்கா!



அழகிய அம்பர் ராட்டை

நூறுரூபாய் விலையுள்ள இந்தஅம்பர் சர்க்காவை மூன்று மாதப் பயிற்சிக்குப் பின் தவணை விலைக்கு அளிக்கிருர்கள். 48 மாதங்களில் கிரயத்தைத் திருப்பிக் கொடுத்தால் போதும் என்கிருர்கள். அம்பர் சர்க்கா மூலம் வறுமையால் இறக்கும் நிலையிலிருந்த எண்ணற்றகுடும்பங்கள் உயிர் பெற்றிருக்கின்றன. கிராமக் குடிசைகளில் சுழலும் ஒவ்வொரு அம்பர் ராட்டையின் குரலும், ஒரு கதை கூறும். 'அம்பர் ராட்டை' என்பது தமிழ் நாட்டைச் சேர்ந்த இரு ஏகாம்பரம்என்பவரால் உருவாக்கப்பட்டது. இதில் சிக்கலான இயந்தி



தீபாவளி நன்னாளில் வருகிறது
உயர்ந்த
கருத்துக்களும்
உள்ளமுருக்கும்
கதையும் கொண்ட
புதுமைச்
சித்திரம்..
கண்
திறந்தது
டைரக்ஷன்
K.V.சீனிவாசன்
நாராயணன் கம்பெனி தயாரிப்பு



ரக் கருவிகள் ஒன்றுமில்லை. சாதாரண ராட்டையைவிட மூன்று அதிகப்படியான கதிர்களை இணைத்து இந்த ராட்டை எளிய முறையில் அமைக்கப்பட் டிருக்கிறது.

" சிக்கலில்லாத புது மாதிரி ராட்டையை யாராவது தயாரித்துக் காட்டினால் அவருக்கு லட்ச ரூபாய் பரிசு அளிக்கலாம் " என்று காந்திஜி கூறினார். காந்திஜி முன் பலர் பல விதமான ராட்டைகள் கண்டுபிடித்து இயக்கிக் காட்டினார்கள். அவை ஒன்றும் திருப்தி யளிக்கவில்லை. காந்திஜிக்குப் பின், சர்க்கா சங்கத் தலைவர்கள் இந்தப் பரிசு அழைப்பை மீண்டும் பொதுமக்களுக்கு நினைவூட்டினார்கள். அப்போதுதான், திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த திரு ஏகாம்பரம் என்பவர் முதலில் இரண்டு கதிர்கள் இயக்கும் உருளைகளாலான சர்க்காவை அங்கு அனுப்பி வைத்துப் பரிசு பெற்றார். அகில பாரத சர்க்கா சங்கத் தலைவர்கள் இந்த ஏகாம்பரம் சர்க்காவை நான்கு கதிர்கள் இயக்கும்படி திருத்தி அமைத்தனர். வினோபாஜியின் ஆசி இதற்குக் கிடைத்தது. ஆனால் வினோபா-பாவே அவர்கள், இந்த ஏகாம்பரம் சர்க்காவில் நான்கு கதிர்களுக்கு மேல் அமைப்பதை விரும்பவில்லை. கிட்டத் தட்ட ஆலைகளில் நூற்பதற்கு ஒப்பாகிவிடும் என்று எச்சரித்திருக்கிறார்.

அம்பர் சர்க்கா இந்தியா முழுவதும் கிராமங் களில் மெதுவாக உபயோகிக்கப்பட்டு வருகிறது.

சாதாரண ராட்டையைக் கொண்டு ஒருவர், தினசரி எட்டணா சம்பாதிக்க முடியுமானால், அம்பர் ராட்டை மூலம் ஒன்றரை ரூபாய்வரை அவர் இப்போது சம்பாதிக்கலாம்.

அம்பர் ராட்டையில் நூற்பதற்கு முக்கிய மாக அதற்கேற்ற பட்டை போடவேண்டும். பஞ்சை அரைத்து வில் அடித்து, சாதாரண ராட்டைக்குப் பட்டை போடுவதுபோல் போட்டுவிட்டால் போதாது. அம்பர் ராட் டைக்கென்றே சிறு நாடாவைப் போன்ற பட்டை போடவேண்டும். இப்படிப் பட்டை போடுவதற்குத் தனி உருளைகள் கையாளப் படுகின்றன. பட்டைகள் தடையின்றிக்



நூறுவது வயதை எட்டிப் பிடித்துக்கொண் டிருக்கும் மூதாட்டி அன்னம்மாள் நூல் நூற்ப தைக் கொண்டே ஜீவித்து வருகிறாள்.

கிடைக்கக் கதர் உற்பத்தி நிலையங்களில் தகுந்த ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள்.

அதிகப் பயிற்சி இல்லாமல் உடனடியாக அதிகப்படியான மக்களுக்கு வேலை அளிப்பது கதர் உற்பத்தித் தொழில். இந்தத் தொழில் தமிழ் நாட்டில் என்றுமே முன்னணியில் இருந்து வந்திருக்கிறது. அந்தப் புகழை இன்றும் அது பாதுகாத்து வருகிறது.

தமிழ் நாட்டில், சில கட்சிகளின் கொள்கை களை அதன் சட்டைகளை வைத்தே அமைந் திருப்பதைக் காணலாம். 'இன்ன சட்டைக் காரன், இன்ன சட்டைக் கட்சி' என்றுதான் சொல்லப்படுகிறது.

இதர சட்டைகளுக்கே இந்த மரியாதை என்றால் கதர்ச் சட்டைக்கு மக்களிடையே எவ்வளவு மதிப்பு இருக்க வேண்டும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.



தாமே பட்டைபோட்டு நூற்று வாழ்ந்துவரும் ஒரு குடும்பம்

ஒரு காலத்தில் கொள்ளிடத்தில் கல்லுடைக்கும் தன்மையிலிருந்த கதர் இன்று நாகரிகத்தையொட்டி ஆச்சரியப் படத்தக்க விதத்தில் மென்மை பெற்றிருப்பதையும் பார்க்கிறோம். இது கதர்தானா என்று வியக்கும்படி அவ்வளவு மேன்மையுடன், கலையழகு பெற் றுத் திகழ்வதையும் காண்கிறோம். கதரில் இவையெல்லாம் சாத்தி யமா என்றும் நம்மை அறியாமல் கேட்கிறோம். இதேமாதிரி மென் மையும், வண்ண ஜாலங்களும் அமைத்துக் கதர் ஆடைகளைத் தயாரித்துக் கொண்டே போனால், மில் ஆடை விற்பவர்கள் வரும் காலத்தில், "இது 'அசல் மில் துணிதான், கதர் அல்ல!" என்று சொல்ல நேருமோ என்று தோன்றுகிறது.



பூர்வ கதை

பாரிஸ்டர் பரமசிவம் சென்னையில் செல்வமும் புகழும் உடைய பெரிய மனிதர். அவர் மனைவி சொர்ணம்பாள் நாற்பத்தைந்து வயதுக்கு மேல் ஒரு பெண் குழந்தைக்குத் தாயாகிறாள். இது அவர்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதற்கு மாறாக, பெரும் மனக் கிளர்ச்சியை உண்டுபண்ணுகிறது. அதற்கு உஷா என்ற பெண்ணே காரணமாக இருக்கிறாள். உஷா அவர்களுடைய சொந்தப் பெண் என்றுதான் ஊரெல்லாம் எண்ணிக் கொண்டிருக்கிறது. உஷாவும் அப்படியேதான் எண்ணி வருகிறாள். ஆனால் அவள் உண்மையில் அவர்களுடைய பெண்ணல்ல என்பது அவர்களுக்கு மட்டும்தான் தெரியும். பாரிஸ்டர் தம்பதிகளுக்குக் குழந்தையில்லையே என்ற குறை வெகு நாட்களாக இருந்து வந்தது. இனி இந்தப் பிறவியில் தங்களுக்கு அந்தப் பாக்கியம் இல்லை என்றே அவர்கள் முடிவு கட்டிவிட்டார்கள். இப்படிப்பட்ட நிலையில்தான் அவர்கள் வாழ்க்கையில் ஒரு புதிய ஒளி தோன்றுகிறது. பரமசிவமும், அவர் மனைவியும் சிங்கப்பூர் கோடீசுவரரான முத்தையாவைப் பார்த்துவிட்டு, தாய் நாட்டுக்குத் திரும்பி வரும் வழியில் நாகப் பட்டினத்துத் துறை முகத்தை அடைகிறார்கள். அவர்களுடைய கப்பல் கரையை எட்டும் முன்பே பெரும் புயலும் கடலின் கொந்தளிப்பும் வலுத்து விடுகின்றன. அன்றிரவு ஒரு ஹோட்டலின் மேல் தளத்தில் அவர்களுக்குப் பக்கத்து அறையில் ஓர் இளம் தம்பதிகள் பதினைந்து நாள் குழந்தையுடன் தங்கியிருந்தார்கள். புயலின் சீற்றம் காரணமாக அவர்கள் பரமசிவத்தின் அறையில் பாதுகாப்பை நாடி வருகிறார்கள். உள்ளே வந்த பிறகுதான் அவர்களுக்குக் குழந்தையின் பாலுணவை வைத்துவிட்டு மறந்துபோனது தெரிகிறது. ஒருவருக்குத் துணையாக ஒருவர் என்று இருவரும் குழந்தையை விட்டுவிட்டுப் போகிறார்கள். போனவர்கள் அப்புறம் திரும்பவேயில்லை. இடிந்து விழுந்து கொண்டிருந்த பகுதியில் அகப்பட்டுக் கொண்டு உயிரை இழந்து விடுகிறார்கள். குழந்தை பாரிஸ்டருடையதாகி விடுகிறது. தெய்வமே பார்த்துக் கொடுத்த குழந்தையான அதை அவர்கள், தங்களுடைய சொந்தக் குழந்தையென்று சொல்லிக் கொள்கிறார்கள். அருமை பெருமையாக வளர்க்கிறார்கள். பிரபல பரத நாட்டிய வித்துவான் ஒருவரை அமர்த்தி நாட்டியம் பயிற்றுவிக்கிறார்கள். உஷா அழகும் அறிவும் கொண்டு அவர்கள் உள்ளங்களைக் கவர்கிறாள். அவளுக்குப் பன்னிரண்டு வயதாகும்போது ஒரு நாள் சொர்ணம்பாள் கருவுற்றிருக்கும் செய்தியைக் கூறுகிறாள் லேடி டாக்டர். இது அவர்களுக்கே விபரீதமாகப் படுகிறது. பத்து மாதங்களில் ஒரு பெண் குழந்தையும் பிறந்து விடவே, மனப் போராட்டமும் தொடங்கி விடுகிறது. இனி உஷாவின் நிலை என்ன? சொந்தப் பெண்ணிடம் உள்ள பாசம், உஷாவை வேற்றுமையாக எண்ணச் செய்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் முத்தையாவின் சொத்துக்களையெல்லாம் அடையப் போகும் கண்ணபிரான் சென்னைக்கு வருகிறான். உஷாவை அவனுக்கு மணம் செய்து கொடுத்து விடுவது என்று அவர்கள் முடிவு செய்கிறார்கள். முத்தையாவும் இதை வரவேற்கிறார். ஆனால் கண்ண





தேன்கூடு

பிரான் நடந்துகொண்ட விதம் விசித்திரமாக இருக்கிறது. அவன் உஷாவை மணந்து கொள்ளத் தடையேதும் சொல்லவில்லை. ஆனால் அதே சமயத்தில் அவன் சுசீலா என்ற பெண்ணொருத்தியிடம் நெருங்கிப் பழகி வருகிறான். சுசீலாவின் மாமா நாகலிங்கம் சிங்கப்பூரில் இருக்கிறார், இதுவே அவர்களுடைய நட்பை அன்பாக வளர்க்கிறது. சுசீலா அவனுக்குத் தன்னையே அர்ப்பணம் செய்து கொண்டு விடுகிறாள். வடபழனி ஆண்டவன் சந்நிதியில் அவனைக் கணவனாகவும் வரித்துவிடுகிறாள். கண்ணபிரானைப் போலவே உஷாவும் இந்தக் கல்யாணத்தைப் பற்றி வெளிப்படையாக எதுவும் கூறவில்லை. அவள் மனம் தாயின் அன்புக்காக ஏங்குகிறது. கண்ணபிரானைக் கண்டாலே அவளுக்கு ஏனோ வெறுப்புத்தான் உண்டாகிறது. ஆனால் பாபு என்ற ஏழை இளைஞன் ஒருவனிடம் அவள் மிகவும் பிரியமாகப் பேசிப் பழகி வருகிறாள். இது அவனிடம் மிகுந்த அன்பும் பற்றுதலும் கொண்ட அவர்கள் வீட்டு டிரைவருக்கும் அவன் மனைவி பொன்னிக்கும் விந்தையாகவே படுகிறது. பாபு சிறுவனாக இருக்கும்போதே கண்ட உஷா, அவனிடத்தில் உண்மையான பற்றுக் கொள்கிறாள். அவன் நீதிபதி ஒருவரின் வீட்டில் முதலில் அட்டெண்டராக இருந்து வருகிறான். ஆனால் ஒரு நாள் திடீரென்று வேலையிலிருந்து விலக்கப்படுகிறான். அன்று முதல் அவன் தன் நண்பன் சண்முகம் என்பவனோடு சேர்ந்து, சொந்தமாகப் பழைய காகிதம் வாங்கி விற்கும் தொழிலில் ஈடுபடுகிறான். அவனைப் பல சந்தர்ப்பங்களில் கண்ட உஷா அவனுடைய நேர்மையையும், பொது நலப்பணியில் அவன் காட்டும் அக்கறையையும் தெரிந்துகொள்ள வாய்ப்புகள் நேருகின்றன. வெள்ளையன் தோட்டம் என்ற இடத்தில் அவனும், சண்முகமும் ஓர் இளைஞர் சங்கத்தைத் தொடங்கி அதை வளர்க்கப் பாடுபடுகிறார்கள். பாபு சேற்றில் முளைத்த தாமரையைப் போல் விளங்குகிறான். அவனை எடுத்து வளர்த்த மீசைப் பக்கிரியும், பாஞ்சாலியும் அந்தத் தோட்டத்தில்தான் ஒரு குடிசையில் வாழ்ந்து வருகிறார்கள். பாபுவிடம் மாதம் பிறந்தால் பணம் கேட்டு நச்சரித்துக்கொண்டிருந்த அவர்கள், கண்ணபிரான் சென்னைக்கு வந்தது முதல் பணப் புழக்கம் உள்ளவர்களாக இருக்கிறார்கள். மீசைப் பக்கிரி, கண்ணபிரானை இரண்டு சந்தர்ப்பங்களில் பார்த்துப் பேசிவிட்டும் வருகிறான். இந்த மாறுதலுக்குக் காரணம் விளங்காத பாபு, ஒருநாள் சண்முகத்தின்மீது காதல் கொண்டிருந்த தேவானையைப் பார்க்க மதுராந்தகத்துக்கு அருகிலுள்ள கிராமம் ஒன்றுக்குப் போகிறான். சண்முகம் மட்டுமே தோட்டத்தில் இருக்கிறான். பாபுவைத் தேடிக் கொண்டு வந்த உஷாவைப் பார்த்து அவன் இந்த நட்பு பொருத்தமற்றது என்று சொல்லி, அவனை மறந்துவிடும்படி கூறிவிடுகிறான். உஷா இதைக் கேட்டு அதிர்ச்சியடைகிறாள். இனி, இந்தக் குடிசையின் பக்கம் வருவதில்லை என்று போய் விடுகிறாள். இதே சமயத்தில் சுசீலா, கண்ணபிரானிடம் தன்னைச் சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்லும்படி கூறுகிறாள். கண்ணபிரானுக்கு இது அவ்வளவாகப் பிடிக்கவில்லை. ஆயினும் அவன் அதை வெளிக்காட்டிக்கொள்ளாமல் இருந்து விடுகிறான். அவனிடம் தன்னையே ஒப்படைத்துக் கொண்டுவிட்ட சுசீலா, அவன் தன்னை அழைத்துச் சென்று, மணந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் தவறு என்ன? தன்னைவிட, தான் உயர்ந்ததாக மதிக்கும் எல்லாவற்றையும் கண்ணபிரானுக்குச் சமர்ப்பணம் செய்துவிட்ட எண்ணத்தில்தான் அவள் இருந்தாள்.

[முதல் பாகத்தின் சுருக்கம் இவ்வளவே; இனி இரண்டாம்பாகம் தொடங்குகிறது.]



ஆர்வி

இரண்டாம் பாகம்

அத்தியாயம் 1

பிரிவு

கிருஷ்ணபிரான் சென்னையில் நான்கு மாதங்கள் போல் தங்கியிருந்து விட்டான். வாரம் தவருமல் சிங்கப்பூரிலுள்ள தன் பெரிய தந்தை முத்தையாவுக்குக் கடிதங்கள் எழுதி வந்தான். 'தேன்கூடு' வியாபார ஸ்தாபனம் சம்பந்தமாகவும் தன்னுடைய அந்தஸ்து காரணமாகவும் அவன் சென்னையிலுள்ள பிரபலஸ்தர்கள், அரசியல் பிரமுகர்கள், அதிகாரிகள் முதலியவர்களைச் சந்தித்துப் பழக்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

"பாரிஸ்டர் இந்த விஷயங்களில் எனக்குப் பெரும் உதவியாகவும் ஆலோசனை கூறுபவராகவும் இருந்து வருகிறார். அவரையே சென்னையில் தங்களுடைய பிரதிநிதியாக எண்ணிக் கொண்டிருக்கிறேன். அவரைக் கலந்து கொள்ளாமல் எந்தச் சிறு காரியத்தையும் நான் செய்வதில்லை. ஆகவே என்னைப் பற்றி நீங்கள் கவலையே படவேண்டியதில்லை. இத்தனை ஞாபகசக்தியுடையவரையும் மனித இயல்புக்களை எடை போட்டு வைத்திருப்பவரையும் நான் இதற்கு முன்பு பார்த்ததேயில்லை. பாரிஸ்டர் ஓர் அதிசய மனிதர்தான்!" என்று அவன் ஒரு கடிதத்தில் குறிப்பிட்டிருந்தான்.

இந்தக் கடிதத்துக்கு அவன் எதிர்பார்த்த பலன் கிடைத்தது என்பதில் சந்தேகமில்லை. ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பது போல், அவன் முத்தையாவையும் அதே சமயத்தில் பாரிஸ்டரையும் திருப்திப்படுத்தி விட்டான். முத்தையா உடனே இதைப் பாரிஸ்டருக்கு அறிவித்துத் தம் நன்றியையும் தெரிவித்துக் கொண்டிருந்தார். பாரிஸ்டர் உள்ளம் அப்படியே குளிர்ந்து போய் விட்டது. இதைவிட அவனுக்கு வேறு என்ன வேண்டும்?

சிங்கப்பூரிலிருந்த பெரிய தந்தைக்கும் சென்னையிலிருந்த பரமசிவத்துக்கும் நல்லவனாக நடந்து கொள்வதில் அவன் மிகவும் கண்ணும் கருத்துமாக இருந்தான் என்றே சொல்ல வேண்டும்.

"பார்த்தாயா சொர்ணம்! முத்தையாவைவிட இந்தத் தம்பிக்கு என்னிடம் ஒரு பிடி அதிகமாகவே மதிப்பு. ஏதாவது முணுக்கென்றால் கூட என்னிடம் ஓடி வராமல் இருப்பதில்லை. அதிருஷ்டம் ஒருவனுக்கு நடுவில் வரலாம். அது கடைசி வரையில் பொருந்தியிருக்க நல்ல அறிவும் குணமும் வேண்டும். இந்த வயதில் இப்படி இருப்பது அருமை. அதுவும் வரவு செலவு தெரியாத பணம் இருந்துவிட்டால் கேட்கவே வேண்டியதில்லை. சிமைக்கு என்றும், அமெரிக்காவுக்கு என்றும் கண்டபடி சுற்றச் சொல்லும். சேராத சேர்க்கையெல்லாம், கூடாத பழக்கமெல்லாம் வந்து சேரும். பணம் செலவானால் போகிறது என்று விட்டு விடலாம், குணம் போய் விட்டால் அது குலத்தையே கெடுத்து விடும். தெரியாமலா கண்ணபிரானைப் புள்ளி போட்டு வைத்திருக்கிறேன்?" என்று ஜம்பமடித்துக் கொண்டார் பரமசிவம்.

சொர்ணம்பாளுக்கும் இது பெருமையாகத்தான் இருந்தது. ஆனால் அவளுக்கு உற்சாகம் என்னவோ உண்டாகவில்லை. பாரிஸ்டருடைய புள்ளியெல்லாம் சரிதான். ஆனால் இவ்வளவையும் அடையப் போகிறவள் யார்? அவர்கள் வயிற்றில் பிறந்த பெண்ணுக்கா இந்த யோகம் அடிக்கப் போகிறது? உஷாவுக்குக் கிடைக்கப் போவதை எண்ணி அவர்கள் எப்படி உண்மையான மகிழ்ச்சியடைய முடியும்? யாரோ பெற்றெடுத்து விட்டு, எங்கோ இருந்து வளர்ந்து வருபவளுக்கு இவ்வளவு பெரிய பாக்கியமா? அதற்கு இவர்கள் இவ்வளவு பாடுபட வேண்டுமா?

அவர்கள் பெற்றெடுத்த சுந்தரி மட்டும் இப்போது கல்யாண வயதடைந்திருந்தால் இப்போது எத்தனை பெருமையாக இருக்கும்? எத்தனை பூரிப்பாக இருக்கும்! இன்னும் குறைந்தது ஏழு எட்டு வருஷங்களாவது போனால்தான் அதைப் பற்றிப் பேசவே முடியும். ஆனால் ஏழு எட்டு வருஷங்களைக் கண்டவர்கள் யார்? அதுவரையில் கண்ணபிரான் காத்திருப்பானா? காத்திருந்தாலும் வயதுப் பொருத்தம் ஏதாவது இருக்குமா? ஆகவே சுந்தரியைப் பற்றி எண்ணிப் பார்ப்பதற்கே யில்லை. இந்த நிலையில் வேறு என்னதான் செய்ய முடியும்? பிறந்த பதினைந்தாவது நாளிலேயே பெற்றோரை விழுங்கி விட்டு நிற்கும் உஷாவுக்கு இத்தனை அதிர்ஷ்டம் வரவேண்டியிருக்கிறதென்றால் அதை யாரால் தடுக்க முடியும்? உஷா அதிர்ஷ்டக்காரிதான். இல்லாவிட்டால் அவர்களுடைய சொந்தப் பெண்ணாக

கூட்டுறவு அதிசயம்

உத்தரப் பிரதேசத்தில் செகானி கிராமத்தில் நான்கு பெண்கள், சுய முயற்சியாலும், கூட்டுறவு முயற்சியாலும் என்ன அற்புத காரியங்களைச் சாதிக்க முடியும் என்பதை ருசுப்படுத்தினர்.

தங்கள் வீடுகளுக்கு அருகில் ஒரு கிணறு இருக்க வேண்டும் என்று அவர்கள் மிகவும் விரும்பினர். ஆனால் அக் கிராம ஆண் மக்கள் அது நடக்கக் கூடிய காரியம் இல்லை என்று அசிரத்தையாக இருந்துவிட்டனர்.

இக் நிலையில் அப் பெண்கள் தங்கள் கூட்டுறவு முயற்சியைக் கொண்டே இக் காரியத்தைச் செய்ய முடிவு செய்தனர். தாங்களே கிணறு வெட்டவும் தொடங்கினர். கிராமத்தினர் எல்லோரும் அதிசயிக்கும் முறையில், அறுபது அடி ஆழத்தில் அபரிமிதமான தண்ணீர் கிடைக்கச் செய்வதிலும் வெற்றி பெற்றனர்.

செகானி கிராமத்தின் இந்த அரிய கூட்டுறவு சாதனை சுற்றுப்புற கிராமங்களிலும் உற்சாகத்தை உண்டாக்கியது.



கூட்டுறவு முயற்சி உங்களுக்கு அதிக வசதிகள் அளிப்பதுடன் சமூக க்ஷேம நலத்தையும் வளர்க்கிறது. நாட்டின் முன்னேற்றத்தையும் அது துரிதப்படுத்துகிறது.

திட்டத்துக்கு உதவுங்கள்
முன்னேற்றம் அடையுங்கள்

DA-59/107

வளர்ந்திருப்பாளா? முழங்கியிருப்பாளா? எந்த வித்தைதான் ஆகட்டும்; அது படிப்பாக இருந்தாலும் சரி, நாட்டியமாக இருந்தாலும் சரி, இப்படியா அவளிடம் வந்து கொஞ்சும்! இப்படியா அழகே பூத்து மலர்ந்திருக்கும்? இப்படியா பார்ப்பவர்கள் எல்லாரும் ஒருமுகமாக அவளைப் பாராட்டுவார்கள்? இப்படியா வலுவிலே கோடி கோடியான செல்வத்துடன் லட்சுமி அவளை நாடி ஓடி வருவாள்? ஆயிரம் ஆயிரமாகப் பணம் பேசிக் கொண்டு வாதாடச் செல்லும் பாரிஸ்டர், நாள் கணக்காக, மாதக் கணக்காக, ஏன் வருஷக் கணக்காக அவளுக்காக வாதாடி, இந்தக் கல்யாணத்தை முடித்து வைக்க இப்படியா முனைந்து நிற்பார்? இதையெல்லாம் குருட்டு அதிருஷ்டம் என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது? சொர்ணம்பாள் இதையெல்லாம் எண்ணி எண்ணி, உள்ளம் புழுங்கினாள். சுந்தரிக்கு அழகும் படிப்பும் மட்டாக இருப்பது போல் அதிர்ஷ்டமும் கட்டையாகவே இருந்துவிடுமோ?

அவளுடைய நெஞ்சு இதை நினைத்துப் பார்த்தபோதே சுக்குநூறாக வெடித்து விடும் போலிருந்தது. சுந்தரியின் எதிர்காலம் அனைத்தையும் அப்பொழுதே தெரிந்து கொண்டால்தான் ஆறுதலாக இருக்கும் போலிருந்தது. ஆயிரம் ஆயிரமாகச் செலவழித்தாலும் அதைத் தெரிந்து கொள்வதே சாத்தியமில்லையோ?

ஆனால் பாரிஸ்டருக்கு எல்லாம் கண் முன் வந்து நிற்பது போலிருந்தது. உஷாவுக்கு இப்படிப்பட்ட சம்பந்தம் கிடைத்தால் தான் சுந்தரிக்கும் சிறப்பான இடமாக அமையும் என்பதை அவர் தெளிவாகக் கண்டார்.

"உஷா யார் என்ற உண்மை உனக்கும் எனக்கும்தான் தெரியும். ஆனால் உஷாவுக்கும் சரி, ஊருக்கும் சரி அது தெரியாது. தெரியவும் கூடாது. ஆகையால் பேசாமல் இரு. சுந்தரியின் நன்மையை எண்ணித்தான் சொல்கிறேன்!" என்றார் பாரிஸ்டர்.

"தன்னால் நடந்தால் நடக்கட்டும்; எதற்கும் நீங்கள் அவசரப்பட வேண்டாம்!" என்றாள் சொர்ணம்பாள்.

எதுவும் கையை விட்டுப் போய் விடாது என்கிற தைரியத்தில், "அப்படியே ஆகட்டும்; நான் அவசரப்படவில்லை!" என்றார் பரமசிவம். அப்போதைக்கு அவளை வேறு விதமாகச் சமாதானப்படுத்துவதற்கு வழியில்லை.

கண்ணபிரான் அந்தச் சுசீலா என்பவளை அடியோடு மறந்து விட்டதாகத் தான் அவர் நம்பியிருந்தார். ஆனால் அவர்கள் நாள் தவறாமல் சந்தித்து வருகிறார்கள் என்பது அவருக்குத் தெரியாது. அவர்களுடைய சந்திப்பு அவர் அறியாமல் ரகசியமாகத்தான் நிகழ்ந்தது. அவருடைய காது வரைக்கும் இது எட்டவேயில்லை.

கண்ணபிரானும், சுசீலாவும் எவ்வளவு தூரம் நெருங்கிப் பழகுகிறார்கள் என்பது தேன்கூட்டிலுள்ள சிப்பந்திகளுக்கு ஓரளவு நன்றாகத் தெரியும். ஆனால் அவர்கள் இதைப் பற்றி உதட்டை அசைக்க . வில்லை. புது எஜமானனுடைய கண்ணும் காதும் போல் இருந்தான் தோட்டக்







காரப் பழனி. நாவு அசைத்தால் போதும்; அதை அந்த இடத்திலேயே ஒட்ட நறுக்கி விடுவான் அவன். நன்றி மிகுந்த கோம்பை நாயைப்போல் அவன் இரவு பகல் பங்களாவையே சுற்றிக் கொண்டிருந்தான். 'அவன் அறியாமல் அங்கே ஒரு துரும்பு கூட அசையாது. தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டிருந்த பழனி, கொஞ்சம், கொஞ்சமாக மற்றவர்களைவிட மதிப்புயர்ந்து, அதிகாரத்தையும் சேர்த்துப் பாய்ச்சத் தொடங்கினுன். கண்ணபிரானுக்குப் பயப்படுவது இருக்கட்டும், பழனிக்குப் பயந்துதான் ஆகவேண்டும் என்று ஒரு நிலை எப்படியோ அங்கே வந்து விட்டது.

சுசிலா நினைத்தால் எத்தனையோ காரியங்களைச் செய்து கொள்ளலாம். அவளுக்கு அத்தனை சலுகைகளும் அதிகாரங்களும் வழங்கியிருந்தான் கண்ணபிரான். ஆயினும் சுசிலா என்னவோ அடங்கியும் அடக்கமாகவும்தான் இருந்தாள். எதையும் அவள் நிலையானது என்று கருதவில்லை. உண்மையான அதிகாரமும் பதவியும் உலகமறிய அவளுக்குக் கிடைக்கத்தான் போகின்றன. அதுவரையில் அவள் பழைய சுசிலாவாகவே இருக்க விரும்பினுள். அந்த வீட்டுக்கு அடிக்கடி வரும் அதிதியைப் போலவே அவள் நடந்து கொண்டாள்.

கண்ணபிரான் அவளுக்கும், பாரிஸ்டருக்கும் இடையே ஒரு தடித்த திரையைத் தொங்கவிட்டது போல் தன்னுடைய தொடர்புகளைப் பிரித்து வைத்திருந்தான். ஒருவரோடு பழகுவது மற்றவருக்குச் சிறிதும் தெரியாதவாறு அவன் மிகவும் திறமையோடு நடந்து கொண்டான். இதெல்லாவற்றையும் விட இவர்கள் இரண்டு பேருமே அறியாதவாறு அவன் பல அலுவல்களைக் கவனிக்க வேண்டியிருந்தது. இதை அவன் ஒரு கலையாகவே பயின்றுன்.

திடீரென்று ஒரு நாள் அவன் சிங்கப்பூருக்குத் திரும்ப வேண்டியிருக்கிறது என்று சொன்னதும், இருவருமே கலக்கமுற்றார்கள். பாரிஸ்டர் எதையுமே விட்டுப் பிடிக்கிறவர். ஆனதால் அவர் இதைப் பற்றி அதிகமாகக் கவலைப் படவில்லை.


"சரிதம்பி! ஜாக்கிரதையாகப் போய்ச் சேருங்கள். நான் விவரமாகப் பெரியவருக்கு எழுதுகிறேன். இனி அதிக நாள் இந்தக் கல்யாண விஷயத்தை ஒத்திப் போடுவதற்கில்லை. நல்ல காரியங்களை நாள் கடத்திப் போடக் கூடாது என்பார்கள். இதேதான் எனக்கு நினைவு!" என்று விடைகொடுத்து அனுப்பி விட்டார்.

ஆனல் சுசிலாவின் கண்களில் கண்ணீர் மாலை மாலையாகப் பெருகி வழியத் தொடங்கி விட்டது.


"இனி எனக்கு மட்டும் இங்கே என்ன வேலை? என்னையும் இப்பொழுதே அழைத்துக் கொண்டு போய்விடுங்கள். நான் என் மாமாவிடம் போய் இருந்து கொள்கிறேன்!" என்றுள்.

கண்ணபிரான் அவள் கண்ணீரை அன்புடன் துடைத்து விட்டு, "இது எனக்குத் தெரியாதா, ஷீலா! இந்த அவசரத்தில் நீ கிளம்பி விடுவது எப்படி முடியும்? உனக்குப் 'பாஸ்போர்ட்' விஸா' எல்லாம் இப்பொழுதே வாங்கி விட முடியுமா? நான் மட்டும் உன்னைத் தனியே இருக்க விட்டு விட்டு எவ்வளவு நாள் அங்கே இருக்கப் போகிறேன்! பெரியப்பா, பாரிஸ்டரின் பேச்சில் அதிக நம்பிக்கை வைத்திருக்கிறுர். அவரிடம் மெதுவாக உன் மாமாவை அனுப்பி, பேசச் சொல்லி ஏதாவது ஒரு வழி செய்ய வேண்டாமா? நீ இப்பொழுது வந்தால் காரியமே கெட்டுப்போய்விடும். நான் அப்படி உடனே திரும்ப முடியா

தொழிற் கருவிகள்



உலகிற்கு அச்சாணியாக விளங்கும் உழவிலோ, உழைப்பின் பெருமை காட்டும் தச்சுத் தொழிலிலோ, கடையோ, பிறவோ வைத்துக் கவனித்துக் கொண்டு வணிகத்திலோ ஈடுபட்டு இருக்கலாம் நீங்கள்! பாடுபட்டுப் பலன்காண தொழிலிற்குத் தேவையான கருவிகளுக்கு முதல் போட்டுத்தான் ஆகவேண்டும். அவற்றைப் பழுதுபார்க்கவும், புதுப்பிக்கவும் பணம் செலவிட்டேயாக வேண்டும்.



பணியாற்ற முடியாத முதுமைக் காலத்தோ, அல்லது குடும்பத்தினின்றும் உதவ இயலாமல் இயற்கை பிரித்திடும்போதோ உங்களது தற்கால வருமானத்திற்கு ஈடாகத் தொடர்ந்து ஒரு தொகை கிடைப்பதற்கான வழிவகைகள் பற்றி எண்ணமிட்டது உண்டா?

முதுமைக்காலத்தில் வருமானம் கிடைக்க வகை செய்ய, அல்லது உங்கள் குடும்பத்திற்குப் பாதுகாப்புதனைப்படைக்க உள்ள ஒரே வழி என்ன தெரியுமா? ஆயுள் இன்ஷ்யூரன்சுதான்!

உங்கள் தேவைகளுக்குத் தகுந்த திட்டங்கள் பற்றிய முழு விவரங்களுக்கு ஒரு ஆயுள் இன்ஷ்யூரன்சு ஏஜெண்டை உசாவுங்கள்.



ஆயுள் இன்ஷ்யூரன்சு

—நீங்கள் இன்ஷ்யூர் செய்யும் நன்றுனே நீங்கள் பாதுகாப்புப் பெறும் பொன்னுளாம்...

LP-LIC-52 6

விட்டால், உன்னை அங்கே வரவழைத்து விட ஏற்பாடு செய்கிறேன். உனக்கு ஏன் கவலை? நான் எங்கே இருந்தாலும், உன் உள்ளத்தை விட்டு ஒரு நாளும் போய்விடப் போவதில்லை!'' என்று ஆறுதல் வார்த்தைகள் கூறினான்.

கமலா தன்னைத் தேற்றிக் கொண்டாள். அன்று இரவெல்லாம் எதிர்காலத்தைப் பற்றித்தான் பேச்சு! இன்பம் பொருந்திய அந்த நல்ல நாளைப் பற்றியே நினைவு; கனவு!

கடைசியில் அவளும் பாரிஸ்டரும் ஒருவரை யொருவர் சந்திக்க முடியாதபடி அவன் விமானக் கூடத்துக்கு வந்ததும் சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றதும் பெரிய சாதனைகள்தான்.

அத்தியாயம் 2

வண்டி என்ன, வண்டி?

உஷாவுக்கு வரப் போகும் அதிர்ஷ்டத்தை எண்ணியபோது சொர்ணம்பாளுக்குப் பொறாமையாகத்தான் இருந்தது. ஆனால் உஷா எப்போதையும் விட வாட்டத்துடன்தான் காணப்பட்டாள். தன்னைவிடத் துரதிருஷ்டம் பிடித்தவள் யாருமே இருக்க மாட்டார்கள் என்று எண்ணி எண்ணி உள்ளம் குன்றிப் போயிருந்தாள். பெற்ற தாயும் தந்தையும் இப்படி எங்கேயாவது நடந்து கொள்வார்களா? ஒரு சமயம் இல்லாவிட்டால் ஒரு சமயம் அவள் உள்ளம் அவர்களுடைய அன்புக்காக ஏங்கி ஏங்கிச் சோர்ந்தது.

பல சமயங்களில் இந்த ஏக்கம் பெருங் கோபமாக வெடித்துக் கொண்டு கிளம்பியது. அப்படிப்பட்ட சமயங்களில் அவள் தாய் என்றும் பார்ப்பதில்லை; தந்தையென்றும் பார்ப்பதில்லை. எல்லாரையும் ஒரே தூக்காகத் தூக்கி யெறிந்து பேசினாள். அன்பினால் பெற வேண்டியவற்றை அதிகாரத்தோடு பெறவேண்டியிருந்தது அவளுக்கு வேதனையைத்தான் தந்தது. ஆனால் இதற்கெல்லாம் யார் பொறுப்பாளி?

"அடி சுந்தரி, உன் ரிப்போர்ட்டைக் கொண்டு வா, இப்படி, பார்க்கலாம்!''

சுந்தரி கொண்டு வர மறுத்தாள்.

"கொண்டு வரப் போகிறாயா, நான் போய் எடுத்துக் கொள்ளட்டுமா?''

சுந்தரி பிடிவாதமாக நின்றாள். உஷாவும் பிடிவாதமாக அதைத் தானே எடுக்க முயன்றபோது அவள், 'ஹோ, ஹோ!' என்று குறுக்கே படுத்துக் கொண்டு வீரிட்டு அழுதாள். "நீ ஒன்றும் பார்க்க வேண்டாம், போ!'' என்று அலறினாள். கையையும் காலையும் தூக்கி உதைத்துக் கொண்டாள்.

உஷா இதற்கெல்லாம் மசியவில்லை. ரிப்போர்ட்டை எடுத்துப் பார்க்கத் தொடங்கினாள். "பத்து, பத்தொன்பது, மூன்று, ஏழு, பூஜ்யம்—''

அவள் வாயை விட்டுத் தன்னுடைய மார்க்குகளைப் படிப்பதைக் கேட்டு, அழுகை ஓய்ந்து திரும்பிப் பார்த்தாள் சுந்தரி. நல்லவேளை, அவள் வாங்கியிருந்த மார்க்குகளை வேறு யாரும் தெரிந்து கொள்ளவில்லை. இந்த ஆறுதலுடன் அவள் உஷாவின் கையிலிருந்த ரிப்போர்ட்டைப் பிடுங்கிக் கொள்ள ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தாள்.

உஷா கையைத் தூக்கிக்கொண்டு, "இதெல்லாம் என்ன மார்க்குகளா? இப்படித்தான் படிக்கிறாயா நீ? உன்னால் எனக்கு மானம் போகிறது! ஜீஜீ சிரிக்கிறாள்! டீச்சர் என்னைக் கூப்பிட்டுச் சொல்லும் போது எப்படியிருந்தது தெரியுமா, எனக்கு?'' என்றாள்.

சுந்தரியின் அலறலைக் கேட்டு, சொர்ணம்பாள் அங்கே இதற்குள் வந்து விட்டாள். உஷா கூறிய மொழிகளைக் கேட்டதும், அவள் ரோசம் தாங்காமல், "எல்லாம் கிடக்க உனக்கு என்ன இதிலே அவமானம் வந்து விட்டது? உனக்கு மானம் போகிறது என்றால், அவள் என் தங்கை இல்லை என்று சொல்லிவிடு! அவ்வளவுதானே! இதற்காக ஏன் குழந்தையை இப்படி அலற அலறச் செய்கிறாய்? நீ கெட்டிக்காரியாக இருந்தால் போதும், அவளைப் பற்றி நீ சிறிதும் கவலைப்பட வேண்டாம்!'' என்று விடுவிடென்று பேசினாள்.

உஷா ரிப்போர்ட்டை வீசி எறிந்து விட்டு வெளியே போய்விட்டாள்.

பார்க்கப்போனால் இது அற்பமான விஷயம்தான்! சொர்ணம்பாள் இதிலெல்லாம் தலையிடுவதை அவளால் பொறுக்கவே முடியவில்லை. ரோசமும் கோபமுமாக அவள் சாப்பிடாமலே கல்லூரிக்குப் புறப்பட்டுச் சென்றாள். பொன்னிக்குத்தான் நெஞ்சில் வலியெடுத்தது. ஆனால் சொர்ணம்பாளோ அதைப் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை. உஷாவின் பங்கையும் சேர்த்துச் சாப்பிட்டவளைப்போல் சாப்பிட்டு விட்டு எழுந்தாள்.



பம்பாய் ஷண்முகானந்தக பைன் ஆர்ட்ஸ், சங்கீத சபையினர் எழுபது வயது முதிர்ந்த ஸ்ரீ அரியக்குடி ராமானுஜ அய்யங்காரின் ஐம்பது வருஷ சங்கீத சேவையைப் பாராட்டிக் கௌரவித்தனர். இரண்டு நாட்களிலும் பம்பாய் மராமத்து இலாகா மந்திரி டாக்டர் டி. எஸ். தேசாய் அவர்களும், ரிஸர்வ் பாங்க் கவர்னர் எச்.வி. ஆர். அய்யங்கார் அவர்களும் தலைமை வகித்துச் சிறப்பித்தனர். ஸ்ரீ அரியக்குடி ராமானுஜய்யங்கார் இவ் வைபவத்தின்போது இன்னிசைக் கச்சேரி செய்து சபையோரை மகிழ்வித்தார்.

"குழந்தை சாப்பிடாமே போயிட்டுதே-கொடுத்து அனுப்பிச்சிடட்டுமா?" என்று கேட்டாள் பொன்னி.

அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை முதலில் அவள். மறுமுறை பொன்னி கேட்டபோது, "அதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? கொடுத்தனுப்பட்டுமா என்றால் என்னைக் கொண்டு போய்க் கொடுக்கச் சொல்கிறாயா? பசித்தால் தன்னால் வந்து தின்கிறாள்; பொறுக்காவிட்டால் நீயே கொண்டுபோய்க் கொடு! இல்லை, உன் புருஷனிடம் கொடுத்து அனுப்பு! உன் கரிசனம் கண்ணைக் கரித்துக் கொண்டு போகிறதே! உன்னால்தான் இந்தத் திமிர்பிடித்த பெண்ணுக்கு இடக்கு அதிகமாகிவிட்டது. எப்படி இருந்த பெண் எப்படி மாறிப்போய் விட்டாள்! நம்பவே முடியவில்லையே! முதலில் என்னை அலட்சியம் செய்ய ஆரம்பித்தாள். இப்பொழுது ரொம்பவும் துணிச்சலோடு என்னை எதிர்த்தே பேச ஆரம்பித்துவிட்டாள், வர வர இவளுடைய அகம்பாவம் எல்லை மீறிப் போகிறது. நீ என்னடா என்றால் அவளுக்கு ரொம்பப் பரிந்து கொண்டு வருகிறாய்! நாளைக்கு அவள்தான் உனக்குச் சாதிக்கப் போகிறாளா" என்று எரிந்து விழுந்தாள். எப்படி யிருந்த சொர்ணம்பாள் எப்படி மாறிவிட்டாள்! அன்று கோர்ட்டுக்குப் போன குப்பன் நடுவில் வண்டியை எடுத்துக் கொண்டு வரவும் இல்லை; சாப்பாடு கொடுத்து அனுப்பவும் இல்லை. "எல்லாம் அங்கேயே கான்டீனில் சாப்பிட்டுக் கொள்வான்!" என்று சொர்ணம்பாள் சொல்லி விட்டாள்.

ஆனால் உஷா அன்று இரவும் சாப்பிட மறுத்துப் பட்டினியாகவே படுத்துக் கொண்டாள். தலை மாட்டில் வைத்தபால் வைத்த படியே காலையில் இருந்தது. கல்லூரிக்குக் கிளம்பும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. உஷா புறப்படுவதற்கு ஆயத்தமானாள். பொன்னிக்கு ஒரு வேலையும் ஓடவில்லை. சொர்ணம்பாள் மெதுவாக வந்து, "ஏன், சாப்பிட வில்லையா?" என்று கேட்டாள்.

"இல்லை!"

"ஏன்?"

"ஏனென்றால் அப்படித்தான். அவன் எப்படி என் தங்கை இல்லையோ, அதே போல் எனக்கும் இங்கே இனி எதுவுமில்லை! நானும் உன் பெண் இல்லை!" என்றாள் உஷா.

"சாப்பிடாமல் நீ காலேஜுக்குப் போக வேண்டாம். குப்பா! வண்டியை அதுவரையில் எடுக்காதேடா!" என்றாள் சொர்ணம்பாள்,

"வண்டி என்ன வண்டி, எனக்கு? நான் நடந்து போக மாட்டேனா? கால் இல்லையா?" என்று உஷா வேகமாகப் புறப்பட்டுச் சென்றாள்.

குப்பன், பொன்னி எல்லாரும் அவள் பங்களாவைத் தாண்டி நடந்து செல்வதைப் பார்த்துக் கொண்டுதான் இருந்தார்கள். சொர்ணம்பாளுக்கு இந்த அவமதிப்பைப் பொறுக்கவே முடியவில்லை. ஆத்திரமும் அழுகையும் வர, "அவரிடம் சொல்லி, இரண்டில் ஒன்று செய்ய வேண்டியதுதான்!" என்று கூறி விட்டு, கணவரைப் பார்க்கச் சென்றாள்.

(தொடரும்)



காஷ்மீர் இளவரசி

• கி. ராஜேந்திரன் •

"ஏ! ஷிகாராவாலா!''

சமையலறைப் படகின் ஜன்னல் வழியாக உடலை வெளியே நீட்டி எட்டிப் பார்த்தாள் மும்தாஜ்.

'' அரே! போட்ஹவுஸ்வாலா!''

கூப்பிட்டது பஷீர்தான். காஷ்மீரத்தில் ஏராளமாக விளையும் செர்ரி பழமாக விளங்கும் தன் அடி உதட்டைப் பற்களால் அழுத்திக் கடித்துக் கொண்டே வெறுப்பினால் விரல்களைச் சொடுக்கினாள் மும்தாஜ். வேர்வையில் நனைந்த அழுக்குச் சட்டையுடன் அக்கரையில் நிற்கும் பஷீரைக் கற்பனைக் கண் கொண்டு பார்த்த அவளுக்கு அருவருப்பினால் உடல் சிலிர்த்தது. 'ஒரு வாரத்திய தாடி; உடலெல்லாம் தெருப் புழுதி.'

படகு வீட்டின் இரு பக்கங்களிலும் இருந்த குறுகலான பாதைகளுள் ஒன்றின் மீது, அழகிய கால்கள் அடிபெடுத்து வைக்க லாகவமாக நடந்து சென்றாள் மும்தாஜ். பஷீரின் அந்த வெளிப்படையான அழுக்குக்காக அருவருப்படலாம் என்று அவள் மனம் எண்ணியது. கழுவித் துடைத்துவிடக் கூடிய அழுக்கு அது. ஆனால் அவன் மனத்துக்குள்ளே இருக்கும் அழுக்கைக் கழுவித் துப்புரவு செய்யமுடியாது. 'அப்பாவிடமும் அல்லவா அது தொத்திக் கொண்டு வருகிறது?'

படகு வீட்டின் முன் அறையின் ஜன்னல் வழியாகப் பார்த்தபோது விருந்தாளிகளுக்காகத் தயாராகப் பரப்பப்பட்டிருந்த படுக்கையில் அப்பா குறட்டை விட்டபடி படுத்து உறங்குவதைக் கண்டாள்.

'' அரே ஏ ஏ ஏ! இப்ராஹீம்!'' பஷீரின் குரல் மறுபடியும் கேட்டது.

'சை! கொஞ்சம்கூடப் பொறுமையே கிடையாது' என்று முணுமுணுத்தபடியே ஜன்னல் வழியாக அறைக்குள் குதித்து அப்பாவை உலுக்கி எழுப்பினாள் மும்தாஜ்.

'' அந்தச் சனியன் வந்திருக்கிறது. அக்கரையில் இருந்து கொண்டு ஒரே கூச்சல். போய் என்னவென்று கேட்டு வாருங்கள்.''

கண்களைக் கசக்கியபடியே இப்ராஹீம் கேட்டான்: '' யாரைச் சனியன் என்று வாழ்த்துகிறாய்?''

'' உங்களைப் பிடித்து ஆட்டுவிக்கும் சனியன் வேறு யார்? அந்தப் பஷீர்தான்.''

'' எப்போது பார்த்தாலும் அவனைச் சபித்துக் கொண்டே இருக்கிறாயே. என்ன செய்து விட்டான் அவன் உன்னை?''

'' இன்னும் என்ன செய்ய வேண்டும்? கள்ளக் கடத்தல் வியாபாரம் காணாதா? சுங்க அதிகாரிகளின் கண்களில் மண்ணைத்தூவி விட்டுத் திருட்டுத் தனமாக ஏராளமான பொருள்களைப் பாகிஸ்தானிலிருந்து கொண்டு வருவது போதாதா? உங்களையும் மயக்கித் தன் சூழ்ச்சிகளில் சிக்க வைத்திருக்கிறானே. இதெல்லாம் நம்மை எங்கே கொண்டுபோய் விடப் போகிறதோ? அல்லாதான் காப்பாற்ற வேண்டும்.''

'' இதோ பார்! மும்தாஜ்! நீ எதற்கு இதையெல்லாம் அனாவசியமாகத் தலையிடுகிறாய்? பரோட்டா சுடுவதுடன் நிறுத்திக் கொள்.''

''நிறுத்திக் கொள்வேன். நீங்களும் இந்தப் போட் ஹவுஸைக் கவனிப்பதுடன் நின்று கொண்டால்...''

அவள் சமையலறைப் படகுக்குத் திரும்பினாள். அவள் செல்வதைப் பார்த்துக் கொண்டே ஒரு பெருமூச்சு விட்டான் இப்ராஹீம். 'துடுக்குத்தனம்! இறந்து போன அவள் அம்மாவைப்போல.'

படகு வீட்டின் வாசற்படிகளில் இறங்கி ஷிகாராவில் உட்கார்ந்து துடுப்பு வலிக்க ஆரம்பித்தான் அவன்.

நாலாபுறமும் வெள்ளிப் பனிமலைகள் சூழ்ந்திருக்கக் கண்ணுக் கெட்டிய தூரம் பரந்து விரிந்து கிடக்கும் தால் ஏரியில் மிதக்கும் ஏராளமான படகு வீடுகளில் 'காஷ்மீர் இளவரசி'யின் சொந்தக்காரன் இப்ராஹீம். தன் படகு வீட்டில் வந்து தங்கும் விருந்தாளிகளின் உச்சி குளிர உபசரித்து, அவர்கள் மனம் கோணாமல் பணம் பறிப்பதில் அவன் சமர்த்தன். விருந்தாளிகள் விருப்பமின்றித் தரும் ஒரு நயா பைசாகூட அவனுக்குத் தேவையில்லை. மனத்துக்குள் வைதாலும் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டு மனதாரக் கொடுப்பதுபோல் விருந்தாளிகளைப் பாவனை செய்ய வைப்பதில் அவன் கெட்டிக்காரன். வேறு வழிகளிலும் அவனுக்குப் பணம் கிடைத்து வந்தது மும்தாஜுக்குத் தெரியும்.

காஷ்மீர் இளவரசிக்குப் பின்புறம் இன்னொரு சிறிய படகு. அதுதான் சமையலறை. விருந்தாளிகள் தங்கும் படகு வீட்டைப் போல் இது வசதியாகவோ அலங்காரமாகவோ இருக்காது. ஆனால் அதில் மும்தாஜ் தான் ராணி.

ஸ்ரீநகரின் வீதிகளிலே விரைந்தோடும் டோங்காவாலாக்களின் ராஜா பஷீர்தான். கால்மேல் கால்போட்டு, சமீபத்தில் வெளியான ஒரு சினிமாப் பாட்டைச் சீட்டி அடித்தபடியே லகானை ஒருமுறை சொடுக்கி விட்டானால் போதும். அந்த வெள்ளைக் குதிரையின் வேகத்தைக் கட்டுப்பிடிக்க முடியாது.



இது ஒரு வெளித்தோற்றமே என்றும், கள்ளக் கடத்தல் வியாபாரத்தில் அவன ஈடுபட்டிருப்பதை மறைக்கவே இந்த நாடகம் போடுகிருன் என்றும் மும்தாஜ் நன்கு அறிவாள்.

தன்னுடைய வெள்ளைக் குதிரைக்கு அடுத்தபடியாகப் பஷீர் விரும்பியது, நேசித்தது, காதலித்தது, மும்தாஜை. இப்ராஹிமின் 'காஷ்மீர் இளவரசி'க்கு விருந்தாளிக் கிராக்கி பிடித்துக் கொடுக்கும் சாக்கில் அவன் அடிக்கடி படகு வீட்டுக்கு வந்து போவான். இப்போதும் ஒரு விருந்தாளியுடன் தான் வந்திருந்தான்.

''எவ்வளவு நேரம் காத்திருப்பது இப்ராஹிம்?'' என்று கடிந்து கொண்டே விருந்தாளியின் கையைப் பிடித்து ஷிகாராவில் ஏற்றிவிட்டான். இரண்டு பெட்டிகளையும் கரையிலிருந்து எடுத்து வைத்தான்.



ஷிகாராவில் பொருத்தப்பட்டிருந்த ஸ்பிரிங் மெத்தையின் சிறப்பை விருந்தாளிக்கு உணர்த்துவதுபோல் ஒருமுறை தட்டிக் கொடுத்துவிட்டு நிமிர்ந்தான் இப்ராஹிம். பஷீருடன் தன் ஷிகாராவில் ஏறிக் கொண்ட விருந்தாளியை அப்போதுதான் கவனித்தான்.

அவள் ஒரு சீனத்துச் சிங்காரி. தந்தம் போன்ற வெண்மையான நிறம்; உருண்டையான முகம்; சப்பை மூக்கு. மலராது கூம்பியிருக்கும் சிவந்த மொட்டு அவள் அதரங்கள். ஸ்பிரிங் மெத்தையில் 'தொப்' பென்று விழுந்தது அந்தக் கவர்ச்சிகரமான உருவம். நன்ருகப் பின்னல் நகர்ந்து சௌகரியமாகச் சாய்ந்து கால்களை நீட்டி உட்கார்ந்து கொண்டாள் அவள்.

பலமாக ஒரு பெருமூச்சை ஊதி வெளிப் படுத்தியபடியே தான் அணிந்திருந்த அகலமான கறுப்புக் கண்ணுடியை அகற்றிஞள். அந்த முகமே அப்போது அடியோடு மாறிப் போயிற்று. காதளவு நீண்டிருந்த புருவங்களும் கண்களும் மேல் நோக்கி வளைந்து சென்று ஒரு மாயக்காரி போன்ற தோற்றத்தை அவளுக்கு அளித்தன.


அழகி என்று அவளை ஒப்புக்கொள்ள மாட்டார்கள், அழகின் லட்சணங்களை ஆராய்ந்தவர்கள். ஆனுல் அவளை ஒருமுறை பார்த்த பின்னர் அந்த ஆராய்ச்சியாளர்களுக்கே தங்கள் மனத்தை வேறு எதிலாவது நிலைக்கச் செய்ய முடியுமா என்பது சந்தேகந்தான்.


'பூலோக சொர்க்கம்' என்று அழைக்கப்படும் காஷ்மீரத்துக்குச் சர்க்கார் விளம்பரங்களால் கவரப்பட்டு வந்து சேருபவர்கள் எத்தனையோ பேர்கள். அவர்களில் உள்நாட்டவரும் உண்டு; பல அயல் நாட்டினரும் உண்டு. 'அவர்களில் ஒருத்திதான் இந்தச் சீனத்துச் சிங்காரி' என்று இப்ராஹிம் எண்ணலானுன்.

ஷிகாரா காஷ்மீர் இளவரசியை அடைவதற்குள் அந்த எண்ணம் மறைந்து விட்டது.

''ரொம்ப முக்கியமான காரியமாக நம்மைத் தேடி வந்திருக்கிருன். உன் படகு வீட்டில் சில நாட்கள்







தங்குவாள்'' என்றான் பஷீர். பின்னர் அவன் காதருகே சென்று ''இவளுக்கு நாம் உதவினால் குறைந்த பட்சம் இரண்டாயிரம் ரூபாயாவது எதிர்பார்க்கலாம்!'' என்றான்.

''இவளிடமிருந்தா?'' அவநம்பிக்கையுடன் இப்ராஹிம் கேட்டான்.

''ஆமாம்.'' அந்தச் சீனத்துச் சிங்காரியின் பக்கமாகத் திரும்பினான் பஷீர். ''நீங்களே இவருக்கு விளக்கிச் சொல்லுங்கள்.''

ஆங்கிலத்தில் பேசினான் பஷீர். ஸ்ரீநகருக்கு அடிக்கடி வரும் அந்நியர்களிடம் பேசிப் பழகியே கற்ற ஆங்கிலம் அது. எழுதப் படிக்கத் தெரியா விட்டாலும் சரளமாகப் பேசினார்கள் பஷீரும் இப்ராஹிமும்.

''போட்ஹவுஸுக்குப் போன பிறகு சொல்கிறேன். வீண் சந்தேகங்களுக்கு இடமளிக்கக் கூடாது'' என்றாள் அந்தச் சீனத்துச் சிங்காரி. அதன் பிறகு காஷ்மீர் இளவரசியை அடையும் வரையில் இந்தியாவின் இயற்கை அரணான இமயமலைத் தொடரையும், பனி மூடிய அதன் சிகரங்களையும், பாசியும் நீர்த் தாவரங்களும் நிறைந்து பச்சைப் பசேலென்று காட்சி தரும் தால் ஏரியின் நீர்ப்பரப்பையும், அதில் வரிசை வரிசையாகப் படகு வீடுகள் நின்று நீரில் பிரதிபலிக்கும் அழகையும், இங்குமங்குமாக மிதந்து செல்லும் விநோதமான ஷிகாராக்களையும் கண்டுகளித்தாள்.

2

ஷிகாராவில் ஏறிக் கொண்டு சற்றுத் தூரம் உல்லாசமாகப் போய்வர மும்தாஜை அழைத்தான் பஷீர். அவள் வேறு பக்கமாகத் திரும்பிக்கொண்டு அவனுக்குத் தெரியாமல் அழகு காட்டினாள். 'கெட்ட கேட்டுக்கு உல்லாசம் வேறேயா?'

''போய் வாயேன், மும்தாஜ்!'' இப்ராஹிம் வேறு மகளைத் தூண்டினான். எப்போது பார்த்தாலும் பஷீரை வெறுத்து ஒதுக்கித் தள்ளுமாறு அவன்தான் அவளுக்கு என்ன தீங்கு இழைத்து விட்டான்?

''என்னால் முடியாது'' என்றாள் மும்தாஜ், தீர்மானமாக. தோள்களை ஒருமுறை குலுக்கி விட்டுக்கொண்டு பஷீர் சமையல் படகைவிட்டு வெளியே வந்தான். இப்ராஹிமிடம் சொல்லிக்கொண்டு படகிலேறிப் புறப்பட்டான். ''அந்தச் சிறுக்காரியை நன்றாகக் கவனித்துக் கொள். அவள் ஓய்வு எடுத்துக் கொள்ளட்டும்; பிறகு பேசுவோம்.''

அவன் விடைபெற்றுச் செல்வதை மும்தாஜ் கேட்டாள்: நிம்மதியாகச் சமையல் வேலைகளில் ஈடுபட்டாள். சிறிது நேரத்தில் ஜன்னல் கதவை யாரோ தட்டி அழைக்கும் ஓசை கேட்டது.

பழங்களோ அல்லது மலர்களோ விற்பனைக்கு வந்திருந்தால் விருந்தாளிக்கு வாங்கி வைக்கலாமே என்ற நினைப்போடு ஜன்னல் கதவை ஒரு பக்கமாகத் தள்ளித் திறந்தாள். மும்தாஜின் கரங்கள் இரண்டும் இரும்புப் பிடியில் சிக்கிக்கொண்டன. பஷீர் இழுத்த இழுப்பில் அவள் ஷிகாராவின் மெத்தைமேல் அலங்கோலமாக விழுந்தாள்.



'இடி இடி' யென்று சிரித்துக் கொண்டே பஷீர் படகைச் செலுத்தினான். ''மரியாதையாகக் கூப்பிட்டால் வர மாட்டாயல்லவா?''

உபயோகமின்றிக் கிடந்த ஒரு துடுப்பை எடுத்து அவனை அடிக்க ஓங்கியவள் ஒரு மூலையில் அதை வீசி எறிந்தாள். தன்னால் அடிபடுவதற்குக் கூட அவன் லாயக்கில்லை என்று அவளுக்கு எண்ணம். படகின் ஒரு மூலையில் முழங்கால்களை இரண்டு கரங்களாலும் இறுகக் கட்டிக்கொண்டு உட்கார்ந்து விட்டாள். 'நடப்பது நடக்கட்டும்.'

நிலவொளியில் சலனமற்ற அந்த ஏரி வெள்ளித் தகடாக ஜொலித்தது. பஷீர் துடுப்பு வலித்துப் படகைச் செலுத்தியபோது நீர் முத்துச் சரங்களாலான சதங்கைகள் ஒலித்துச் சிதறின. சினார் மரங்களுக் கிடையே காற்று புகுந்து சென்று இனிய கீதம் எழுப்பியது.

''மும்தாஜ்!'' ஆசை ததும்ப அழைத்தான் பஷீர். ''அழகு கொழிக்கும் காஷ்மீரத்தில் பிறந்த நாம் அதிர்ஷ்டசாலிகளில்லையா? பொழிலையும் நிலவையும் வீசும் இளந் தென்றலையும் அனுபவித்தபடியே ஆசைக் காதலனுக்கு அருகில் அமர்ந்து படகில் பவனிவருகிறாயே; வாழ்க்கையில் இதைவிட வேறென்னவேண்டும் உனக்கு?''

''வீட்டுக்குத் திரும்ப வேண்டும் எனக்கு''

என்றான் மும்தாஜ் விறைப்பாக. அவள் உள்ளத்தில் மட்டும் ஒரு விறுவிறுப்பு தலைகாட்டத் தொடங்கி யிருந்தது.

"போகலாம் மும்தாஜ்; திரும்பத்தான் போகிறோம்" என்றான் பஷீர் நிதானமாக. "அதோ பார்! தப்பி ஓட முயலும் நிலாவை மேகங்கள் வேகமாகப் பின்தொடர்ந்து சென்று கட்டிப் பிடித்து அணைத்து விளையாடுவதை!"

"அணைத்து விளையாடவில்லை; கவ்வி விழுங்கியே விட்டன" என்றாள் மும்தாஜ். அதே சமயம் முரடனென்று தான் எண்ணி வந்த ஒருவனின் இதயத்தில் மென்மையான பகுதியையும் காணத் தொடங்கினாள்.

"நம்மைக் கண்டு மகிழ்ந்த வானம் நட்சத்திரப் பற்கள் தெரியப் புன்னகை புரிகிறது."

"இல்லை, எள்ளி நகையாடுகிறது. உங்கள் அசட்டுத்தனத்தைக் கண்டு." தன் நாவையே சபித்துக்கொண்டாள் மும்தாஜ். 'அன்பைச் சொரிபவனிடத்தில் ஏன் இப்படி எரிந்து எரிந்து விழுகிறாய்?'

"என்னைக் கண்டாலே உனக்கு வேம்பாய்க் கசக்கிறது மும்தாஜ்!"

"கள்ளக் கடத்தலில் ஈடுபட்டிருப்பவர்களைக் கண்டால் இனிக்கவா செய்யும்? அந்தத் திருட்டுக்களில் என் அப்பாவையும் பிணைத்து என் வாழ்வையே பாழாக்குகிறீர்கள். போதாக்குறைக்கு அந்தச் சீனத்துச் சிங்காரி வேறு வந்திருக்கிறாள். நல்ல நோக்கத்துடன் என்று நான் கருதவில்லை."

பெருமூச்சு விட்டபடியே பஷீர் படகைத் திருப்பினான். மும்தாஜை மறக்க அவனால் முடியவில்லை. தன் தொழிலை விடவும் மனமில்லை. அத்தனை பணம் வேறு எப்படிச் சம்பாதிக்க முடியும்? நிலவு பட்டுச் சிதறியதால் மதி முகமாகத் தெரிந்த அவள் வதனத்தைப் பார்த்தவாறே ஷிகாராவைச் செலுத்தினான்.

இளவேனிற் காலத்து மாலை நேரத்தில் தோன்றும் சூரியனின் ஒளிக்கிரணங்களால் நெய்யப்பட்ட ஆடையை அணிந்திருந்தாள் மும்தாஜ். முழுமதியைச் சுற்றித் தோன்றும் ஒளி வட்டமாகச் சிரித்த முகத்தைத் தழுவி இருந்தன மிருதுவான கேசச் சுருள்கள். நட்சத்திர மண்டலமே கீழே இறங்கி வந்து அவள் கண்களாக ஜொலித்தன.

அவன் கண்களுக்கு அவள் தோற்றமளித்த விதத்தை வாய் விட்டுச் சொன்னால் என்ன செய்வாள்? கண்களை மூடியபடி உள்ளம் குளிரக் கேட்பாளா? அல்லது முன்பு தயங்கியது போக இப்போது உண்மையாகவே துடுப்பை எடுத்து அடிக்க ஆரம்பித்து விடுவாளா?

"அந்தச் சீனக்காரியைப் பற்றி நீ எப்படித் தெரிந்துகொண்டாய், மும்தாஜ்?"

"பெண்களுக்குத் தோன்றும் உள்ளுணர்வு அது" என்றாள் அவள்.

3

இப்ராஹிமின் படகுவீடான 'காஷ்மீர் இளவரசி'யின் முன் அறையில் சியூமிங் தன் திட்டத்தை விவரித்துக் கொண்டிருந்தாள். பஷீரும் இப்ராஹிமும் கவனமாகக் கேட்டார்கள். அறைக்கு வெளியே நின்று அவர்களுக்குத் தெரியாமல் மும்தாஜும் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

தன் பையிலிருந்து ஒரு காமிராவை எடுத்துக் காட்டினாள் சியூமிங். அவள் உள்ளங்கை அகலத்துக்குப் பாதி அளவுதான் இருந்தது அது. "இந்தச் சின்னஞ் சிறிய காமிராவையும், இதோ இந்தக் காகிதங்களையும் யார் கண்ணிலும் படாமல் பத்திரமாக ராவல் பிண்டியில் நான் கொடுக்கும் விலாசத்தில் சேர்ப்பித்துவிட வேண்டும். ஒருவருக்கும் தெரியாமல் கள்ளத்தனமாகப் பொருள்களை இந்தியா - பாகிஸ்தான் எல்லைகளைத் தாண்டிக் கடத்திக்கொண்டு வருவது போலவே இதையும் சர்வ ஜாக்கிரதையாகச் செய்து முடிக்க வேண்டும்."

பஷீர் அந்தச் சின்னஞ்சிறிய காமிராவைக் கையிலெடுத்து வியப்புடன் பார்த்தான். சியூமிங் கொடுத்த காகிதங்களைப் பார்த்த போது அவன் வியப்பு மேலும் அதிகரித்தது. "இவற்றில் ஒன்றுமே எழுதப்படவில்லையே?" என்று கேட்டான்.

"இதையெல்லாம் பற்றி அதிகமாக நீங்கள் தெரிந்து கொள்ளாமல் இருப்பது உங்களுக்கு நல்லது. சொன்னதைச் சொன்னபடி செய்துவிடுங்கள். பாதிப் பணம் இப்போது 'அட்வான்'ஸாகத் தருகிறேன். பாக்கிப் பாதியும் காரியம் வெற்றிகரமாக முடிந்து நீங்கள் திரும்பியதும் தருகிறேன். அதுவரையில் இங்கேயே காத்திருக்கிறேன்."

பஷீரும் இப்ராஹிமும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். "எனக்கு முழு விவரங்களும் தெரிய வேண்டும். தெரியாத விஷயத்தில் நான் எப்போதும் தலையிடுவதில்லை" என்றான் பஷீர்.

"உங்களுடைய நன்மையைக் கருதித்தான் சொல்லாமல் இருந்தேன். கூறும்படி நிர்ப்பந்திக்கிறீர்கள். சொல்லி விடுகிறேன்" என்றாள் சியூமிங். அவள் சொன்னது இதுதான்:

பதன்கோட்டிலிருந்து ஸ்ரீநகர் வரும் வரையில் உள்ள ஏராளமான ராணுவ முகாம்கள் ஒவ்வொன்றையும் அவள் போட்டோ பிடித்திருந்தாள். ஜம்முவிலிருந்து ஸ்ரீநகர் வரையில் இருநூறு மைல் மலைப் பாதையில் உள்ள ஒவ்வொரு பாலத்தையும் புகைப்படம் எடுத்திருந்தாள். அயல் நாட்டுப் பெண்ணைப்போல் தோற்றமளித்ததால்உளவறியஅவளைத் தேர்ந்தெடுத்திருந்தார்கள். காஷ்மீருக்கு வரும் ஏராளமான அந்நியர்களில் ஒருத்தியாக அவளைக் கருதிச் சந்தேகிக்கமாட்டார்கள். விநோதமான பெயர் சூடி வேஷம் போட்டு நடிக்கவும் செய்தாள். அதில் அவளுக்குள்ள திறமையை அவள் கூறிய விவரங்களே வெளிப்படுத்தின.

அந்தச் சின்னஞ் சிறிய காமிராவினால் பஸ்ஸில் பிரயாணம் செய்தபடியே ஒருவருக்கும் தெரியாமல் புகைப்படங்கள் எடுப்பதும் அவளுக்குக் கடினமாக இல்லை. பஷீரிடம் அவள் கொடுத்த வெற்றுக் காகிதங்கள் உண்மையில் வெற்றுக் காகிதங்களே அல்ல. கண்ணுக்குப் புலப்படாத மையினால் ராணுவ முகாம்களைப் பற்றிய விரிவான குறிப்புக்கள் அவற்றில் எழுதப்பட்டிருந்தன. முகாம்களில் உள்ள சிப்பாய்களின் எண்ணிக்கை, யுத்த தளவாடங்

களின் அளவு, அனைத்தும் அந்தக் காகிதங்களில் எழுதப்பட்டிருந்தன.

வாயடைத்து நின்றுவிட்டார்கள் பஷீரும் இப்ராஹிமும். அதிர்ச்சி சற்றுக் குறைந்ததும், "உங்களை நாங்கள் காட்டிக்கொடுத்துவிட மாட்டோம் என்பது என்ன நிச்சயம்?" என்று கேட்டான் பஷீர்.

சிரூமிங் சிரித்தான் அலட்சியமாக. "இரண்டு நல்ல காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, உங்களுக்குள்ள பணத்தாசை. இரண்டு, என்னைக் காட்டிக் கொடுக்கப் போனால் உங்கள் கள்ளக்கடத்தல் வியாபாரங்களெல்லாம் அம்பலமாகி விடும்."

4

இரவு குளிர் சற்று அதிகமாக இருந்தது. பஷீருக்கும் இப்ராஹிமுக்கும் அது பழக்கம். சிரூமிங்குக்கு உடல் வெடவெடத்தது. சாப்பாட்டு அறையில் மேஜையைச் சுற்றி மூவரும் உட்கார்ந்திருந்தார்கள். பரிமாறிக் கொண்டிருந்த மும்தாஜ் சிரூமிங் நடுங்குவதைப் பார்த்து, "கம்பளிச்சால்வை எடுத்து வருகிறேன்" என்று கூறிவிட்டுப் போனாள்.

சிரூமிங்கின் அறையில் சால்வையை எடுத்துக் கொண்டு அவசரம் அவசரமாகத் தேட ஆரம்பித்தாள். அவள் தேடிய சின்னஞ்சிறிய காமிராவும் ரகசியக் காகிதங்களும் எளிதிலேயே கிடைத்து விட்டன. வெற்றிப் புன்னகையுடன் திரும்பிய அவளுக்குத் தன் கரத்தை இரும்பு இடுக்கியால் அழுத்தியது போன்ற வேதனை. 'சுளீர்' என்று சாட்டையால் அடிப்பது போல் தோள் பட்டையில் ஒரு வலி. காமிராவையும் காகிதங்களையும் பிடித்திருந்த அவள் வலது கரம் பின் பக்கமாக மடங்கிமுறுக்கோடுஒட்டி நின்றது. வேதனையும் ஆத்திரமும் ஒன்றுசேர, இடது கரத்தில் இருந்த சால்வையைக் கீழே போட்டுவிட்டு பஷீரின் மார்பை பலம் கொண்ட மட்டிலும் ஓங்கி ஓங்கிக் குத்தினாள் அவள். கல்தூணாக நின்று அத்தனையையும் மகிழ்ச்சியுடன் பெற்றுக் கொண்டான் பஷீர். "நினைத்தேன், நீ இதற்காகத்தான் வருவாய் என்று. சாயந்திரமே நாங்கள் பேசுவதையெல்லாம் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாயல்லவா?"

மும்தாஜின் வலது கைவிரல்கள் வலி தாங்காமல் நீண்டன. காமிராவும் காகிதங்களும் கீழே விரித்திருந்த ரத்தினக் கம்பளத்தில் விழுந்தன. இடது கரமும் சோர்ந்து போய்ச் செயலற்றுக் கிடந்தது. கால்கள் தண்ணீராகக் கரைந்து ஓட ஆரம்பித்தன. மூச்சு வாங்க, நெஞ்சு விம்ம நிற்கமுடியாமல் தலை கவிழ்ந்தாள் அவள். பஷீரின் அகன்ற தோள்கள் ஆதரவாக இருந்து அவளை ஆசுவாசப் படுத்தின.

வாசற்படியில் நின்று கைதட்டிக் குதூகலித்துக் கேட்டான் சிரூமிங்: "பேஷ்! அதற்குள் ஒரு குட்டிக் காதல் நாடகமா?"

சடாரென்று ஒரு உதறல் உதறித் தன்னை விடுவித்துக் கொண்டு விட்டாள் மும்தாஜ். வெறுப்பைக் கக்கும் கண்களால் சிரூமிங்கை ஒரு முறை பார்த்துவிட்டு வேகமாகச் சமையலறைக்குச் சென்று விட்டாள்.

அங்கே சென்ற பிறகு வெட்கத்தால் அவள் பட்டுக் கன்னங்கள் காஷ்மீரத்து ஆப்பிள் கனிகளாகச் சிவந்து போயின. 'அதற்குள் அந்தப் பாழாய்ப்போன சிரூமிங் ஏன் அங்கு வந்து தொலைக்க வேண்டும்?'

வலது கரத்தில் அவனுடைய முரட்டுப் பிடியினால் ஏற்பட்ட வலி ஓயவில்லை. படபடத்த இதயம் இன்னும் அடங்கவில்லை. இரண்டுமே அவளுக்கு வேதனை அளிக்கவும் இல்லை. பஷீரிடம் அவள் முன்பு கொண்டிருந்த வெறுப்பு எங்கே? இரண்டு நாட்களில் அது எப்படி அன்பாக மாறிவிட்டது? திடீரென்று ஏற்பட்ட மாறுதல் இல்லை அது. அவனிடம் எப்போதுமே இருந்து வந்த அன்புதான். அவளுக்கே தெரியாமல்அது மூடி மறைந்து கிடந்தது. சட்ட விரோதமான செயல்களில் அவன் ஈடுபட்டிருந்ததால் ஏற்பட்ட வெறுப்பினால். இப்போது வெறுப்பு அடித்தலத்துக்குப் போய்விட்டது. அன்பு மேலோங்கி வெறுப்பை மூடி மறைத்து விட்டது!



5


"என் இதயம் உங்கள் காலடியில் கிடக்கிறது. அதை உதைத்துத் தள்ளி விட்டுப் போங்கள் ராவல் பிண்டிக்கு." பஷீரிடம் மன்றாடினாள் மும்தாஜ்.

"உதைத்துத் தள்ளவில்லை, மும்தாஜ், உள்ளத்துள் பூட்டி வைக்கிறேன்."

"அப்படியானால் நீங்கள் போகக் கூடாது. உங்களுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தால் என்னால் தாங்க முடியாது."

"நான்போகத்தான்வேண்டும், மும்தாஜ்!"

"பணம்! பாழாய்ப்போன பணத்தாசை உங்களைப் பிடித்து ஆட்டுவிக்கிறது. சட்ட விரோதமான செயல்களில் இதுவரை ஈடுபட்டீர்கள். இப்போது தேசத்துரோகமே செய்யத் துணிந்து விட்டீர்கள். நீங்கள் செய்யப் போகும் காரியத்தின் பயங்கரத் தன்மையை உணர்ந்தீர்களா? யுத்தம் என்று வந்து விட்டால் பாகிஸ்தான் விமானங்கள்



''என்னைப் பார்த்து நாற்பது வயதுக் கிழவி மாதிரி இருக்கேன்னு சொன்னேளே !''

'' அசடு! அசடு! இப்பவா சொன்னேன்? எப்பவோ சொன்னதை இன்னும் மனசிலே வைச்சுக்கிட்டு.....!''

முதன் முதலில் பாலங்களைத்தான் குண்டு போட்டுத் தகர்த்தெரியும். போக்குவரத்து ஸ்தம்பித்துப் போகும். காஷ்மீரத்திலிருந்து யாரும் வெளியேற முடியாது. காஷ்மீரில் உள்ளவர்களுக்கு வெளியேயிருந்து யாரும் உதவவும் முடியாது. உணவு, உடை, மருந்துகள், யுத்த தளவாடங்கள், போரிடச் சிப்பாய்கள் எதுவுமே காஷ்மீரத்துக்கு வர முடியாமல் போகும். காஷ்மீரை அடைய இந்த மலைப்பாதையைத் தவிர, வேறு வழியே கிடையாது அல்லவா ? அடுத்த குறிக்கோள் ராணுவ முகாம்களாக இருக்கும். வெற்றிக்கு இந்த விவரங்களெல்லாம் எவ்வளவு அவசிய மென்று தெரிகிறதா ? உளவறிய வந்தவ ளுக்கு உதவிபுரிய வெட்கமாயில்லே ?''

'' இந்தியாவைச் சேர்ந்த காஷ்மீரானால் என்ன ? பாகிஸ்தானைச் சேர்ந்ததானால் என்ன ? உனக்கும் எனக்கும் என்ன வந்தது? நமக்கு வேண்டியது இந்த தால் ஏரி, காஷ்மீர் இளவரசி, வெள்ளிப் பனிமலைகள், அழகழ கான மலர்கள், நிலவு, தென்றல், அமைதி— அந்த அமைதியிலே காணும் ஆனந்தம்; அதற்குத் தேவையான பணம்....''

'' 'எது எப்படிப் போனால் என்ன ? நமக்கு என்னத்துக்கு வம்பு ?' என்று ஒதுங்கி இருப்பது தவறு. ஏதாவது ஒரு பக்கத்தில் இருக்க வேண்டும். நாம் நம்பிக்கை வைக்கும் அந்த முடிவுக்காக உழைக்க வேண்டும். உயிரைக் கொடுத்தாவது உழைக்கத்தான் வேண்டும்'' என்றாள் மும்தாஜ்.

நிலவு காய்ந்து கொண்டிருந்தது. சமைய லறையின் ஜன்னல் பக்கமாகத் தன் ஷிகாரா வைக் கொண்டு வந்து நிறுத்தினான் பஷீர். '' மும்தாஜ் ! உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும். ஷிகாராவில் ஏரியை ஒரு முறை சுற்றி வருவோமா ?''

முன்போல் அவளைப் பலவந்தமாக இழுத்துச் செல்ல வேண்டிய அவசியம் அவனுக்கு ஏற்பட வில்லை. அவளே ஆவலுடன் ஷிகாராவில் ஏறிக் கொண்டாள். பஷீருடன் படகில் உல் லாசமாகச் செல்வது இதுவே கடைசி முறை யாகவும் இருக்கலாமல்லவா ?

நிலாவையும் மும்தாஜின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்து அனுபவித்தான் பஷீர்.

''முக்கியமான விஷயம் என்றீர்களே ?''

'' பார்த்தாயா ! உன்னையும் நிலாவையும் கண்டதும் அதை மறந்தேவிட்டேன்.

'' மும்தாஜ் ! உன் விருப்பம் நிறைவேறி விட்டது. நான் மனத்தை இப்பொழுது மாற்றிக்கொண்டு விட்டேன்.''

'' என்ன ? என்ன ?'' மும்தாஜ் அலறிப் புடைத்துக்கொண்டு எழுந்தாள்.

'' உனக்காக மனம் மாறவில்லே. எனக்கே நான் செய்யும் காரியங்கள் தவறு, தேசத் துரோகமானவை என்று தோன்றிவிட்டது. உன் அப்பாவின் மனத்தையும் மாற்றிவிட் டேன். அந்தச் சிங்காரி ஜெமீல் கொடுத்த பணத்தை அவளிடமே திருப்பிக் கொடுத்துத் துரத்தி அடித்துவிட்டு, அவள் காமிராவை இந்தத் தால் ஏரியின் அடிவாரத்தில் போட்டு விடலாம். அவள் கொடுத்த ரகசியக் காகிதங் களை உன்னிடம் தருகிறேன். நீயே அவற்றை அடுப்பில் போட்டு எரித்துவிடு !''

ஆடாமல் அசையாமல் நின்று கேட்ட மும்தாஜ், மண்டியிட்டு உட்கார்ந்து கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். உடல் குலுங்கக் கேவிக் கேவி அழுதாள்.

பதறிப் போனான் பஷீர். அருகே நெருங்கி வந்து, முதுகைத் தடவிக் கொடுத்தபடியே, '' என்ன மும்தாஜ் ? எதற்கு அழுகிறாய் ?'' என்று ஒன்றும் புரியாமல் கேட்டான்.

விம்மல்களுக்கிடையே அவள் நாத்தழ தழக்கப் பதில் சொன்னாள் :

'' உங்கள் மனமாற்றம் அரைமணி நேரத் துக்கு முன்பு ஏற்பட்டிருக்கக் கூடாதா ? அரைமணி நேரத்துக்கு முன்புதான் நான் போலீஸாரிடம் எல்லா விவரங்களையும் கூறி னேன். எனக்குத் தெரிந்ததை யெல்லாம் வாக்குமூலமாக எழுதிக் கையெழுத்தும் போடச் சொன்னார்கள், போட்டேன். இப் போது உங்கள் மனம் மாறி யிருக்கிறது !''

பஷீரின் கண்களுக்கெதிரே ஷிகாராவும், தால் ஏரியும், படகு வீடுகளும், வெள்ளிப் பனிமலைகளும் அலைகளாக எழும்பி விழுந்தன.

ஏரியின் மறுகரையில் ஜீப் ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து போலீஸார் 'திபுதிபு' வென்று ஷிகாராக்களில் ஏறிக்கொண்டு தால் ஏரியைக் கடந்து 'காஷ்மீர் இளவரசி'யை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

சில நிமிஷங்களுக்கெல்லாம் தவற்றை உணர்ந்து திருந்திவிட்ட காதலனையும் தகப்ப னையும் போலீஸார் இழுத்துச் செல்வதைக் கண் ணீர்த் திரையினூடே கண்டாள் மும்தாஜ்.


தரத்திற்கும்
உறுதிக்கும்
நிகரற்றது
ஹத்திபாயின்
தராசு மார்க்
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
பாத்திரங்கள்
உத்திரவாதமுள்ளவை
எப்பொழுதும் பிரகாசத்துடன், நீடித்து உழைப்பவை
ஹத்திபாய் துளஸிதாஸ் & ஸன்ஸ்
122, களஸரா சால், பம்பாய் 2.

ஊமைக் காதல்

நிர்மல்

நெல்லை எக்ஸ்பிரஸில் அன்று எக்கச்சக்கமான கூட்டம். திருநெல்வேலி ஜங்ஷனிலேயே நான் ஏறியிருந்த பெட்டி நிறைந்திருந்தது. அவசரமாகச் சென்னைக்குத் திரும்ப வேண்டியிருந்ததால் என்னால் எந்த வகுப்புக்கும் முன்னாலேயே 'ரிசர்வ்' செய்து வைக்க முடியவில்லை. எப்படியாவது கிளம்பிப் போவோம் என்ற எண்ணத்தில் மூன்றாம் வகுப்பிலேயே ஏறி வந்தேன். என் வரையில் சௌகர்யமான இடம் கிடைத்தது.

மதுரை வருவதற்கு இன்னும் அரை மணி நேரம் இருக்கும். வண்டி அசுர வேகத்தில் பறந்து கொண்டிருந்தது.

ஐந்து வருடங்களுக்கு முன் நான் இந்த மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களில்....

ராமநாதபுரம்!

ஐயோ! இன்னும் என்னால் மறக்க முடியவில்லை.

எதை?

ராமநாதபுரத்தை மட்டும் அல்ல!

அவளைக் கூடத்தான்...!

அப்போது நான் மின்சார இலாக்காவில் ஜூனியர் என்ஜினீயராகப் பணி புரிந்து வந்தேன்.

கல்லூரியிலிருந்து வெளிவந்து ஆறு மாதங்களுக்குள்ளாக மதுரை மாவட்டத்தில் சில ஊர்களில் என்னுடைய சேவை தொடங்கியது. அதற்குப் பின்னர் ராமநாதபுரத்துக்கு மாற்றப்பட்டேன்.

ஊருக்கு வந்த இரு வாரங்களுக்குள்ளாக என் மனத்துக்கேற்ற இளவட்ட நண்பர்கள் கிடைத்தனர். நாங்கள் நால்வர் மணமாகாத இளைஞர்கள். குடும்பத் தொல்லை கிடையாது. உயர்ந்த பண்புள்ளங்கள்.

கேட்க வேண்டுமா, எங்கள் வாழ்க்கையை? என்றும் உல்லாசம்! எங்கும் இன்பம்!

''வாழ்க்கை இப்படியே இருக்கக்கூடாதா?'' என்று நாங்கள் எல்லோரும் நினைத்தபோது தான் அவர்கள் எங்களுடைய வாழ்க்கையில் குறுக்கிட்டனர்.

அதாவது என்னைப் பொறுத்த வரையில்...

பத்மினி!

எங்களுடைய துப்புத் துலக்கும் திறனைப் பற்றியெல்லாம் உங்களுக்கு விளக்கிக் கொண்டிருக்கத் தேவையில்லை. என் நண்பர்களில் ஒருவனான கிருஷ்ணன் ஒரு பாங்க் அக்கௌண்டண்டாகப் பணியாற்றி வந்தான். கதை ஆரம்பமாகியதே அவனால்தான்.

மல்லிகா, சரளா, சாவித்திரி, பத்மினி இவர்கள் நால்வரும் பெண் பள்ளியொன்றில் ஆசிரியைகள்.

நாங்கள் நான்கு நண்பர்கள் எப்படி ஒரே வீட்டில் வாழ்க்கையைத் தள்ளிக் கொண்டு வந்தோமோ, அதே போல் அவர்களும் நடத்தி வந்தார்கள்.

நால்வரும் வெவ்வேறு ஊர்தாம். எப்படியோ அந்த ஊரில் புத்திசாலித்தனமாகத் தங்களுக்குள்ளாகவே 'மெஸ்' ஒன்றை நடத்திக்கொண்டு வந்தனர். அவ்வப்போது தங்கள் சேமிப்பை நண்பன் கிருஷ்ணன் பணி புரியும் 'பாங்கி'யில்தான் போட்டு வருவார்கள்.

கிருஷ்ணனின் மனம் மல்லிகாவை நாடியது. அவ்வளவுதான் விஷயம். இன்னும் காதல் தரு வளரச் சந்தர்ப்பமே எழவில்லை.

இந்த நிலையில் நாங்கள் நால்வரும் அடிக்கடி அவர்களை எங்கேயாவது எதிர்பாராமல் சந்தித்து வரத் தலைப்பட்டோம்.

விஷயம் இன்னும் கொஞ்சம் வளர்ந்தது. வெறும் கண் பார்வைகள் பேசிக் கொண்டன.

நண்பன் மூர்த்தியின் மனம் சரளாவை நாடியது. வெங்கட்டின் உள்ளம் சாவித்திரியைத் தேடியது. நான்...

கேட்க வேண்டுமா?

அவளை முதல் முறை நான் பார்த்தபோதே புரிந்து கொண்டேன்.

எங்கள் நால்வரின் மனப்போக்கு எப்படியோ அதேதான் அவர்களுடையதும்!

அவள் என்னைப் பார்க்கும் போதெல்லாம் நானும் கூர்ந்து கவனிப்பேன்.

சந்தேகமே இல்லை! அவள் என்னை நிச்சயம் காதலிக்கிறாள்.

நகரசபைத் தேர்தல் வந்தது. என்னைத் 'தலைமைத் தேர்வு அதிகாரி'யாக நியமித்தனர். உத்தரவை வாங்கிப் பார்த்தேன்.

என்ன ஆச்சரியம்!

என்னுடைய வட்டத்தில் எனக்குக் கீழாக பணிபுரிய வருபவர்களுள் பத்மினியும் ஒருத்தி.

சர்க்காரை வாயார வாழ்த்தினேன். நண்பர்கள் என்னை வாழ்த்தினர். அதோடு 'நாங்களும் சர்க்கார் உத்தியோகத்தில் இல்லாமற் போனோமே' என்று மனம் வருந்தினர்.

பத்மினியின் தோழிகளுக்கும் இது தெரிந்திருக்க வேண்டும். முதல் நாள் மாலையே என்னைக் கண்டதும் அவர்கள் முகத்தில் ஓர் அர்த்தபுஷ்டியான புன்னகை!

தேர்தலைச் சாக்காகக் கொண்டு நானும் பத்மினியும் நெருக்கம் கொண்டிருப்போம் என்று எண்ணினார்கள் நண்பர்கள்.

''என்ன இது! பத்மினி உன்னோடு பேச மாட்டாளா, என்ன?'' என்று நண்பர்கள் கேட்டார்கள்.

''நண்பர்களே! இது நடுத்தெரு. மேலும் நாம் வழக்கம்போல் கும்பலாகவே வருகிறோம். தனியாகச் சந்தித்தால்தான் அவள் பேசுவாள்!'' என்றேன்.

''நீமட்டும் தனியாகப் போனால் போதுமா? உன் பத்மினியும் தனியாக வந்தால் தானே பேசலாம்!'' என்றான் மூர்த்தி.

''ஆமாம்! அதுவரையில் காத்திருக்கத் தான் வேண்டும்!'' என்றேன் நான்.

அதற்கப்புறமும் அடிக்கடி நாங்கள் எத்தனையோ முறை சந்தித்துக் கொண்டோம்.

ஆனால், அந்த மற்றச் சனியன்களும் அவள் கூடவே அல்லவா வருகின்றனர்.

என் துரதிருஷ்டம்! பத்மினியும், நானும் தனிமையில் சந்தித்துக் கொள்ளும் பாக்கியம் கிட்டவே இல்லை.

''ஒருவேளை அவளுக்குக் கடிதம் எழுதிப் போட்டால்...?'' என்று வேங்கட் யோசனை கூறினான்.

''காரியம் கெட்டுவிடும்! எப்படியாவது நாங்கள் விரைவில் தனிமையில் சந்திப்போம்'' என்றேன் நான்.

நண்பர்கள் பொறுமை இழந்தனர். இந்த நிலையில் நாங்கள் இவ்வளவு நாளும் நினைக்காத 'கோடை விடுமுறை' வந்தது.

நான்கு பெண்களும் ராமநாதபுரம் ரயில்வே நிலையத்தில் நிற்பதைப் பார்த்தேன். ஆபீஸ் விஷயமாக அருகிலுள்ள ஊருக்குச் சென்று விட்டு அப்போதுதான் இறங்கினேன்.

எதிரே கையில் பெட்டி, படுக்கைகளுடன் பத்மினி நின்றுகொண்டிருந்தாள். அவளுடன் பேச என் வாய் துடித்தது. சுற்றிப் பார்த்தேன். அருகிலேயே அவள் சிநேகிதிகள் பரிகாசமாக எங்கள் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தனர்.

மீண்டும் இதே சனியன்கள்தானா?

தலையில் அடித்துக் கொண்டு நான் நடந்தேன். சற்றுத் தூரம் போன பின் ஒரு முறை திரும்பினேன். பத்மினி என்னையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''பத்மினி! நாம் இன்னுமா ஊமைக் காதலர்களாக இருக்க வேண்டும்?'' என்று மனத்தில் கேட்டுக் கொண்டேன்.

அதற்கு அடுத்த வாரம் மற்றவர்கள் எதிர் பாராத, ஆனால் நான் நெடுநாளாக எதிர் பார்த்துவந்த ஒன்று நடந்து விட்டது.

சென்னையில் ஒரு கம்பெனியிலிருந்து நல்ல வேலைக்கான உத்தரவு எனக்கு வந்தது.

இனி ராமநாதபுரம் அவ்வளவுதான்! சர்க்கார் உத்தியோகமும் அவ்வளவுதான்!

நண்பர்கள் வருத்தத்துடன் வாழ்த்தினர்.

''அரைகுறைக் காதலுடன் பிரிகிறாயே! நீ பத்மினியிடம் கொண்ட காதல் என்ன ஆவது?'' என்றான் கிருஷ்ணன்.

''பத்மினி! அவளை நான் எப்படி மறப்பேன்? இதோ பாருங்கள். இங்கிருந்த போதுதான் அவளைத் தனிமையில் பார்க்கவும் முடியவில்லை; கடிதம் எழுதுவதும் சரியாகப் படவில்லை. இனி அப்படியில்லை. சென்னைக்குப் போகிறேன். பத்மினி கோஷ்டியினர் திரும்பியதும் எனக்கு எழுதுங்கள். நான் பத்மினிக்கு நிஜமாகவே என் உள்ளத்தைத் திறந்து காட்டிக் கடிதம் எழுதுகிறேன். அதற்குப் பிறகு உங்கள் காதலும் நிறைவேறி விடும்'' என்றேன்.

''சரி, போய் வா!'' என்று பிரியா விடை கொடுத்து அனுப்பினர் நண்பர்கள்.

ஒன்றரை மாதம் ஓடியது. பத்மினி கோஷ்டியினர் ஊர் திரும்பிவிட்டதை என் நண்பர்கள் அறிவித்தனர்.

உடனே என் காதலைத் தெரிவித்து அவள் சம்மதத்தைக் கோரிக் கடிதம் எழுதிப் போட்டேன்.

இரு நாட்கள் கழிந்தன. பதில் இல்லை. இரு மாதங்கள் கழிந்தன. பதில் இல்லை.

என்ன பேரிடி!

அப்படியானால் பத்மினி என்னைக் காதலிக்கவில்லையா?

அவள் கண்களில் நான் அவ்வப்போது கண்ட......

என்ன பைத்தியக்காரத்தனம்! நிச்சயம் அவள் என்னைக் காதலிக்கவில்லை. அவ்வளவுதான்!

நண்பர்களுக்கு எழுதினேன். நடந்ததை மறந்தார்கள். நாளடைவில் பிரிந்தார்கள்.

கிருஷ்ணன்எங்கேயோ? மூர்த்தி எங்கேயோ? வேங்கட் எங்கேயோ?

ஆனால் பத்மினி!

அவள் எங்கேயும் போகவில்லை! சதா என் உள்ளத்திலேயே இருக்கிறாள்!

என் நினைவு அலைகள் சட்டென்று ஓய்ந்தன. சுற்று முற்றும் பார்த்தேன். எதிரே சில பிரயாணிகள் சுவாரசியமாக எதை எதையெல்லாமோ பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.

''என்ன ஆச்சரியம் ஸார் இது! பேப்பரில் போட்டிருக்கிறான். ஐந்துவருஷங்களுக்கு அப்புறம் போட்டவருக்கே ஒரு கார்டு திரும்பி வந்திருக்கிறதாமே.....''

''ஐந்து வருஷங்கள் என்ன? ஏழு வருஷங்களுக்கப்புறம் ஒரு கவர் வந்ததாகப் போன வாரம் கூடச் செய்தி வந்திருந்ததே!''

''அப்போதாவது வந்திச்சே ஸார்! பத்து வருஷங்களுக்கு முந்தி நான் என் மவனுக்குப் போட்ட கடிதம் இன்னும் வந்தபாடில்லையே! எப்படி இருக்கு தபால்காரங்க ராஜ்யம்!''

''ஸார்! அவங்க மேலே குற்றம் சொல்வதற்கில்லை. ஏதோ அகஸ்மாத்தாக அபூர்வமாக இப்படி எல்லாத் தேசத்திலும் நடப்பதுண்டு!''

எனக்குச் சிரிப்பு எழுந்தது. நான் பத்மினிக்கு எழுதிய கடிதம் என் கருத்தில் நிறைந்து நின்றது.



ஐந்து வருஷங்களாகியும் இன்னும் அவளிட மிருந்து பதில் வந்தபாடில்லை! இது தபால் இலாக்காவின் குற்றமா, என்ன?

எல்லாம் என் தவறு!

இல்லாத காதலை இயங்க வைக்கப் பார்த்தது எவ்வளவு பெரிய குற்றம்? பத்மினி என்னைப் பற்றி என்னென்ன நினைத்தாளோ? அப்போதே அவள் சிநேகிதிகள் தனிமையில் என்னைப் பார்க்க நேர்ந்தால் பரிகசித்துக் கொண்டே போவார்கள். இப்போது!...

ஒரு பெருமூச்சு வந்தது.

ஏறுபவர்களும் இறங்குபவர்களும் வண்டியில் அமர்க்களப்படுத்திக்கொண்டிருந்தனர்.

எனக்குள்ள இடத்தை இன்னும் கொஞ்சம் விசாலப்படுத்திக் காலை நீட்டிக் கொண்டேன்.

'இங்கே இறங்கினால் ஆபத்து. திண்டுக்கல்லில் இறங்கிச் சாப்பிட்டுக் கொள்ளலாம்' என்பது என் முடிவு.

வண்டியில் போதுமானதற்கு மேலாகப் பிரயாணிகள் ஏறிவிட்டனர்.

திடீரென்று நான் ஓரமாக உட்கார்ந்திருந்த ஜன்னல் வழியாக 'ஹோல்டால்' ஒன்று உள்ளே நுழையப் பார்த்தது. எதிரே ஒரு பெரியவர்.

"ஸார்! மன்னிக்கணும்! பெண்கள் வண்டியில் இடமே இல்லை. என்னுடைய தம்பி பெண். கைக் குழந்தையுடன் தவிக்கிறாள். சென்னைக்குப் போக வேண்டும். நீங்கள் தயவுசெய்து கொஞ்சம் ஒதுங்கினால்...." என்றார் பெரியவர்.

"ஒதுங்கினாலா? ஒடுங்கினாலா?"

பெரியவர் சிரித்து விட்டார். அப்போது அவர் அருகில் கையில் குழந்தையுடன் ஒரு பெண்மணி அவசரமாக வந்து நின்றாள்.

"பெரியப்பா! எங்கேயும் இடம் இல்லை. ஐயோ! அவர் என்னை நிச்சயம் நாளைக்கு வரச்சொல்லி யிருக்கிறாரே..."

ஏதோ பழகிய குரல்! எதிரே நோக்கினேன். என் நெஞ்சம் வெடித்தது.

பத்மினி!

ஆம், அவளேதான்!

எனக்கு உலகமே இருண்டது. என்னையறியாமல் என் வாய் அசைந்தது.

"ஸார்! பரவாயில்லை. உங்கள் பெண்ணுக்கு இங்கே சௌகர்யமாக இருக்கும் என்று தோன்றினால் உள்ளே வரச் சொல்லுங்கள்" என்றேன்.

உரிமையுடன் ஹோல்டாலை உள்ளே வாங்கி வைத்துக் கொண்டேன். ஐந்து நிமிஷப் போராட்டத்துக்கப்புறம் பத்மினி உள்ளே ஏறிக் கொண்டாள்.

பெரியவர் சொன்னபடி ஒதுங்கிக்கொண்டு அவளுக்கு உட்கார வசதி செய்து கொடுத்தேன். "மிகவும் நன்றி!" என்றவாறு அவள் என்னை நிமிர்ந்து நோக்கினாள்.

அடுத்த கணம் அவள் கண்கள் கலங்கின. ஐந்து வருஷங்களுக்கு முன் கண்ட அதே கண்கள்தான்!

'ஐயோ, பத்மினி! ஏன் நீ இந்தப் பெட்டியில் ஏறினாய்? உனக்கு வேறு எங்கேயும் இடம் கிடைக்க வில்லையா?'

என் மனம் பதைபதைத்தது. இருவர் உதடுகளும் துடிதுடித்தன. ஏதோ பேச வேண்டும் என்ற எண்ணம் இருவருக்குமே எழுந்தது. ஆனால்....

பத்மினி சட்டென்று வெளியே நோக்கினாள். அவள் கையிலிருந்த பாலகன் பெரியவரிடம் ஏதோ மழலை பொழிந்து கொண்டிருந்தான்.

"டேய், ராஜா! அப்பாகிட்டே போறயாடா! போய் வாடா. அம்மா பத்மினி! குழந்தையை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். பாவம்! ஸாருக்கு ரொம்பச் சிரமம். பத்மினி! உன் புருஷனிடம் சொல். அடுத்த வாரம் முடிந்தால் நான் சென்னைக்கு வந்து சேருகிறேன்."

பெரியவர் இன்னும் ஏதேதோ பத்மினியிடம் பேசினார்.

சில நிமிஷங்களில் மணி அடித்தது. வண்டியும் ஒரு பெருமூச்சு விட்டுவிட்டுக் கிளம்பியது.



மீண்டும் பத்மினி என்னைப் பார்த்தாள். அவள்தான் என்னைக் காதலிக்கவில்லையே! காதலித்திருந்தால் என் கடிதத்துக்குப் பதில் போட்டிருக்க மாட்டாளா?

அவள் மனத்தை அறியவே முடியவில்லையே! ஏன்? இப்போது முடியாதா, என்ன?

நான் விரும்பிய தனிமை!

தனிமையா?

சுற்றிலும் பிரயாணிகள். எனக்கும் பத்மினிக்கும் இடையில் அவள் குழந்தை ராஜா இருந்தான்!

எது எப்படியிருந்தால் என்ன? இப்போது மல்லிகா இல்லை. சரளா இல்லை. சாவித்திரி இல்லை. பாழாய்ப் போன அந்த மூன்று சனியன்களும் இல்லை. இதுதான் சந்தர்ப்பம்.

இருவரும் ஒரு முறை பார்த்துக் கொண்டோம். நான் துணிந்து விட்டேன்.

"நீங்கள்...நீங்கள்...பத்மினிதானே!"

"ஆமாம். நீங்கள் எலெக்ஷன்..."

"ஐயோ, நானேதான்! நினைவி க்கிறதா?"

"எனக்கு இருக்கிறது. உங்களுக்கு?"

"எனக்கும் இருக்கிறது. இன்றல்ல, என்றென்றும் இருக்கிறது!" — படபடப்பாக வார்த்தைகள் வெளிவந்தன.

அவள் கண்கள் கலங்கின. என் கண்களும் என்னை யறியாமல் கலங்கின.

"பத்மினி! ஒன்று கேட்கிறேன், பதில் சொல்வீர்களா?"

பத்மினி நிமிர்ந்தாள்.

"என்ன கேட்கப் போகிறீர்கள்?"

"நீங்கள்...நீங்கள்...என்னை நிச்சயமாகக் காதலிக்கவில்லையா?"

"ஐயோ, இது என்ன கேள்வி?" பத்மினி குழந்தையை அணைத்துக் கொண்டு நடுங்கிய குரலில் தொடர்ந்தாள். "நீங்கள்...நீங்கள்... என் கடிதத்தைப் படிக்கவில்லையா?"

நான் திடுக்கிட்டேன்.

"என்னது? உங்கள் கடிதமா?"

"ஆமாம்! என் கடிதம்...அதாவது உங்கள் கடித்துக்குப் பிறகு நான் எழுதிய பதில் கடிதத்தை...!"

"ஹா! நிஜமாகப் பதில் எழுதினீர்களா?"

"நிச்சயமாக எழுதினேன். ஏன்? உங்களுக்கு வந்து சேரவில்லையா? நீங்கள் எழுதியிருந்தபடி சென்னை விலாசத்துக்குத்தானே எழுதியிருந்தேன்...."

"ஐயோ! அப்படி எதுவுமே எனக்கு இது வரையில் வரவில்லையே....பதில் வராததால் என்மேல் உங்களுக்குப் பற்றுதல் இல்லை என்று தீர்மானித்து விட்டேனே!"

"ஐயோ! என் கடிதத்துக்குப் பின்னர் நீங்கள் பதில் போடுவீர்கள் என்று நானும் எதிர்பார்த்தேன். ஒன்றும் வராததால் என் மேல் உங்களுக்கு இருந்த பற்றுதல் அவ்வளவு தானு ்கும் என்று தீர்மானித்து விட்டேன்.... நீங்களாவது இரண்டாவது முறை கடிதம் போட்டிருக்கக் கூடாதா?"

"பத்மினி! நீங்கள்தான் அம்மாதிரி செய்திருக்கக் கூடாதா?"

அப்போது அவள் மடியிலிருந்த பாலகன் பலமாக அழ ஆரம்பித்தான்.

"மன்னிக்க வேண்டும்! நடந்ததை மறந்து விடுங்கள். நான் இப்போது இந்தக் குழந்தையின் தாயார்."

பத்மினி முடித்து விட்டாள்.

என்னால் அவ்வளவு எளிதில் முடித்துக் கொள்ள முடியவில்லை.

ஊமைக் காதல் ஊமைக் காதலாகவே முடிந்தது என் குற்றமா? பத்மினியின் குற்றமா? தபால் இலாகாவின் குற்றமா?

என் தலை சுழன்றது.

மறுநாள் காலை பத்துமணி. குளித்துவிட்டு ஏதோ எழுதிக் கொண்டிருந்தேன்.

"ஸார் தபால்!" என்றவாறு குரல் எழுந்தது. ஆவலுடன் வந்த கவரைப் பிரித்தேன். உள்ளே மணி மணியான எழுத்தில் கடிதம்.

'உங்கள் கடிதம் கிடைத்தது.

நீங்கள் எப்படி மௌனமாகவே காதல் உணர்ச்சியில் தவிக்கிறீர்களோ, அதுபோலவே நானும் தவிக்கிறேன். இப்போதாவது நம் உள்ளங்கள் பரிமாறப்பட்டதை நினைத்து மகிழ்கிறேன்.

நாம் இருவரும் தனிமையில் சந்தித்துப் பேச இதுவரையில் சரியான சூழ்நிலை கிடைக்காதது பற்றி நான் சதா வருந்திக் கொண்டிருந்தேன். நீங்கள் எழுதிய கடிதம் என் இதய ஊற்றைச் சுரக்கச் செய்துவிட்டது.

நீங்கள் விரும்பிய வண்ணம் நான் உங்களை மணக்கச் சித்தமாயிருக்கிறேன். இதற்குமேல் குடும்பப் பெரியவர்கள் மூலம் விஷயத்தைத் தெரிவிப்பதையே நான் விலாகிக்கிறேன்.

இப்படிக்கு,

பத்மினி'

'பி. கு. நான் எப்படி இந்த மௌன நாடகத்தில் தவிக்கிறேனோ, அது போலவே என் மூன்று தோழியர்களும் தவிக்கின்றனர். நீங்கள் நன்கு விஷயமறிந்தவர். இதை உங்களது நண்பர்களுக்கு உடனே உணர்த்தவும். தனிமைச் சந்திப்பை எல்லோருமே எதிர்பார்த்துக் கொண்டு ஏமாந்து நிற்கின்றனர். நீங்கள்தான் உதவ வேண்டும்.'

அடுத்த கணம் எனக்கு உலகமே சுழன்றது.

கடிதத்தை மீண்டும் படித்தேன். சரியாக ஐந்து வருஷங்களுக்கு முன்னால் எழுதப்பட்டிருந்த கடிதம்.

கவரை எடுத்துப் பார்த்தேன். அதில் இன்ன தேதி, இன்ன இடம் என்று எதையுமே கண்டுபிடிக்க இயலவில்லை. எக்கச்சக்கமான முத்திரைகள் என்னைப் பார்த்து இளித்துக் கொண்டிருந்தன.

எப்படியோ என் பெயரும், விலாசமும் கண்ணைச் சிமிட்டிக் கொண்டிருந்தன.

நீங்களே சொல்லுங்கள்.

என் காதல் ஊமைக்காதல்தானா?

ஊமைக் காதலாகவே இருக்கட்டும்! அது என் தவறா? அல்லது பத்மினியின் தவறா? என் நண்பர்களின் தவறா? பத்மினியின் தோழிகளின் தவறா?

இல்லை! நிச்சயம் இல்லை!

அப்படியானால் அது தபால் இலாக்காவின் தவறா? இல்லை. அதுவும் இல்லை. கண்ணுக்கும் கருத்துக்கும் புலனாகாத விதியின் தவறேதான்!

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs. Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk Madras-10
Managing Editor, T. Sadasivam.



சிறு குழந்தையும் அறிந்த உண்மை...

ரின்ஸோ வெளுப்பது அதிவெண்மை

விவேகமுள்ள தாய்மார்கள் சலவைக்கு உபயோகிப்பது ரின்ஸோ. வெள்ளைத் துணிகளை அதிவெண்மையாகவும் வர்ணத் துணிகளை அதிகப் பிரகாசமாகவும் வெளுக்கும் சோப் பவுடர் அதுதான். சக்தி வாய்ந்த ரின்ஸோவின் நுரை, மறைந்துள்ள அழுக்குகளையும் அறவே அகற்றிவிடுகிறது. ரின்ஸோ சலவை யென்றால் உங்களுக்கு வேலையும் இலகுவாவதோடு நேரமும் மிச்சம். குடும்பத்தின் சகல துணிகளுக்கும் ரின்ஸோ உபயோகியுங்கள்.



உங்கள் வேலையை இலகுவாக்குவதற்கென்றே

தயாரிக்கப்பட்ட அற்புத சோப் பவுடர்

R. 18-50 TM

ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

